நன்றி - நூலகத்திட்டம்


சரිනිහර
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-172 மே 27- ஜூன் 09, 1999 விலை ரூபா 10/-




## கொழும்பிலிருந்து தமிழர்களை வெளியேற்றுவோம்..!

-சிங்கள வீர விதான




## இந்தியா:

## சரிந்து செல்லும் காங்கிரஸ்! மீண்டும் உயிர்த்தெழுமா?

"நீங்கள் மக்கள் மீது குண்டுகளை வீசிக் கொண்டிருக்கையில் அவர்கள் உங்கள் மீது பூக்களையா வீசப் போகிறார்கள்?"

-நோம் சொம்ஸ்கி



நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா :

## அரசியல் போட்டியில் மறந்துபோன தலைமைத்துவம் !

வவுனியாவில் இடம்பெற்ற இயக்க மோதல்கள், கொலைகள் என்பன வெறும் ஆயுதக் குழுக்களின் அதிகாரப்போட்டிக்கான அடிபிடிகள் என்று அசட்டையாக ஒதுக்கிவிடக் கூடிய விடயங்களல்ல.

மோதல்களின் ஈடுபட்டுள்ள புளொட் மற்றும் டெலோ இயக்கங்களின் அரசியல் பின்னணி என்ன, நாட்டின் இராணுவ அரசியல் நிலைமைகளின் பின்புலத்தில், அவர்கள் எதிர்காலம் குறித்து என்ன வகையான அரசியல் திட்டங்களைக் கொண்டிருக்கின்றார்கள் என்று ஒருவர் சிந்தித்துப் பார்ப்பாரே யானால், அவருக்கு நிச்சயம் பைத்தியம் பிடிக்கும் என்பது உறுதி.

இலங்கை அரசாங்கம் சாணக்கியத்தோடு அரசியல் செயற் பாடுகளில் ஈடுபட்டுள்ள வேளை யில், சுமார் இரண்டு தசாப்த கால போராட்ட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டுள்ள தமிழ்

மக்களின் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையை தூர திருஷ்டியுடன் எவ்வாறு எதிர் கொள்வது என்பது பற்றி இவர்களில் யாரேனும் தீவிரமாகச் சிந்தித்திருப்பார்களா என்பது சந்தேகமே.

இவர்கள் செய்வதெல்லாம் என்ன?

இயக்கத்தின் 'செயற்பாடு'களுக்குப் பணம் திரட்டுவது அவர்களின் அதிமுக்கிய நோக்கங்களில் ஒன்றாக உள்ளது. அடுத்ததாகத் தமது பாதுகாப்பு குறித்து மிகுந்த கரிசனையோடு செயற்பட்டு வருகின்றார்கள். உறுப்பினர்களின் வசதியான வாழ்க்கைக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்வதற்கு அவர்கள் ஒருபோதும் தயங்குவது கிடையாது.

அரசியல் நோக்கம் கொண்டதாக இவர்கள் கூறிக்கொண்டு மேற்கொள்கின்ற செயற்பாடுகள் எல்லாம் எத்தகைய நீண்டகாலப் பாதிப்பை தமிழ் சமூகத்திடையே ஏற்படுத்தப் போகின்றது என்பது குறித்து சற்றேனும் சிந்திக்காத ஒரு தலைமையின் வழிநடத்தலிலேயே இயக்கங்களின் செயற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

யுத்தத்தினால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் சமூகத்தின் பொருளாதார நிலைமைகள் அவற்றின் எதிர்காலப் போக்குகள், இளஞ் சந்ததியினருடைய கல்வி நிலைமைகள் என்பவை போன்ற முக்கியமான மிகவும் சாதாரணமான விடயங்கள் குறித்துக் கூட அவர்கள் ·

சிந்தித்துள்ளார்களா என்பது சந்தேகமே.

அதிகார ஆசையும்,, பொருளாதாரத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்கின்ற வேட்கையுமே இந்த இயக்கங்களின் செயற்பாடுகளில் முதனமை பெறறுத திகழ்கின்றதைக் காணமுடிகின்றது.

வரி வசூலித்தல், அடுத்த தேர்தலில் உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றல், பாராளுமன்றப் பிரதிநிதிகளாக வருதல் போன்ற அரசியல் ஆசைகளே அவர்களுடைய இப்போதைய நோக்கங்களாக இருக்கின்றன. இந்த நோக்கங்களை அடைவதற்காக, பொதுமக்கள் மத்தியில் அவர்கள் பல சேவை என்ற பெயரில் பல நடவடிக்கை களில் ஈடுபடுகிறார்கள். வீதிகளை அபிவிருத்தி செய்தல், பெருமள வில் பயனற்றுக் கிடக்கின்ற காணிகளை காணியற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்தல், போன்ற செயற் பாடுகளிலும், கல்வியை ஊக்கு விப்பதற்காக முன்னோடிப் பரீட்சைகளைத் தங்கள் தங்கள் இயக்கங்களின் பெயரால் நடத் துதல், விளையாட்டுப் போட்டி களைத் தங்கள் தங்கள் மறைந்த தலைவர்களின் பெயரால் நடத்துதல் போன்ற வேலைகளையே இவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை, அடிப்படை அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தங்களுடைய சுற்றம், சுகங்களைத் துறந்து உயிரைப் பணயம் வைத்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட மறவர்கள் இப்போது செய்கின்ற சில பணிகள் தான் மேற்கூறியவையல்லாம்.

இந்தப் பணிகளின் மூலம் மக்களைத் திருப்திப்படுத்தப் பார்க்கின்றார்களா அல்லது தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்கின்றார்களா அல்லது வேறு எவரையாவது

திருப்திப்படுத்துகின்றார்களா என்பது எவருக்கும் தெரியாது.

ஆனால் முக்கியமான இரண்டு விடயங்களை அவர்கள் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களுடைய சோற்றுக்காகவும், சோடிச் சப்பாத்துகளுக்காகவும், சொகுசுமிக்க உடைகளுக்காகவும், ஷோவாகத் திரிவதற்காகவும், பணம் திரட்டப்படுவதனால், வர்த்தகர்களிடம் பணம் கறப்ப தினால், தமிழ் மக்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி குன்றுவது

மட்டுமல்ல அழிந்தும் செல்கின்றது.

மாதாந்த வசூல், நாளாந்த வசூல், அவசரத் தேவைக்கான வசூல், வைபவங்களுக்கும் விழாக்களுக்குமான வசூல், மக்களின் பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்கின் றோம் என்ற பெயரில் அவர்கள் மேற்கொள்கின்ற பல்வேறு வேலைத்திட்டங்களை(?) நிறைவேற்றுவதற்கான நிதி வசூல் என்று பல்வேறு வகைகளில் மேற்கொள்கின்ற வசூல்கள், இன்றைய தமிழ் வர்த்தகர்களை, அவர்களுடைய வர்த்தக நடவடிக் கைகளை முடக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

பலருடைய வர்த்தகச் செயற்பாடுகள் முடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எந்த ஒரு வர்த்தகரும், இப்போது தனது வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்புவதில்லை. காரணம் அவருடைய உண்மையான இருப்பை அறிந்து இயக்கங்கள் தொல்லை கொடுக்குமே என்ற பயம் தான்.

தங்க முட்டை இடுகின்றது என்றால், அந்த வாத்து சீவிக்க வேண்டும். அது போஷிக்கப்பட வேண்டும். மாறாக அதனுடைய வயிற்றைக் கீறிப்பார்ப்பதென்பது, கிளையின் நுனிப்பகுதியில் இருந்து கொண்டு, அடிப்பகுதியைத் தறிப்பதற்கு ஒப்பாகவே முடியும்.

இயக்க மோதல்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வவுனியாவில் உள்ள வர்த்தகர்கள், அங்கிருந்து வெளியேறி எங்கே சென்று குடியேறலாம். பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற கணக்கில் வியாபாரமும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். சும்மா இருந்தால் போதும். இருப்பதை வைத்துக் கொண்டு, மனைவி பிள்ளைகளை முடிந்த அளவிற்கு சாதாரண நிலையில் பராமரித்தால் போதும் என்று துணிந்து செயற்படும் அளவிற்கு நிலைமைகள் மோசமாகி இருக்கின் றன.

இரண்டாயிரமாம் ஆண்டில் நுழையப் போகின்றோம். இந்த நூற்றாண்டின் தொழில் நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப அந்தந்தத் துறைகளில் என்னென்ன மாற்றங்களைச் செய்தால், நாங்கள் உலகத்தோடு ஒத்து ஓட முடியும் என்பதற்காக ஒவ்வொரு துறையினரும் சிந்தித்துச் செயற் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாடுகள் புதிய நூற்றாண்டை எவ்வாறு எதிர்கொள்வது என்பது

குறித்துச் சிந்தித்து ஆயத்தமாகி வருகின்றார்கள்.

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைப் புதிய தொழில் நுட்பங்களுடன் எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் சுமார் இரண்டு தசாப்த கால போராட்ட நிலைமைகள் யுத்த நெருக்கடி களுக்குள் சிக்கியுள்ள தமிழ் சமூகத்தை எவ்வாறு வழி நடத்துவது? அவர்களுக்குரிய ஒரு நல்ல

தலைமைத்துவத்தை எப்படி உருவாக்குவது என்பது குறித்து எந்த இயக்கமாவது சிந்தித் திருக்கின்றதா என்பது சந்தேகமே.

## துருப்பிடித்திருக்குமா அதற்குள்ளாக?

அண்மையில் வன்னியில் நடந்த 'இயக்கமோதல்' கலவரத்தை அடுத்து இயக்கங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஆயுதங்கள் களையப்பட்டு விட்டது வாசகர்கட்கு தெரிந்திருக்கும்.

இந்த ஆயுதக்களைவு பற்றி புளொட் இயக்கத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்தவர் புளொட் இயக்கத்தினர், ஆயுதப்படையினர் வழங்கிய ஆயுதங்களை நம்பி நாம் செயற்படவில்லை. இக்களைவு எமது செயல்களைப் பாதிக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆக, ஆயுதப்படைகள் வழங்கிய ஆயுதங்கள் தவிர அவர்களிடம் வேறும் ஆயதங்கள் இருக்கின்றன என்பது தானே இதன் அர்த்தம்?

ஆயுதங்களை அரசாங்கம் பறித்தால் என்ன பறிக்காவிட்டால் என்ன நாம் வழமை போல செயற்படுவோம் என்று அறிவித்திருப்பதைப் பார்த்தால், 'இயக்க மோதல் மற்றும் வரிவசூலிப்பு நடவடிக்கைகள் இனியும் தொடரத் தான் போகின்றன என்று தெரிகிறது.

ஆம், இந்தியா கொடுத்த ஆயுதங்கள் என்ன அதற்குள்ளாகவா துருப்பிடித்திருக்கப்போகின்றன?

## நியாயம் கேட்க வழி என்ன?

பொலிஸ் பதிவுத் துண்டை எடுத்துச் செல்லாவிட்டால் என்ன நடக்கும்?

எதுவும் நடக்கலாம். நீங்கள் உங்களுடைய அடையாளத்தை நிரூபிக்கப் போதிய வேறு ஆதாரங்களைக் காண்பித்த பின்னரும் கூட உங்களை ஒரு பயங்கரவாதி என முத்திரை குத்தவும் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் போடவும் செய்யலாம். நீதிமன்றத்துக்கு உங்களை அழைத்துச் செல்லாமலே இழுத்தடிக்கலாம். தாக்குதல் சித்திரவதை, அவமதிப்புகட்கு உள்ளாக்கலாம். உங்களிடம் பணம் பிடுங்கலாம். இன்னும் எவ்வளவோ செய்யலாம்.

குறைந்த பட்சம் இரண்டு மூன்று மணிநேரமாவது உங்களை சோதனை நிலையத்தில் தடுத்து வைத்திருக்கலாம்.

இந்தப்பத்தியில் பொலிஸ் பதிவுத்துண்டை எடுத்து வருவது சட்டரீதியாக அவசியமான ஒன்றல்ல என்றும், அதை ஏன் கேட்கிறீர்கள் என்று பொலிஸ்/ இராணுவத்தினரிடம் கேட்டுப்பாருங்கள் என்றும் ஒருமுறை எழுதியது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

அதை எழுதிய இரண்டொரு நாட்களுக்குப்பின் கிட்டதட்ட (அப்படிக்கேட்டதற்காக) 3 மணிநேரம் - நள்ளிரவு 12 மணிவரை கொட்டஹேன ஜம்பட்டா வீதியில் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். சிவில் கடமைபுரிய வந்துள்ளதாக கூறும் என்னைத் தடுத்து வைத்த இராணுவ அதிகாரியிடம் எந்த அடையாள இலக்கமோ பெயர்ப்பட்டியலோ இருக்கவில்லை. அவரது ஏளனமான பேச்சையும், முட்டாள்தனமான தர்க்கத்தையும் சகிக்க முடியாத கோபம் எழுந்த போதும் அவர் பற்றி முறையிட எந்த அடையாளமும் அவரிடம் இருக்கவில்லை

நான் எச்சரிக்கப்பட்டு (!) விடுவிக்கப்பட்ட அரை மணிநேரத்திற்கெல்லாம் அந்த திடீர் சோதனை நிலையம் மூடப்பட்டு விட்டது!

ஆனால், அண்மையில் கொழும்பில் இதே காரணத்திற்காக கைது செய்யப்பட்ட ஜோபேட் ஞானமுத்து என்ற கல்கிசையைச் சேர்ந்த தமிழ்ப் [illegible]றியியலாளர் ஒருவர் தமக்கு இழைக்கப்பட்ட மான நட்டத்திற்கு ஈடுகோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்திருக்கின்றார். இவ்வழக்கில் சுத்தவாளியாகக் காணப்பட்ட இவருக்கு நட்டஈடாக ரூ. 50,000 செலுத்தும்படி கொழும்பு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது!

திடீர் சோதனைச் சாவடிகளில் இவ்வாறு தடுக்கப்பட்டு அவமானப் படுத்தப்படுபவர்களும் மான நட்டவழக்குப் போட்டு நியாயம் கேட்க என்ன வழி?

சோதனையில் ஈடுபடும் படையினருக்கு பெயரடையாளம் இல்லாமல் எப்படி சிவில் கடமையிலீடுபட அரசாங்கம் அனுமதித்திருக்கிறது?

இப்படிச் செய்ய இலங்கையில் சிவில் உரிமைச் சட்டத்தில் இடமிருக்கிறதா?

## மந்திரத்தால் பறந்த தலை

தானே நடந்து வந்த தலை பற்றி செய்தி ஒன்றை சரிநிகர் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். நெல்லியடியில் உடலை மலக்குளிக்குள் போட்டுவிட்டு யாழ் நகரில் வந்து விழுந்து கிடந்த இந்தத்தலை நெல்லியடி கனபொல்லையைச் சேர்ந்த ராஜரட்ணம் ராஜேஸ்வரன் என்ற 23 வயது இளைஞனுடையது என்பது இப்போது தெரிந்த கதையாகி விட்டது.

இந்த மந்திர வித்தைக்குப் பொறுப்பாக அல்லது சூத்திரதாரிகளாக இருந்த இரு புளொட் உறுப்பினர்கள் ஏற்கெனவே கைது செய்யப்பட்டதும், இது தொடர்பாக இன்னும் இருவரை தேடிப்பிடிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புளொட்டின் சாதனைகள் வரிசையில் மந்திரத்தால் தலையைப் பறக்கச் செய்யும் நடவடிக்கையும் சேர்ந்து கொண்டு விட்டது!

அவர்களை வாழ்த்துவோம்.

## கின்னஸ் சாதனை

சாதனைகளை நிலைநாட்டி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கவென்று முயல்பவர்களைகப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது.

ஏதாவது ஒரு சாதனை செய்து பெயர் எடுத்துவிட வேண்டும் என்பதற்காக இரவுபகலாக உழைத்த பலரைப் பற்றி நாம் அறிவோம். அவர்கள் சாதனைகளை முடிவில் அடைகிறார்களோ இல்லையோ, அவர்களது முயற்சி காரணமாக அவர்களது பெயர்கள் பிரபல்யம் பெற்றுவிடும். ஆனால் கின்னஸ் புத்தகத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் சாதனைகளை செய்வர்களும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்களுக்கு ஒரு துறைக்கான உலகசாதனைப் பரிசுக்குப் பதில் பலதுறை உலகசாதனைப் பரிசுகள் கொடுக்கப்படவேண்டும். ஆனால், இந்த உலகம் தான் அவர்களைக் கண்டு கொள்வதில்லை.

யார் இந்த அவர்கள் என்று பார்க்கிறீர்களா? அண்மையில் கொழும்பிலும் வன்னியிலுமாக நடந்த கொலைக் கச்சேரியில் சாதனை புரிந்த நம் வீர மறவர்களான ரெலோ, புளொட் இயக்கத்தவர்களைத் தான் சொல்கிறேன்.

கொழும்பில் மூன்றும் வன்னியில் ஐந்துமாக. எட்டுப் பேரை பலியெடுத்துவிட்ட அவர்களின் சாதனை பற்றி கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்பவர்கள் யாரும் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

அவர்களின் சாதனை வேகத்தைக் கண்ட இலங்கை ஆயுதப் படைகள் ஆயுதக் களைவு நடாத்தி (ஒரு சாத்திரத்திற்காக) 25 ஆயுதங்களை எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சாதனை வேகத்தில் பொறாமை கொண்ட சிறிலங்கா இராணுவத் துருப்புக்கள், இத்தகைய செயலில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்ததாகத் தெரியவருகிறது.

எப்படியாயினும், ஆயுதங்களைப் பறித்து, சாதன்ன முயற்சியில் ஈடுபடக் கூடாது என்று படையினர் உத்தரவிட்ட போதும், நமது மறவர்கள் தமது சாதனை முயற்சியை கைவிட்டதாகத் தெரியவில்லை.

ஆனால், அவர்கள் இப்போது சாதனை செய்ய முடிவெடுத்திருப்பது பிரச்சார அறிக்கைப் போரில், புளொட்டின் தாக்குதல் பட்டியலில் கொல்லப்பட்ட தமது சகாக்களின் பெயர்கள் இருந்தன என்று ரெலோ அறிக்கை விட்டது. அப்படி எல்லாம் ஒன்றும் கிடையாது! வேறு யார் யாரோவின் செயல்களுக்கு எம்மீது பழிசுமத்துகிறது ரெலோ என்று அறிக்கை விட்டது புளொட்.

கொல்லப்பட்ட குகராசா எங்களது எதிரி தான். ஆயினும் அவரை நாம் கொல்லவில்லை என்கிறது அதன் பதில் அறிக்கை.

அவர்களது சாதனை வேகத்தைப் பார்த்து வன்னி மக்கள் மட்டுமல்ல, அரசாங்கமும் கூட ஆச்சரியப்பட்டுப் போய் நிற்கிறது.

விரைவில் பிரச்சார பயிற்சிக்காக கதிர்காமர் பூரண பாதுகாப்புடன் புளொட், ரெலோ முகாம்களுக்கு விஜயம் செய்தாலும் செய்யக் கூடும்.

நாம் அவர்களது சாதனைகளை வாழ்த்தாமல் இருக்க முடியுமா என்ன?

நன்றி - நூலகத்திட்டம்



# லக்பிம ஸ்ரீ லால்: அரசியல் தூக்கிலிட முனையும் அரசு !

" லக்பிம பத்திரிகையின் பத்திரிகையாளராகத் தன்னை மறைத்துக் கொண்ட ஜே.வி.பி தலைவரும் கொலையாளியுமான ஸ்ரீலால் பிரியந்த சி.ஐ.டியினரால் கைது"

அரச ஊது குழலான டெய்லி-நியூஸ் இல் செய்தி ஒன்று கொட்டை எழுத்துக்களில் இவ்வாறு பிரசுரமாகியிருந்தது.

பத்திரிகைத் தனத்துக்கும் ஒரு அரசியல்வாதியின் மேடைக் கூச்சலுக்கும் வேறுபாடு இருக்கிறது என்ற அடிப்படை ஞானமோ பொறுப்புணர்வோ அற்ற ஏரிக்கரைப் பத்திரிகையான டெய்லிநியூஸ், நீதிமன்றில் நிரூபிக்கப்படும் வரை கொலையாளி வெறும் சந்தேக நபர் தான் என்பதை வசதியாக மறந்து இவ்வாறு எழுதியது.

இதே வேலையை எல்லா அரச சார்பு தொடர்பு சாதனங்களும் செய்து தமது அரச விசுவாசத்தை மெய்ப்பித்தன.

ஸ்ரீலால் பிரியந்த சரிநிகர் வாசகர்களுக்கு அந்நியமானவரல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவர் கடத்திச் செல்லப்பட்டு கண்களும் கைகளும் கட்டப்பட்டநிலையில் சாக்கொன்றினுள் போடப்பட்டு வீசப்பட்டது தொடர்பான செய்தி ஒன்று சரிநிகரில் வெளியாகியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ஆனால், இம்முறை அவர் கடத்தப்படவில்லை. வீடு தேடி வந்த சி.ஐ.டியினரால் அவர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக மேலதிக விசாரணைக்காக நாலாம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எந்த மிரிஹான பொலிஸார் தான்சென்ற தடவை கடத்திச் செல்லப்பட்டதுடன் சமடபந்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்திருந்தாரோ அதே மிரிஹானப் பொலிஸார் சி.ஐ.டியுடன் இவரை அழைத்துச் செல்ல வந்திருந்தனர்.

ஆனால் நாலாம் மாடிக்குச் சென்ற போது தான் அவருக்கு தான் அழைத்து வரப்படவில்லை. கைது செய்யப்பட்டிருக்கிறேன்என்பது தெரியவந்திருக்கிறது. 1987இல் நடந்த ஜே.வி.பியின் இரண்டாவது எழுச்சியின் போது அவர் வெலிப்பனைப்பகுதியிலுள்ள ஐந்து பேரைக் கொலை செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது முன்வைக்கப்பட்டது.

**ஒரு இலகுவான குற்றச்சாட்டு.**

யார் மீதும் வைக்கக்கூடிய குற்றச்சாட்டு. ஜே.வி.பியுடன்'தொடர்பு படுத்துவதன் மூலம் ஒரு பத்திரிகையாளரை அவரது செயல்களிலிருந்து தடுத்து விட வசதியான குற்றச்சாட்டு.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவரை விசாரிக்கவந்த சி.ஐ.டிக்களில்ஒருவர் தன்னைமுன்பு கடத்திச் சென்றவர்களில் ஒருவர் என்று அடையாளம் காட்டுகிறார் ஸ்ரீலால்.

இந்த ஒன்றே அரசாங்கம் அவரை பழிவாங்க - அவரது யுத்த நிலவர எழுத்துக்காக பழி வாங்க - முயல்கிறது என்பதைக் காட்டப் போதுமானது.

இவர் ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர் என்று அரசாங்கம் சொன்னதை ஜே.வி.பியின் பேச்சாளர் விமல் வீரவன்ச மறுத்துள்ளார் என்பது ஒரு சுவாரஸ்யமான தகவல்.

இளைய பத்திரிகையராளன ஸ்ரீலால் பிரியந்த தற்போது கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவருக்கெதிராக 87-90 பயங்கர காலகட்ட படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளதென அரசின் அறிக்கைகள் தெரிவித்திருந்தன. ஸ்ரீலால் பிரியந்த கைதாகி 48 மணித்தியாலங்கள் கூட கழிந்திருக்கவில்லை இந்த அறிவித்தல் விடுவிக்கப்பட்டு விட்டது. ஆனால், கடந்த மார்ச் 14ம் திகதி அவர் கடத்திச் செல்லப்பட்டு 48 மணித்தியாலங்கள் கழிந்த பின்னும் அவர் கடத்தப்பட்டது தொடர்பாக எந்தவித இரகசிய பொலிஸ் அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**மறைந்த கொலைஞன்**

ஸ்ரீலால் பிரியந்த ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தொடர்பு கொண்டு, பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், 5 கொலைகளுடன் தொடர்பு கொண்டவரெனவும் அரசு குற்றச்சாட்டை முன்வைக்கும் அரசின் அறிக்கையின்படி ஸ்ரீலால் பிரியந்த சுதந்திர தொடர்பூடக இயக்கத்தின் பிரபல உறுப்பினராவார். இரகசியத் தகவல்களைப் பெறவென விசேட பயிற்சி பெற்றிருக்கும் அதிகாரிகள் ஸ்ரீலால் பிரியந்த சம்பந்தமான விசாரணைக்குப் பொறுப்பாக உள்ளனர் என்ப்தில் சந்தேகமில்லை. அவர்களது தகவல்கள் மூலம் அரசு, ஸ்ரீலால் பிரியந்த சுதந்திர தொடர்பூடக இயக்கத்தின் பிரபல உறுப்பினர் என்பதை எவ்வாறு அறிந்து கொண்டனர்? உண்மை என்னவென்றால் அவர் ஒரு போதும் சுதந்திர தொடர்பூக இயக்கத்தின் உறுப்பினராக இருந்ததில்லையென்பதாகும்.



இந்த விடயத்தின் மூலம் ஒரேயொரு காரணம் மட்டுமே நிரூபணமாகின்றது. அதாவது அரசு இரகசியங்களை துலக்குவதைவிட, அவற்றை உருவாக்க முயற்சிதுள்ளது என்பதாகும். ஸ்ரீலால் சுதந்திர தொடர்பூடக இயக்க உறுப்பினர் எனக் கூறுவதற்கு ஒரு அரசியல் காரணமிருக்கிறது. இது அரச தொடர்பூடகங்கள் அனைத்தும் ஒரே குரலில் 'இங்கே பாருங்கள், கொலைஞன் ஒருவன் சுதந்திர தொடர்பூடக இயக்கத்தில் இருக்கின்றான்' எனக் கொக்கரிக்கவசதியாகச் செய்யப்பட்ட கண்டுபிடிப்பாகும்.

பிற்போடப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடாத்தும்படி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பைப்பெற்றுக் கொண்டதால் அரசாங்க உயர் சக்திகள் சுதந்திர தொடர்பூடக இயக்கத்துடன் வஞ்சம் கொண்டுள்ளன. அதனால், ஸ்ரீலால் பிரியந்த சம்பவத்துடன் சுதந்திர தொடர்பூடக இயக்கத்தை இணைத்து அரசியல் ரீதியாக தூக்கிலிடும் நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக எண்ணத் தொடங்கினர்.

**ஜே.வி.பி. பயங்கரம்**

அது மட்டுமல்ல, அரசாங்க அரசியல் சக்திகளுக்கு தற்போது ஜே.வி.பி. பீதி பரவியுள்ளது. 1997 மாகாண சபைத்தேர்தல் காலத்தில் தேசப்பிரேமி ஜனதா அமைப்பினால் கொல்லப்பட்ட நபரொருவரின் நிர்வாணப்படம், இறந்தவரின் உறவினர்களின் ஒழுக்க ரீதியான எதிர்ப்பை கருத்திலெடுக்காது, ஐ.தே.க. பயங்கரவாதமாக காட்டி சுவரொட்டிகளை தயாரித்து நாடு முழுவதும் ஒட்டியது இந்த அரசாங்கமாகும். விஜயகுமாரதுங்க கொலைப் பொறுப்பிலிருந்து தேசப்பிரேமி ஜனதா அமைப்பை காப்பாற்றுமுகமாக, அக் கொலையை பிரேமதாச ஆட்சி மீது சுமத்தியதும், இந்த அரசாங்கமாகும். 1994 ஓகஸ்ட் மாதத்தில் ஆட்சிச்கு வந்தது தொடக்கம் 1999 மே மாதம் வரை ஜே.வி.-பியுடனோ, தேசப்பிரேமி ஜனதா இயக்கத்துடனோ தொடர்பு கொண்ட ஒரு நபரைக்கூட இந்த அரசாங்கம் கைது செய்யவில்லை. அந்த பயங்கரமான நடவடிக்கைகளின் அரசியல் தலைவரான விஜேவீரவின் மனைவியை அலரி மாளிகைக்கு அழைப்பித்து சுயநல அரசியலுக்கு பயன்படுத்த முயற்சித்ததும் இந்த அரசாங்கமாகும்.

தற்போது ஸ்ரீலால் பிரியந்த ஜே.வி.பியுடன் தொடர்புகொண்டு கொலை செய்ததாகவும், பொலிசிலிருந்து தப்பிச்சென்று புனைபெயரில் பத்திரிகையாளராக செயற்பட்டதாகவும் பெரும் கோஷங்கள் எழுந்துள்ளன.

ஏனெனில், தற்போது ஜே.வி.பி. அரசியல் சக்தியாக வளர்ச்சியடைந்து வருதோடு, பொ.ஐ.முவின் அதிகாரத்தை பலவீனமாக்கும் அளவிற்கும் செயல்பட்டும் வருகிறது. இன்று ஸ்ரீலால் பிரியந்த சம்பவத்தை ஜே.வி.பியைத் தாக்கும் ஆயுதமாக அரசாங்கம் பயன்படுத்தி வருவதும் அதனாலேயாகும்.

**இராணுவத்தை பிரித்தது"**

ஸ்ரீலால் பிரியந்த சம்பவத்தில் மூன்றாவது முக்கிய அவதானிப்புக்குரியது அரசின் செய்தி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கை ஒன்றாகும். அது இராணுவத்திற்குள் பிரிவினையை ஏற்படுத்தும் சிறு அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்று எச்சரிக்கிறது. ஸ்ரீலால் பிரியந்தவின் ஆக்கங்கள் வன்னி பிரதேசத்தில் யுத்த தலைவர்களின்

அவர் கடத்திச் செல்லப்பட்டு தொலைக்காட்சி திரையில் காட்டப்பட்ட பின்னர்தாம் என்ற அறிவித்தல் முதன்முதல் குறிப்பிடப்படுகின்றது. ஆனால், இறுதியில் ஸ்ரீலால் பிரியந்த கடத்திச் செல்லப்பட்டது, அவரால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களினால் என்ற கருத்து தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறாயின், அவ்வுறவினர்கள் முன்னரேயே ஸ்ரீலால் பிரியந்தவை அறிந்துள்ளனர். இந்த கூற்றுக்கள் இரண்டும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில், இவை இரண்டும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள எவ்வாறாயினும், ஸ்ரீலால் பிரியந்த கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தை ஆராய்வதை விடுத்து தற்போது அதற்கான காரணம் பிறர் மேல் சுமத்தப்படுகின்றது. அதாவது 1987- 1990 காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் கொலைக்கு 10 வருடங்களின் பின்னர் செய்யப்பட்ட ஒரு பழிவாங்கும் முயற்சி இதுவாகும். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒரே ஒரு சம்பவமும் இதுவாகவே இருக்கும்!

ஸ்ரீலால் பிரியந்த கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின் ஒரு பத்திரிகையாளப் பயங்கரவாதி தொடர்பான மயிர்க் கூச்செறியும் நடவடிக்கை தொடர்பாக எழுதப்பட்டவை. யுத்தத்தின் பேரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அதன் மூலம் வெளியிடப்படுள்ளன. (அவர் எழுதிய பிற சில செய்திகள் மிக மோசமானவை என்பதும் குறிப்பிடத்தகது.)

இவற்றைத்தவிர அரசின் தொடர்பூடகங்களின் அறிக்கைகளில் பலத்த முரண்பாடுகள் உள்ளன. ஸ்ரீலால் பிரியந்தவை கொலைகளுடன் தொடர்பு படுத்தி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

அறிக்கைகள் அரசின் தொடர்பூடகங்களினால் வெளிவிடப்பட்டன. 87-91 பயங்கரகால க்ட்டம் தொடர்பாக ஆராய்வதும், தண்டனை வழங்குவதும் நல்ல விடயமே. எனினும், அரசாங்கம் இங்கு தன் கடமையை நிறைவேற்றவில்லை என்பதையே கவலையோடு கூற வேண்டியுள்ளது. அந்த பயங்கர காலகட்டத்தில் இளைஞர், யுவதிகளை கொன்று குவித்த பொலிஸ், மற்றும் இராணுவ அதிகாரிகளின் விபரங்கள் தெளிவான முறையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கொலை அதிகாரிகள் 200க்கும் அதிகமானவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இன்றுவரை அரசாங்கம் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஸ்ரீலால் பிரியந்த வதூக்குமேடைக்கு அனுப்ப ஆர்வமாயிருக்கும் ஐயாமார்கள் அதற்கு முதல் சீருடை அணிந்த கொலைஞர்களின் பெயர், ஊர் விபரங்களை முன்வைத்தால் எவ்வளவு நன்று.

**பிரதி அமைச்சர் நிமலசிறி ஜயசிங்க**

ஸ்ரீலால் பிரியந்த மீதான குற்றச்சாட்டு அரசியல் பயங்கரக் காலகட்டத்தில் அரசியல் கொலை புரிந்தார் என்பதாகும். அது இறுதியில் நிரூபிக்கப்படும்வரை அவர் சுத்தவாளி. அப்படி நிரூபிகன்கப்படினும் கூட அரசியல் நிலைப்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்ட பயங்கர நடவடிக்கைகள் தொடர்பான எமது உளப்பாங்கு சாதாரண கொலைஞன் ஒருவன் தொடர்பான உளப்பாங்காக இருக்கக் கூடாது. ஏனென்றால் அக்கால அரசியல் நிலைப்பாடு காரணமான செயல்கட்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு சிறந்த உதாரணம்: இன்றைய அரசாங்கத்தில் பிரதியமைச்சர் பதவி வகிக்கும் நிமலசிறி ஜயசிங்க எனப்படும் லொக்கு அத்துலவாகும்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் வழக்கில் பிரதிவாதியான அவர் தாம் கொலைகளுக்கு உதவி செய்ததாகவும், புறநகர்ப் பகுதியில் கொள்ளையடித்ததாகவும், வேறு கொள்ளைகளை புரிந்ததாகவும் ஒப்புக்கொண்டார். அரசின் சாட்சியாளர்களாக நீண்ட சாட்சியமளித்த அவருக்கு ஒரு நாள் கூட சிறைத் தண்டனை கிடைக்கவில்லை. மன்னிப்பு கிடைத்தது. பின்னர் பொ.ஐ.முவுடன் இணைந்து அவர் தற்போது அரசாங்கத்தின் பிரதியமைச்சர் ஆகி விட்டார்.ஸ்ரீலால் பிரியந்த கைது தொடர்பாக எழுப்பியுள்ள தர்க்கங்களை சீர்தூக்கிப் பார்க்கும் வாய்ப்பை வாசர்களுக்கு அளித்துவிட்டு இன்னுமொரு உதாரணம் மட்டும் இங்கு தரப்படுகின்றது.

**வவுனியா உதாரணம்**

சுமார் ஒரு வருடத்திற்கு முன் வவுனியாவில் கைது செய்யப்பட்ட வீரகேசரி பத்திரிகையாரளான மாணிக்கவாசகர் தொடர்பான சம்பவ்மாகும். புலிகளுக்கு ஆதரவளித்தார் என்ற பெயரில் அவர் கைது செய்யப்பட்டார். புலிகளுக்கும் இவருக்கு இடையிலான தொடர்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. அவரைப்பற்றிக் கதைக்க அமைப்புகள் கூட பயந்தன. அவர் தமிழரானபடியால் புலியாக இருக்கலாம் என நம்பினர். (ஸ்ரீலால் பிரியந்த இளைஞன் என்ற படியால் ஜே.வி.பி. தொடர்பிருக்கும் என்ற எண்ணம்) எனினும், அவர் விடுவிக்கப்பட்டார்.

வெளியில் தோன்றும் விடயங்கள் உண்மையென்றால், விஞ்ஞானம் ஒருபோதும் தேவையில்லை. ஸ்ரீலால் பிரியந்த சம்வபமும் ஆழ்ந்து நோக்கும்போது தர்க்கபூர்வமானதல்ல. சிலவேளை பொலிசுக்கு பொய்யை சரியாக சொல்ல முடியாதிருப்பதற்கு அரசியல்வாதிகளின் வெற்று மண்டை காரணமாக இருக்கலாம்! அவ்வாறில்லாவிட்டால் இரகசியப் பொலிசாரின் பேரில் அரசியல்வாதிகள் பொய் கூறுவதாயும் இருக்கலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



## திராய்க்கேணி:

# இந்தக்கிராமத்துக்கு என்ன பாதுகாப்பு?

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் வலதுபக்கமாக பாலமுனை, ஒலுவில் ஆகிய இரு முஸ்லிம் கிராமங்களுக்கிடையில் பிரதான வீதியை விட்டு சுமார் ஒரு கிலோமீற்றர் உள்வாங்கி இருக்கிறது திராய்க்கேணி என்ற அந்தத் தமிழ்க் கிராமம். 90களில் இடம் பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு திருக்கோவில், காரைதீவு பகுதிகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களில் 130 குடும்பங்கள் 93-94 காலப்பகுதியில் மீளவும் குடியேறினார்கள். இது மொத்தமாக இடம்பெயர்ந்தவர்களில் சுமார் 25-30 வீதமானோர் என அறியக் கிடைக்கின்றது. மீளக்குடியேறிய காலத்திலிருந்து கடந்த வாரம் வரை எதுவித அசம்பாவிதங்களும் இன்றி (ஒரு சுற்றிவளைப்புக் கூட இடம்பெற்றதில்லை) வாழ்க்கையைக் கழித்த (அபார உழைப்பாளிகளான) ஏழை மக்களின் அமைதி வாழ்விற்கு ஆப்பு வைக்கும் சம்பவங்கள் கடந்த 09.05.99 முதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

சம்பவம் 1:-

கடந்த 09.05.99 சனிக்கிழமை அன்று நடுநிசியிலே ஆழ்ந்துறங்கிக் கொண்டிருந்த சின்னத்தம்பி நாகம்மா(70)வின் வீட்டுக்குச் சென்ற ஆயுதம் தரித்த குழு ஒன்று "அக்கா அக்கா" என அழைத்து தாங்கள் விடுதலைப் புலிகள் எனவும், "முள்ளிக் குளத்துமலை"யில் இருந்து வருவதாகவும் கூறி தங்களுக்குப் பசியாய் இருப்பதால் சோறு தருமாறு கேட்டிருக்கிறார்கள். ஆண் துணை யாருமின்றி தனது மருமக்கள் இருவருடன் (முருகுப்பிள்ளை மலர் (32), இரு பிள்ளைகளின் தாய், இராசையா தேவி (21) ஒரு பிள்ளையின் தாய்) மட்டும் உறங்கிய அம்மூதாட்டி கதவைத் திறக்கும் அச்சத்திலும் உண்மையிலேயே உணவு இருக்காமையினாலும் "உணவு இல்லை" எனக் குரல் கொடுத்திருக்கின்றார். பின் கிடுகு அடைப்பினூடாக துப்பாக்கி முனையை வீட்டினுள் ஒருவர் உட்செலுத்த இன்னுமொருவர் அடைப்பின் மேலாக "டோர்ச்லைட்டை" அடித்துப் பார்த்து விட்டு தாங்கள் வெளியே விரித்து உறங்குவதற்காக பாய் தருமாறு கேட்டிருக்கின்றார்கள். பாயும் தன்னிடம் தருவதற்கு இல்லை என அம் மூதாட்டி பதில் தரவே, வந்தவர்களில் ஒருவர் அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம் எனக்கூறி மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு கொச்சைச் சிங்களத்தில் கதைத்தபடி அங்கிருந்து அகல்வதுபோல் பாசாங்கு செய்துள்ளனர் வந்தவர்கள் சென்று விட்டார்கள் என்ற எண்ணத்தில் விளக்கைக் கொளுத்தி அம்மூதாட்டி கதவைத் திறக்க திடீரென கதவோரத்தில் நின்ற ஒருவனினால் விளக்கு அணைக்கப்பட்டு அம்மூதாட்டியின் கழுத்தினில் கத்தி வைத்து அழுத்தப்பட்டுள்ளது. இச்செயலினால் அதிர்ச்சியுற்ற அவர் தனது உயிர் போனாலும் பரவாயில்லை மருமக்களை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் உதவி கேட்டுக் கூக்குரலிடவே அவருடைய தாடைகள் இரண்டையும் ஒருவர் அழுத்திப் பிடிக்க இன்னுமொருவர் அவரின் இடுப்பில் கத்தியை அழுத்தியபடி தொடைப் பகுதியைக் காலால் மிதித்திருக்கிறார். (நாங்கள் விவரம் சேகரிக்கச்சென்ற போதும் காலில் 'பத்து'ப் போட்டப்படியே அவர் படுத்திருந்தார். கழுத்தினிலும், இடுப்பினிலும் இருந்த தழும்புகளை எம்மிடம் தழுதழுத்த குரலுடன் காட்டினார்.) மூதாட்டியின் குரலுக்கு யாரோ ஒருவர் 'இந்தா வாறண்டோ' எனப் பதில் கொடுக்கவே சுற்றுப் புறமும் விழித்துக் கொள்ள சூழ்நிலை பொருத்தமற்றுப்போக அக்குழு அவ்விடத்தை விட்டு ஓடி மறைந்துள்ளது.

இது பற்றி அம்மூதாட்டி மறுநாள் அரைக் கி.மீ தொலைவில் உள்ள ஒலுவில் பொலிஸ் போஸ்றில் முறைப்பாடு செய்யச் சென்ற போது அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும்படி கூறப்பட்டுள்ளது. அக்கரைப்பற்றுக்குச் சென்ற இம்மூதாட்டியிடம் முகவரியை மட்டும் வாங்கி எடுத்துக் கொண்டு வாக்குமூலம் பெறுவதற்காக வருவதாகக் கூறியவர்கள் வரவே இல்லை எனக் கூறுகிறார்.



சம்பவம் 2:-

மறுநாள் இரவு மணி ஒன்பதிற்கும் பத்திற்குமிடையில் முதலாவது சம்பம் இடம்பெற்ற வீட்டிலிருந்து சுமார் 100 மீட்டருக்குள் இருந்த தம்பியப்பா அழகம்மா (81) என்பவரின் வீட்டில் அவரும் அவருடைய பிள்ளைகளும் (கோபால் திருச்செல்வம் (24), கோபால் திருத்தணி (17), கோபால் சமுரா (14)) தூங்கிக் கொண்டிருக்கையில் இனம் தெரியாத யாரோ வீட்டுக் கூரைக்கு நெருப்பை வைத்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள். தீச்சுவாலையின் வெளிச்சத்திலே நித்திரை கலைந்து துணுக்குற்று வெளியே ஓடிவந்தபோது சுற்றுப்புறமும் நாய்களின் குரைப்பு அதிகமாய்க் கேட்டிருக்கின்றது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் அவசரத்தில் அவர்கள் ஓடியபோது எந்த வொரு உடமைகளையும் எடுத்துக் கொள்ளும் அவகாசம் அவர்களுக்குக் கிட்டவில்லை. ரூ. 25,000 பெறுமதியான உடமைகள் எரிந்து நாசமாகியுள்ளன. (பாடசாலையில் படிக்கின்ற அவருடைய பெண்ணின் பாடப்புத்தகங்களும் எரிந்து சாம்பலாகியது விட்டது தான் துயரம்). இது பற்றி மறுநாள் அருகிலுள்ள பொலிஸ் போஸ்றில் முறையிடவே உடன் ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸார் பார்வையிட்டபின் விசாரணை செய்வதாகக் கூறியுள்ளனர்.

சம்பவம் 3:-

இவ்விரு சம்பவங்களும் நடைபெற்று ஒரு வாரமளவில் 16.05.99 சனிக்கிழமை அன்று இன்னுமொரு சம்பவம் திராய்க்கேணியின் அயல் கிராமங்களில் ஒன்றான பாலமுனைக் கிராமத்திலே முற்று முழுதாக முஸ்லிம் மக்களிடையே ஒதுக்குப்புறமான ஒரு தென்னந்தோப்பினிலே அத்தோப்பினைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்ட தமிழ்க் குடும்பம் ஒன்றிற்கு நேர்ந்துள்ளது.

சம்பவதினமிரவு அத்தோப்பில் உள்ள (தனிமைப்பட்ட) வீட்டினிலே 55 வயதையுடைய தந்தையும் 26 வயதையுடைய அவரின் மகனும் 22 வயதையுடைய அவரின் மகளும் உறவினர்களான 25,14 வயதையுடைய இன்னும் இரு பெண்களும் இருந்துள்ளனர். இரவினில் இத்தோப்பினுள் நுழைந்த முகமூடியணிந்த ஆயுதம் தரித்த குழு ஒன்று முதலில் அவ் இளைஞனை கைகளைக் கட்டி வெளியே அழைத்துச் சென்றிருக்கின்றது. மகனை அழைத்துச் செல்வதைக் கண்ட தந்தை பின்தொடர அவரையும் ஆயுதமுனையில் மிரட்டி வைத்துக் கொண்டு சிலர் நிற்க, சிலர் வீட்டினுள் நுழைந்து பெண்களுடன் பாலியல் சேட்டை புரிய முனைந்துள்ளனர். அப்பெண்கள் மூவரும் தைரியமாக எதிர்த்துப் போராடியிருக்கின்றனர். இதனால் தமது நோக்கம் ஈடேறாததால் போகும் போது அவர்களில் ஒருவர் "டியூட்டிக்கு நேரம் போர" எனக் கூறியதை இவர்கள் கேட்டுள்ளார்கள். இங்கும் ஆரம்பத்தில் நுழைந்த போது தாங்கள் விடுதலைப் புலிகள் என்றே கூறியிருக்கின் றார்கள். அத்துடன் பெண்கள் இவர்களை எதிர்த்தபோது "திராய்க்கேணியில் நடந்தது தெரியும்தானே" என்றும் மிரட்டியிருக்கின்றார்கள்.

இதே தினம் இரவில் திராய்க்கேணியிலும் ஒரு வீட்டில் கிடுகு அடைப்பைத் தட்டி யாரோ பீதிகொள்ள வைத்திருக்கின்றார்கள். முதலில் குறித்த சம்பவம் பற்றி மறுநாள் அத்தோட்ட உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்தபோது, யார் செய்தார்கள் என்பது தெரியாததினால் எதுவும் செய்ய முடியாது எனப் பொலிஸார் கையை விரித்துள்ளனர்.

இச்சம்பவங்களை நோக்கும்போது இது அக்கிராம மக்களை அச்சுறுத்தும், (அச்சத்துடன் வாழத்திணிக்கும்) முயற்சிகளாகவே தென்படுகின்றன. அதன்மூலம் காம இச்சையை நிறைவேற்றுதல், இனமோதல்களை உருவாக்குதல் என்னும் இலக்குகளுக்கு அப்பால் வேறு ஒரு இலக்கை அவர்கள் அடைய நினைப்பது சலனமாகத் தெரிகின்றது.

அதுதான் - அம்மக்களை தங்கள் இடங்களை விட்டு மீண்டும் தாங்களாகவே (இனமோதல் எதுவுமின்றி) வெளியேற வைப்பது. இந்தப் பின்னணியில் இப்பிரச்சினைகளை நோக்குவதற்கு இக்கிராமத்தின் பூகோள அமைப்புப்பற்றியும் வரலாற்றுப் பின்னணி பற்றியும் சிறிது ஆராய்தல் வேண்டும். முன்னமேயே குறிப்பிட்ட இரு முஸ்லிம் கிராமங்களுக்குமிடையில் இருக்கும் இக்கிராமமானது பூர்வீகமாகவே தமிழர்களுக்கு உரியது. சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பேயே பற்றைக் காடுகளாய் இருந்த இப்பிரதேசத்தில் காடுவெட்டி, களனி அமைத்து இவர்கள் குடியேறியுள்ளார்கள். தோட்டப்பயிர்ச் செய்கையை முக்கிய தொழிலாகக் கொண்ட இம் மக்களின் வீடுகள் (பெரும்பாலும் சிறுகுடிசைகள்) பற்றைகளுக்கும், புல்வெளிகளுக்கும், தோட்டங்களுக்கும் இடையில் ஐதாக அங்கொன்றும், இங்கொன்றுமாக அமைந்திருக்கின்றன. அண்மைக்காலம் வரை இப்பிரதேசத்தில் நிலங்களுக்குரிய மதிப்பு நகரை அண்டிய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாகவே இருந்து வந்துள்ளது. இக்கிராமத்தில் மட்டுமல்ல அயல்கிராமங்களிலும் நிலைமை கிட்டதட்ட இதே தான். ஆனால் ஒலுவில் கிராமத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்ததும் ஒலுவில் துறைமுகம் ஒன்று அமையப் போவதாக அடிபடும் கருத்துக்களும் இப்பிரதேசத்தில் காணிகளின் பெறுமானத்தில் ஒரு திடீர் வளர்ச்சியைக் காட்டியதுடன், எதிர்காலத்தில் இன்னும் வளர்ச்சியைக் காட்டுவதற்கான எதிர்பார்ப்பையும் காட்டி நிற்கின்றன. (90 களில் இடம்பெற்ற வன்செயல்களில் இம்மக்கள் இடம் பெயர்ந்த பின் இக்கிராமத்தை தங்களின் கிராம எல்லைகளுக்குள் அடக்கிக் கொள்ளும் முயற்சியில் ஒலுவில் பாலமுனை மக்கள் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டதையும் இச்சண்டை கொலையில் சென்று முடிந்ததையும் இங்கு நினைவுகூர வேண்டி இருக்கின்றது.)

எனவே, இச்சம்பவங்களின் பின்னணியை அல்லது இலக்கை இவ்வாறு தான் நோக்க வேண்டியிருக்கின்றது. இக்கிராம மக்களை தொடர்ச்சியாக சிறு,சிறு தொல்லைகளைக் கொடுத்து அச்சத்துக்குள்ளாக்கி அவர்களுக்கு அக்கிராமத்தில் வாழும் விருப்பை மெதுமெதுவாக அகற்றி அகப்படும் விலைக்கு தங்கள் காணியை விற்றுவிட்டு வெளியேற வைப்பதுவும், ஏலவே 90களில் இடம்பெற்ற கலவரங்களினால் இடம்பெயர்ந்து இன்னும் மீளக்குடியேறாமல் இருக்கும் ஏனைய மக்களை நிரந்தரமாகவே மீளக் குடியேறாமல் பார்த்துக் கொள்வதுமாகும். (அக்கிராம மக்களின் தற்போதைய வாழ்நிலையைத் தெரிந்து கொள்வதன் மூலம் இப்பின்னணியை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.) இந்த இலக்கை அடைவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட வழிகளில் ஒன்றுதான் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுவது. எந்த ஒரு சமூகத்திலும் பெண்களின் மீதான ஒடுக்குமுறை, பலாத்காரம், சேட்டைகள் என்பது அதிகமாய் உளவியல் தாக்கத்தைக் கொடுக்கும் ஒன்று என்பதை நன்கறிந்தே. இந்த வழியினை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள்.

எவ்வாறெனினும் அவர்கள் மக்களை அச்சுறுத்தியமையும், அவர்களின் நிம்மதியான வாழ்வைக் குலைத்தமையும், பெண்கள் மீது சேட்டை என்பதை ஒரு கருவியாக எடுத்துக்கொண்டு அங்குள்ள பெண்களின் உணர்வுகளை பாழடித்தமையும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயங்கள். ஆனால், அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அரசியல் நிறுவனங்களும், இது பற்றிய பிரக்ஞையே இல்லாது அலட்சியமாய் இருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளுக்கென்ன, அடுத்து வரப்போகும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் இம்மக்களின் வாக்குகள் எந்தவொரு தமிழ்ப் பிரதேச சபைக்குள்ளும் அடங்கப் போவதில்லையென்பதால் இந்த விடயத்தில் தலையிட என்ன இருக்கிறது?

வேண்டுமென்றால், பாராளுமன்றத் தேர்தல் சமயத்தில் இப்படியொரு சம்பவம் இடம்பெறுமென்றால் நான் முந்தி, நீ முந்தி என விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து பார்வையிட்டு பின் அறிக்கையும் விட்டிருப்பார்கள். 130 குடும்பங்கள் என்ன 1300 குடும்பங்கள் இருந்தால் கூட இவர்களின் வாக்குப்பட்டியலுக்குள் சேராமல் இருப்பது யாரின் தவறு? இம்மக்களின் தவறல்லவா!

சரி, இப்போது அம்மக்களின் வாழ்நிலையும் மன நிலையும் என்ன தெரியுமா? இரவினில் 4-5 வீடுகளைச் சேர்ந்தவர்கள் ஓரளவு வசதியானதும் பாதுகாப்பானதுமான வீட்டினில் ஒன்று கூடி (மரண வீடுகளில் ஒன்று கூடுவதைப்போல) பெண்கள் வீட்டினுள் நெருங்கிக்கிடக்க, ஆண்கள் வெளியே தென்னை மரங்களின் கீழும், பனியிலும் நடுநிசியின் பின் முறை வைத்துத் தூங்குகிறார்கள். இது வாழ்நிலை.

"மீண்டும் 90ம் ஆண்டைப் போல் வருமுன் வீடு வளவுகளை விற்றுவிட்டு போவோம் என யோசிக்கின்றோம்" இது அவர்களின் மனநிலை. (இதுதானே அச்சுறுத்தல்காரர்களின் இலக்கும்.) முக்கியமான விவரங்கள் யாவும் சேகரித்து முடிந்தபின் விடைபெறும்போது ஒட்டுமொத்தமாக அவர்கள் எல்லோரும் எம்மிடம் கேட்ட கேள்வி

"தம்பி எங்களுக்கென்ன பாதுகாப்பு?"

நானும் நண்பர்களும் ஒருவரை ஒருவர் பார்த்து அசடுவழிந்து கொண்டோம். "எங்களால் இயன்றளவு முயற்சி செய்கின்றோம். இன்னும் சில நாட்களுக்கு இப்போது இருப்பதைப் போலவே கொஞ்சம் கவனமாய் இருங்கள்" அவர்களுக்கு ஆறுதல் சொல்ல இதைவிட எங்களிடம் கனதி இருக்கவில்லை.

அந்திபடும் நேரத்தில் வியர்த்துக் களைத்த உடலோடு மெதுவாக சைக்கிளை உழக்கியபடி நானும், என் நண்பர்களும் திரும்பிக் கொண்டிருந்தபோது, மனித உரிமைகள், சமூக நலம், பாதிக்கப்பட்ட பெண்கள், அபிவிருத்தி... போன்ற பல கவர்ச்சிகரமான பதங்களைத் தாங்கியபடி அக்கரைப்பற்றுத் தமிழ்ப் பிரதேசத்தின் மூலை முடுக்குகளெல்லாம் தொங்கிக் கொண்டிருக்கும் அறிவுப் பலகைகள் எம்மைப் பார்த்து உரத்துச் சிரித்தன.

"தம்பி எங்களுக்கென்ன பாதுகாப்பு?" எனக் கேட்டபடி வீதிவரை எம்மை வழியனுப்ப வந்த அம்மக்களின் ஆழ விழிகள் மௌனமாய் அழுந்தன.

**- யுவேந்திரா, நியாஸ், கஸ்ஸாலி**

நன்றி - நூலகத்திட்டம்



# முறையான கல்வியைப் பெற்ற சமுதாயமே தன்னை விடுவித்துக்கொள்ள முடியும் !

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி நிலை பற்றிக் காலத்துக்குக் காலம் பலவிதமான செய்திகள் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்றன. அவை சிலவேளை எதிரும் - புதிருமான கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் உள்ளன.

பேராசிரியர் ஒருவர் தமது அண்மைக்காலக் கட்டுரை ஒன்றில் பிரச்சினைகள் மிகுந்த இக்காலகட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்ட உயர்தர கல்விப்பேறுகள் உயர்வாகவே உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மைக் காலத்தில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அவர்களின் பத்திரிகைப் பேட்டியின் போது, கல்முனை மாவட்டம் சாதாரணப் பெறுபேற்றில் இலங்கையிலேயே சிறப்பாக உள்ளதாகவும்ஆனால் ஒட்டு மொத்தமாகக்கல்வி வீழ்ச்சி அடைந்து வருவதாகவும் கூறியுள்ளார். அத்தோடு அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், தமது கடமைகளைச் சிறப்பாக செய்வதாகவும் கூறியுள்ளார். அப்படியானால், இன்றைய போர்ச் சூழலால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், பாடசாலைகள் அழிந்தமை, காகிதாதிகள் பெற்றுக் கொள்வதில் தடைகள், இரசாயனப் பொருட்கள், விஞ்ஞான உபகரணங்கள், கம்பியூட்டர்கள் எடுத்துச் செல்வதற்கான அரசின் தடைகள், பாரபட்சமான அரச நிதி ஒதுக்கீடுகள், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஆசிரியர், மாணவர்களின் மனோ நிலையில் ஏற்பட்டுள்ள தாக்கம், பாடநூல்கள், பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் கிடைக்காமை போன்ற இன்னோரன்ன காரணங்கள் தான் கல்வி வீழ்ச்சிக்குக் காரணங்களெனக் கொள்ளலாமா?

எமது கல்வி வீழ்ச்சிக்கு நடைபெறும் போர் மட்டும் காரணியல்ல இன்னும் பலவுண்டு.

ஒரு புறம் சிறப்பான கல்வி நடைபெறுவதாகக் காட்டப்படுகிறது. மறுபுறம் கல்வி வீழ்ச்சி எனக் காட்டப்படுகிறது. சிறப்பான கல்வி எனக்காட்டுபோது, தேர்வுப்பெறுபேறுகளைக் கணிப்பீட்டுக் கருவியாகக் கொள்வதும், கல்வி வீழ்ச்சியெனக் [illegible]ம்போது கற்றலுக்கான சூழ்நிலை ப[illegible]ள்வதும், பண்புசார் நடத்தைகளைக் [illegible]டுவதும் கவனிக்கத்தக்கது.

மாணவர்களின் கல்விப் பெறுபேறு பற்றி மதிப்பிடும்போது தேர்வுப் பெறுபேறுகளைக் கொண்டு அவை தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை அறிந்த கல்விச் சமூகத்தினர், இன்னமும் தேர்வுப் பெறுபேற்றை அளவு கோலாகக் கொண்டு அறிக்கைகள் விடுவதும், மாணவர்களைத் தேர்வுக்காகவே தயாரிக்கும் பணியைச் செய்து கொண்டே, வாழ்க்கைக்குக் கல்வி யாவருக்கும் சமகல்வி வாய்ப்பு, பூரண மனிதராக்குவதற்கான கல்வி என அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதும் அர்த்த முள்ளதாகவில்லை.

ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தனது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கான வாழ்க்கைக் கல்வியைப் பெறுவதற்குரித்துடையவர்கள் எனச் சிறுவர் உரிமைச்சமவாயம் கூறுகிறது. வாழ்க்கைக் கல்வி என்பது அடிப்படை அறிவு, பொருளாதார வளம், சமூக நீதியுணர்வு, நாட்டின் நற்பிரஜைக்குரிய குணாதிசயங்கள் ஆகிய முக்கிய நான்கு பண்புகளைக் கொண்ட கல்வியாகும் இத்தகைய கல்வியைப் பெறுவதற்கான கல்வி வாய்ப்புக்களை மாணவர்கள் யாவருக்கும் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் வாழ்வை வளம்படுத்தும் பணியை கல்விச் சமூகம் செய்ய வேண்டும் என்பது சமூகத்தினதும், சிறுவர்களினதும் எதிர்பார்ப்பாகும்.

ஆனால், நடைபெறுவது என்ன? இன்னமும் மாணவரைத் தெரிவுக்குத் தயாரிக்கும் போக்கில் வெறும் அறிமுகக் கல்வியை ஊட்டும் நிலையங்களாக பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதும், சில மாணவரின் தேர்வுப்பெறுபேறுகளைப் பத்திரிகைகளில் பிரசுரித்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகளினதும், திணைக்களங்களினதும் நடவடிக்கைகளை எவ்வாறு மனங்கொள்வது? ஏன் செயல் முறையான கல்வி நடைபெறவில்லை? பாடசாலைகளில் உள்ள ஆய்வுகூடங்கள், நூலகங்கள், வேலைத்தளங்கள், விளையாட்டிடங்கள் ஏன் முறையாக இயங்கவில்லை? எல்லா மாணவர்களும் ஏன் இவற்றில் ஈடுபடுத்தப்படவில்லை? எல்லா மாணவரையும் ஏன் துணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தவில்லையெனக் கேட்டால் கல்விச் சமூகம் கூறும் பதில்-தேர்வுக்கு இவை எதுவும் கவனத்துக்கு எடுக்கப்படுவதில்லை என்பதும், திணைக்கள அதிகாரிகள் தேர்வுப் பெறுபேற்றையே அக்கறையாகக் கேட்கிறார்களே தவிர ஏன் செயல்முறைக் கல்வி நடைபெறவில்லையென்று கேட்பதும் இல்லை. எல்லா மாணவரையும் துணைப் பாடவிதான நிகழ்ச்சியில் ஏன் ஈடுபடுத்துவதில்லை எனக் கேட்பதில்லையெனவும் கூறுவர். அதிகாரிகளைப் பொறுத்தளவில் துணைப்பாடவிதான நிகழ்ச்சிகளில் வருடாந்த விளையாட்டுப் போட்டியை நடாத்திக் காட்டினால் திருப்திப்பட்டுக் கொண்டு போய் விடுவார்கள். ஏன் ஏனைய துணைப்பாடவிதான நிகழ்ச்சிகளை நடாத்தவில்லையே என அவர்கள் கேட்பதுமில்லை. ஆதலால், நாம் செய்வதுமில்லை எனும் பாங்கில் பேசும் அதிபர்கள், ஆசிரியர்கள், முதன்மையாசிரியர், அதிகாரிகள் ஆகியோரையும் சந்திக்கின்றோம். அப்படியானால், நிறைந்த தேர்வுப் பெறுபேறுகளுக்காக கற்பிக்க முயற்சித்தீர்களே. தேர்வுப்பெறுபேறுகள் மிகக் குறைவாகவுள்ளனவே என்ன காரணம் எனக் கேட்டால் புத்திசாலிப் பிள்ளைகள் மிகக் குறைவாகவே உள்ளனர். சூழல் சரியில்லை. எல்லாரையும் சித்தியடைச் செய்ய முடியுமா? எனக் கேள்வியும் கேட்பார்கள். இன்றைய சூழல் கற்றலுக்கமைவாக இல்லை என்பார்கள். முடிவு தேர்வுக்காக மாணவரைத் தயாரிக்கும் முயற்சியிலும் வெற்றியில்லை. இந்நிலையானது வாழ்க்கைக் கல்வியைப் பெறும் சிறுவர் உரிமை மதிக்கப்படாததையும், எல்லா மாணவருக்குமான சமகல்வி வாய்ப்பும் கிட்டாததையும் காட்டுகிறது. இன்று அனேக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பௌதீக வளங்கள் மாணவருக்குப் பெருமளவு பயன்படவில்லை. பொருளாதார வசதிமிக்க பெற்றோரை உள்ளடக்கியதும், அரசியல் செல்வாக்கு மிக்கதும், அதிகாரிகளின் செல்வாக்கு மிக்கதுமான பாடசாலைகள் மாடிக்கு மேல் மாடி கட்டியும் பல மில்லியன் ரூபா செலவில் ஒன்றுகூடல் மண்டபங்கள் அமைத்துவர, கிராமப்புறங்களிலும், அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் அமைந்துள்ள பாடசாலைகளோ அடிப்படை வசதிகளான மலசல கூடம், நீர்வசதி, படிப்பதற்கு ஓலைக் கொட்டில் கூட இல்லாத நிலையில் கல்வி நடவடிக்கைகளை தொடர்வனவாகவுள்ளன.

நகர்புறத்தே ஆசிரியர் பற்றாக்குறை வீதத்திற்கு அளவுக்கதிகமாக உள்ளனர். ஆனால், கிராமப்புறங்களிலோ ஆசிரியர் தட்டுப்பாடு உயரளவில் நிலவுகிறது. அதிகாரிகள் இப்பிரதேச பாடசாலைகளைத் தரிசனம் செய்வது குறைவு. முதன்மையாசிரியர் சேவை கிட்டுவதில்லை. பௌதீக வளப்பங்கீடுகள் சமனில்லை. ஒரு பணிப்பாளர் நகரில் நீண்ட காலம் கடமையாற்றிய ஆசிரியரைக் கிராமப் புறத்துக்கு அனுப்பினால் அரசியல்வாதிக்கு மறுமொழி கூற வேண்டும். இறுதியில் இடமாற்றம் ரத்து - அரசியல் செல்வாக்கு, ஆசிரியர் சங்கச் செல்வாக்கு இருந்தால் அவர்கள் நகரிலும் இருக்கலாம். எப்படியும் படிப்பிக்கலாம் என்ற நிலை.

பாட ஆயத்தம் செய்து செயல்முறையாக மாணவருக்குப் படிப்பிப்பது ஆசிரியர் உரிமையை மீறும் செயல் எனக் கருதும் காலம் இது. 42 நாள் விடுமுறையையும் முழுமையாக எடுத்து முடிப்பது தான் ஆசிரியர் உரிமை எனவும், விடுமுறை காலங்களில் சேவைக்காலக் கல்வியை பெற்றுத் தனது கல்வித் தகைமையை உயர்த்தி உயர் பெறுபேற்றுக்கான கல்வியை மாணவருக்குக் கற்பிப்பது ஆசிரியர் உரிமை மீறப்படுவதாகக் கூக்குரலிடும் காலமிது. அரசு மேலதிக கொடுப்பனவுகளைச் செய்யவில்லை என்பதற்காக திணைக்களம் கூட்டும் கூட்டங்களில் பங்கேற்காமல் அதிபர்கள் இருப்பதும், புதிய கல்விச் சீர்திருத்தங்களைக் காலத்துக்கு அறிந்து பாடசாலையில் நடைமுறைப்படுத்தாது அதிபர்கள் பலர் இருப்பதும் இன்றைய நாகரீகமாவுள்ளது. இவற்றையெல்லாம் கண்டும் காணாததுபோல அதிகாரிகள் இருப்பதுவும் நாகரீகம் ஆகவுள்ள காலமிது. இன்று அதிபர் உரிமைகள், ஆசிரியர் உரிமைகள், அதிகாரிகள் உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்படுவதற்கான முயற்சிகள், அறிக்கைகள், பகிஷ்கரிப்புக்கள் நடைபெறுகின்றன. ஆனால், இந்த ஏழைச் சிறார்களின் கல்வியுரிமையை நிலை நாட்டுவதற்கு மட்டும் யாருமில்லை. ஏனென்றால், அவர்கள் வாயில்லாத சீவன்கள். தங்கள் உரிமைகள் எவை என்பதையே விளங்கிக் கொள்ளும் ஆற்றலை எட்டாதவர்கள். அவர்களின் கல்வியுரிமை எவை என்பதோ, எவை மீறப்படுகின்றன என்றோ கூற விளக்கமில்லாதவர்கள். அவர்களுக்காக குரல் எழுப்புவதற்கு யாருமில்லை. வருடாந்த பாடத்திட்டங்கள் முடிந்தாலும் ஒன்றுதான். முடிக்காவிடினும் ஒன்றுதான்.

பாடசாலையில் மாணவர்கள் பெறவேண்டிய முறையான அடிப்படைக் கல்வியைக் கூடப் பெமுடியாது அல்லலுறும் மாணவர்களிடமிருந்தே பணத்தைப் பெற்று ரியூசன் என்ற போர்வையில் சுரண்டுவதும் அதே கற்ற சமூகம் தான் என்பதை நாம் மறக்க முடியாது. என் பிள்ளை பாடசாலைக் கல்வி முறையினால் எவற்றை அடைய வேண்டும்? எவ்வளவை அடைய வேண்டும்? என்பதையெல்லாம் விளங்கிக்கொள்ள வாய்ப்பில்லாத பெற்றோர் ரியூசனே மருந்து எனக்கருதி அலைவதும் பரிதாபத்துக்குரிய நிலையாகும். தனது பிள்ளையின் கல்வி உரிமை பாடசாலையில் நிறைவேறவில்லையே என்று துக்கிக்கும் பெற்றோர்கள் தமது "பிள்ளைகளின் பாடசாலைக்குச் சென்று பிள்ளையின் கல்வி உரிமையை நிலை நாட்டுங்கள்" என்று அதிபரைக் கேட்டால், பிள்ளைகள் பழிவாங்கப்பட்டு விடுவார்களோ என்று அஞ்சும் காலமிது. வடக்கு கிழக்கு மாணவர் கல்வி மட்டுமல்ல தமிழர் கல்வி தொடர்பாக மாறி மாறி வரும் அரசுகள் காட்டும் பாரபட்சமான நடவடிக்கைகள் இன்று, நேற்று தொடங்கியவை அல்ல. 1958ஆம் ஆண்டிலேயே சிங்கள மொழிச்சட்டம் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்தே வெளித் தெரிய ஆரம்பித்தது. அன்று தொட்டு இன்றுவரை பாரபட்சங்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்தப் பாரபட்சமான நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்ற காரணத்தால் காலத்துக்குக் காலம் தமிழர் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திலும், வெளியிலும் சாத்வீக முறையில் பல போராட்டங்களை நடத்தியபோதெல்லாம் அவை அடக்கியொடுக்கப்பட்டன. அவற்றின் விளைவே இன்றைய அரசியல் நிலையாகும். தமிழர்களின் அடிப்படை உரிமைகளே மீறப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழர் கட்சிகள் அரசுடன் இணைந்து கொண்டு நாடகம் ஆடிக் கொண்டிருப்பதும் யாரும் அறியாததல்ல. அன்றும், இன்றும் தமிழர் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோர் வேண்டுகோள் விடுப்பவர்களாகவேயுள்ளனரன்றி, உரிமைகளை நிலைநாட்டுபவர்களாகவில்லை. இந்த நிலையில் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமை மீறல்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் அரசு தீர்க்கும் என்று கருதி அறிக்கை விட்டு காலம் கழிப்பது அர்த்தமுள்ள செயல்களாகக் கொள்ள முடியாது. விடுக்கப்பட்ட அறிக்கைகள் காற்றோடு போன கதை நாமறியாதது அல்ல. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெறும் அறிக்கை வீரர்களாக எம்மை இனங்காட்டி சுயலாபம் அடைய நினைக்கும் பலரும் எம்முள் உள்ளனர். தாம் மாணவ சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணித்து விட்டு அறிக்கை வீரர்களாகச் செயற்படுபவர்களை மக்கள் இனங் காணாமலும் இல்லை.



**எங்கள் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அறிக்கை விட யாருக்கும் உரிமையுண்டு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், அவர் தான் சம்பளத்துக்காக செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணித்துவிட்டு மாணவரின் முறையான கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதகமாக இருந்துகொண்டு அறிக்கைவிடுவதுதான் பாதகமாகும்.**

எங்கள் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அறிக்கை விட யாருக்கும் உரிமையுண்டு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், அவர் தான் சம்பளத்துக்காக செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணித்து விட்டு மாணவரின் முறையான கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதகமாக இருந்து கொண்டு அறிக்கை விடுவது தான் பாதகமாகும். "அறிக்கை வெறும் புண்ணுக்குப் புனுகு பூசும்" செயலாகக் கூடாது. புனுகு பூசுவதால் புண்ணிலிருந்து வரும் துர்நாற்றம் குறைந்து போகலாம். ஆனால், அதுவல்ல வேண்டப்படுவது. வேண்டப்படுவது புண் அடியோடு மாற்றப் படுவதேயாகும். தமிழர் கல்வி அரசு திட்டமிட்டே புறக்கணிப்பதாக யாரும் கருதினால், அதே அரசிடம் கோரிக்கை விடுவதில் அர்த்தமில்லையே. சர்வதேச சமுதாயத்துக்கு இங்கு நடைபெறுவது தெரியாதது எனக் கருதினால் அது அறியாமை. அவர்கள் தமது நலனுக்கு எது பொருத்தமோ அதையே செய்வார்கள். அவர்கள் எமக்கு ஏதும் செய்வார்கள் என நாம் நம்பியிருப்பது அர்த்தமுள்ளதல்ல. அரசு மனம் மாறி எமது உரிமைகளைத் தரும். எங்கள் பிள்ளைகளின் கல்வி சீராகும் என்று யோசித்துக்காலம் கழிப்பதா? எங்கள் பிள்ளைகளின் கல்வியுரிமையை நாமே மதித்து ஆக வேண்டியதைச் செய்வதா என்பதே இன்றைய கேள்வியாகும்.

நாம் நாமாகவே சிந்தித்துச் செய்ய வேண்டியவை எவை?

1. எங்கள் வரலாற்றைச் சிங்கள அறிஞர்கள் சொல்லித்தர நாம் எமது பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும் என்பதில்லை. நாங்கள் வந்தேறு குடிகள் அல்லவெனில், எமது உண்மையான வரலாற்றை நமது ஆசிரியர்களும், அதிபர்களும் சொல்லிக் கொடுப்பது தானே. இதன்பொருட்டு ஆசிரியர்களை வழிப்படுத்துவது ஆசிரியர் சங்கங்கள், அதிபர் சங்கங்கள், அதிகாரிகள் சங்கங்கள் கடமையன்றோ.
2. எமது கிராமப்புறக் கல்வி நிலையை மேலும் வீழ்ச்சியடையாமல் பார்த்துக் கொள்ளவும். நகர்ப்புற ஆசியர்களைக் கிராமப் புறங்களுக்குப் பகிர்ந்து கொள்ளவும், முன்னின்று ஏற்பாடு செய்தல். சங்க அங்கத்தவர்கள் என்பதால் நகரில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை விட்டு ஏனையவர்கள் அந்த வேலைகளைச் செய்யவிட்டு விட்டு தாங்களே முன்னுதாரணமாகக் கிராமத்துக்குச் சென்று கடமையாற்றுதல். அங்கு கடமையாற்றியவர்கள் இடம் மாறிக் கொள்ள வாய்ப்பளித்தல்.
3. வாழ்க்கைக் கல்வியின் தாற்பரியம் உணர்ந்து செயல்முறைக் கல்வியை ஆசிரியர்கள் முன்னெடுப்பதற்கு வேண்டிய பொருத்தமான வழி காட்டல்களையும், ஆலோசனைகளையும் சங்கங்கள் முன்னின்று செய்தல்.
4. இடப்பெயர்வுகளாலும், ஏனைய போர் நடவடிக்கைகளாலும் பாதிப்புற்ற கல்வியைச் சீர்படுத்த இயன்றளவு விடுமுறைகளைக் குறைத்து போதிய ஆயத்தங்கள் செய்து முறையான கல்வியை மாணவர்களுக்கு வழங்க ஆசிரியரை வழிநடத்தல்.
5. கிடைக்கின்ற வளங்களைத் தேவையினடிப்படையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பங்கிட்டு வழங்கவும், பங்கிட்டுக் கொள்ளவும் அதிகாரிகளும், அதிபர்களும், ஆசிரியர்களும் முன்வருதல்.
6. அரச பௌதீக வளங்கள் கிடைத்தால் தான் கல்வி என்று கூறிக்கொண்டிராமல் பிரதேசத்தில் இருக்கக் கூடிய வளங்களைத் தேவையினடிப்படையில் பங்கிட்டும், புதியவற்றை வடிவமைத்துக் கற்பித்துப் பயனுள்ள கல்வித் தேர்ச்சியை எல்லா மாணவரும் அடையச் செய்தல்.
7. தேர்வுக்காகப் பிள்ளைகளைத் தயாரிக்கிறோம் என்று கூறிக்கொண்டு முறையான வாழ்க்கைக் கல்வி கொடுக்காமல் இருக்கும் கற்பித்தல் நுட்பங்களைக் கைவிட்டு பயனுள்ள கல்வி நுட்பங்களைப் பின்பற்றக் கூடியதாக ஆசிரியர், அதிபர், அதிகாரிகள் ஆகியோர் தம்மை வளப்படுத்திக் கொள்ளல்.

— 16

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியா:

# சரிந்து செல்லும் காங்கிரஸ்! மீண்டும் உயிர்த்தெழுமா?

இந்தியாவில் மீண்டும் ஒரு தடவை காங்கிரஸ் பிளவுப்படுதல் என்பது தற்போது உறுதியாகிவிட்டது. சுதந்திரத்திற்கு பின்னர் காங்கிரஸ் கட்சி ஐந்தாவது தடவையாகப் பிளவுபடுகின்றது. இந்தத் தடவை இப்பிளவுபடுதலுக்கு கொடுக்கும் விலை சற்று அதிகமானது. கட்சியைவிட்டு வெளியேறுகின்றவர்கள் பிரபலமான செல்வாக்குள்ள தலைவர்கள்.

ஒருவர் மகாராஸ்டிர மாநிலத்தின் அசைக்க முடியாத தலைவர் எனக்கருதப்படும் சரத்பவார். கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் காங்கிரஸ் குழு தலைவராக இருந்ததோடு காங்கிரஸ் ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவர். நரசிம்மராவுக்குப் பின்னர் பிரதமராக வரத்தகுதியுடையவர் என்றும் கருதப்பட்டவர். ராஜீவ்காந்தி காலத்தில் இருந்தே நேரு குடும்பத்திற்குப் போட்டியாக நின்றவர்.

மற்றையவர் வட-கிழக்கு மாநிலங்களில் முக்கிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருக்கும் முன்னாள் சபாநாயகர் சங்மா வடகிழக்கு மாநிலங்களில் எழுச்சி பெற்றுள்ள மாநிலக் கட்சிகளுக்கும் சுயாட்சி, தனிநாடு கோரும் போராட்ட இயக்கங்களுக்கும் "முகம்" கொடுத்து காங்கிரஸ் கட்சியை வளர்த்தவர்களில் ஒருவர் இவர்.

மூன்றாமவர் தாரிக் அன்வர் என்ற முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். பாபர் மசூதி பிரச்சினையில் மௌனமாக இருந்ததன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் எதிர்ப்பைக் காங்கிரஸ் பரவலாக சம்பாதித்த போதும் காங்கிரஸின் முஸ்லிம் வாக்கு வங்கி முழுவதுமாக சிதறிப் போகாமல் பாதுகாப்பதில் முன்னின்றவர்.

இப்புகழ்பெற்ற மூவரும் சோனியா காந்தி பிரதமராக வரக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக விசாரணை எதுவுமின்றி கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். சோனியா ஆட்சிக்கு வந்தால் இவர்களின் செல்வாக்கினைக் குறைக்கும் நடவடிக்கைகளில் இறங்கப் போகின்றார் என முன்கூட்டி அறிந்தே சோனியா பிரதமராவதைத் தடுக்கும் முயற்சியில் இவர்கள் இறங்கியதாகவும் தகவல்கள் அடிபடுகின்றன.


வெளியேற்றப்பட்டவர்கள் புதிய கட்சியொன்றை உருவாக்கப்போவதாகவும், தற்போது அறிவித்துள்ளனர். கட்சிக்குள் இருக்கும் பல அதிருப்தியானவர்களும் இவர்களுடன் இணைந்து விடுவதற்குத் தயாராக உள்ளனர் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் காங்கிரஸிலிருந்து வெளியேறிய மேற்கு வங்காளத்தின் பெண்புலி மம்தா பானர்ஜி, சரத்பவார் தலைமையில் அமையப்போகும் புதிய கட்சியுடன் தனது திரினாமூல் காங்கிரஸ் கட்சி கூட்டணி வைத்துக்கொள்ளத் தயாராக இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

தேர்தல் கூட்டணி உடன்பாடு தொடர்பாக கடந்த 12ஆம் திகதி ஜெயலலிதாவைச் சந்தித்த சரத்பவார் 16ஆம் திகதி சோனியாவுக்கு எதிரான அறிக்கையை விடுத்தமையானது ஜெயலலிதா-சுவாமி கோஸ்டிக்கும் சரத்பவாரின் அறிக்கைக்கும் இடையே தொடர்பிருக்கின்றதா என்ற சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது. தன்னை ஆசை காட்டி, பின்னர் ஏமாற்றி நடுத் தெருவில் விட்ட சோனியாவுக்கு இதன் மூலம் ஒரு பாடம் படிப்பிக்க ஜெயலலிதா முற்படலாம் எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நேரு குடும்பத்தவர்களுக்கு எதிரானவர்களை வெளியேற்றும் போக்கு இப்போது தான் ஆரம்பமாகியதா?

நேரு குடும்பத் தலைமைக்குப் போட்டியாக வரும் இரண்டாம் மட்டத் தலைவர்களை தலைமைக்கு வரவிடாமல் தடுப்பதும் அதைமீறி அவர்கள் போராட்டம் நடத்தினால் கட்சியை விட்டு வெளியேற்றுவதும், அல்லது வெளியேறும் சூழலை உருவாக்கும் சம்பவங்களும் இன்று நேற்று நடப்பவை அல்ல. நேரு குடும்பத்தின் நேரிடை வாரிசான இந்திரா காந்தி காங்கிரசுக்கு தலைமை ஏற்ற காலம் தொடக்கமே இது நடைபெறுகிறது.

இந் நேரு குடும்பத் தலைமை எவ்விதக் கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்ட சர்வ அதிகாரம் படைத்த தலைமையாக விளங்குவதையே விரும்பியது. அதற்கேற்ற வகையிலேயே கட்சியையும் ஒழுங்கமைத்தது. அவர்களைப் பொறுத்தவரை நேரு குடும்பம் என்பது இந்தியாவையும், காங்கிரஸ் கட்சியையும் ரட்சிப்பதற்காக தெய்வத்தினால் அனுப்பப்பட்ட ஒன்று, ஏனையவர்கள் அனைவரும் அவர்களுக்கு கை கட்டி வாய் பொத்தி நின்று சேவகம் செய்வதற்கு கடமைப்பட்டவர்கள். அவர்கள் செய்த செய்யாது விட்ட எக்கருமங்கள் தொடர்பாகவும் கேள்வி கேட்கக் கூடாது நேரு குடும்பத்திற்கு கட்சியினர் யாராவது தொந்தரவு செய்தால் அவர்கள் அரசியலை விட்டு ஒதுங்கி விடுவார்கள். பின்னர் கட்சியையும் இந்தியாவையும் ஒருவராலும் பாதுகாக்க முடியாது. அவர்கள் தொடர்ந்து அரசியலில் இருக்க வேண்டுமானால் அவர்களால் கிடைக்கும் நன்மைகளையிட்டு சந்தோஷம் கொள், தீமைகளை சகித்துக்கொள் காங்கிரஸ் வீழ்ந்தாலும் இந்தியா வீழ்ந்தாலும் மீளத்தூக்கி நிறுத்துவதற்கு நேரு குடும்பமே வரவேண்டும். கட்சியின் செயற்குழு, மத்தியகுழு, பொதுக்குழு



என்பனவெல்லாம், இவர்களின் விருப்பங்களை நிறைவேற்றவும் அவர்களின் புகழ்பாடவும் உருவாக்கப்பட்ட பொம்மை நிறுவனங்களே. நேரு குடும்பத்தவர்கள் அல்லாதவர்கள் எவரும் கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களாக வரக்கூடாது. நேரடி வாரிசுகள் மட்டும் இரண்டதம் மட்டத் தலைவர்களாக வரலாம். ஏனைய உறவினர்கள் கட்சியின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கலாம். உறவினர்கள் அல்லாதவர் சற்றுத் தூரவே நிற்கவேண்டும். நேரு குடும்ப விசுவாசகள் மட்டும் வேண்டுமானால் கிட்ட வரலாம்.

இவையெல்லாம் காங்கிரசின் வரலாற்றில் எழுதப்படாத விதிகள். காங்கிரசில் ஏற்பட்ட தொடர்ச்சியான பிளவுகளும் வாரிசுத் தலைமைகளும் இதன்படியே ஏற்பட்டன. நேரு இறக்க இந்திரா, இந்திரா இறக்க ராஜிவ், ராஜிவ் இறக்க சோனியா என எல்லாம் எழுதப்படாத இயங்குவிதிகளின்படியே நடைபெறுகின்றன.

1969இல் காங்கிரசில் முதற்பிளவு ஏற்பட்டது. அப்போது ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக காங்கிரஸ் செயற்குழு காங்கிரசின் மூத்த தலைவர்களின் ஒருவரான நீலன் சஞ்சீவ ரெட்டியை நிறுத்தியது. பிரதமராக இருந்த இந்திரா காங்கிரஸ் விதிகளை மீறி வி.வி.கிரியை வேட்பாளராக நிறுத்தினார். தேர்தலில் ஆதரவைப் பெற்ற பிரதமர் வீ.வீ.கிரி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து காங்கிரஸ் செயற்குழு இந்திராவை கட்சியை விட்டு வெளியேற்றியது. இந்திரா, இந்திரா காங்கிரஸ் எனும் அமைப்பை உருவாக்கினார். நேரு குடும்பக் கவர்ச்சியினால் காங்கிரசின் பெரும்பான்மை இந்திராவுடன் சென்றது. இந்திராவின் தனி ஆதிக்கத்துக்கு எதிராக போராடிய மூத்த தலைவர்களான காமராஜர், நிஜலிங்கப்பா, நீலம் சஞ்சீவ ரெட்டி போன்றவர்கள் தனித்து விடப்பட்டனர். அதுவும் 1966இன் பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி திடீர் மரணமடைந்ததைத் தொடர்ந்து காங்கிரசின் தலைவராக இருந்த காமராஜர் தான் பிரதமர் பதவியை பொறுப்பெடுக்காமல் இந்திராவை பிரதமராக பதவியேற்கச் செய்திருந்தும் அவர் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

1977இல் இந்திராவின் நெருக்கடி நிலைக்கால சர்வாதிகாரத் தன்மை விமர்சித்ததன் காரணமாக புறந்தள்ளப்பட்டதால் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களான ஜகஜீவன் ராம், பகுகுணா போன்றவர்கள் வெளியேறினர். 1989இல் ராவ் காந்தியின் சர்வாதிகாரத் தன்மையை எதிர்த்து வி.பி.சிங் தலைமையிலான குழுவினர் வெளியேறினர். அவர்களால் ஜனதா தளம் எனும் கட்சி உருவாக்கப்பட்டது.

1991இல் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1996 வரை சிறிதுகாலம் நேரு குடும்பத்தின் நேரடி தலைமை இல்லாது இருந்தது. எனினும் மறைமுகமாக நேரு குடும்பம் கட்சியில் ஆதிக்கம் கொண்டிருந்தது. இக்காலத்தில் திவாரி, அர்ஜன் சிங், வாழப்பாடி ராமமூர்த்தி, மூப்பனார் போன்றோர் கட்சியை விட்டு வெளியேறினர். திவாரி, அர்ஜுன் சிங், வாழப்பாடி ராமமூர்த்தி போன்றோர் திவாரி காங்கிரஸ் என்ற அமைப்பையும், மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸ் எனும் அமைப்பையும் உருவாக்கினர். வாழப்பாடி ராமமூர்த்தி பின்னர் 1998இல் தமிழக ராஜிவ் காங்கிரஸ் எனும் அமைப்பை உருவாக்கினார். இக்காலத்தில் மேற்கு வங்காளத்தில் காங்கிரலிருந்து வெளியேறிய மம்தா பானர்ஜி திரினாமூல் காங்கிரஸ் எனும் அமைப்பை உருவாக்கினார்.

தற்போது மீண்டும் ஒரு தடவை கட்சி பிளவுபட்டுள்ளது. அதுவும் சோனியா தலைமையில் கட்சி புத்துணர்வு பெற்று வந்து கொண்டிருக்கும் சூழலிலேயே பிளவுபட்டுள்ளது.

கட்சியின் பிளவுகள் தேசிய அளவில் மட்டுமல்லாது மாநில அளவிலும் பல தடவை நடந்தேறியுள்ளன. மூப்பனார், மம்தா பானர்ஜி, வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் வெளியேறியமை மாநில அளவிலான பிளவுகளையே காட்டுகின்றன.

மாநில ரீதியான பிளவுகளுக்கு கட்சித் தலைமை மாநிலப் பிரிவுகளில் நலன்களின் போதிய அளவு அக்கறை காட்டாமையே காரணமாகும். கட்சித் தலைமை மாநிலப் பிரிவுகளை மத்தியில் தாம் ஆட்சியைப் பிடிப்பதற்கு அதிகளவிலான கதிரைகளைப் பெற்றுத்தரும் இயந்திரங்களாகவே கருதுகின்றது. மத்தியின் கதிரை நலன்களுக்காக மாநில அரசியலுக்கு ஒத்துவராத விடயங்களில் ஈடுபடும்படியும் மாநிலப்பிரிவுகளை அது வற்புறுத்துகின்றது. சிறு சிறு விடயங்களில் கூட முடிவெடுக்கமுடியாத நிலையில் மாநிலப்பிரிவினர் விடப்பட்டனர்.

மாநிலத்தின் போட்டிக் கட்சிகள் அதுவும் மாநிலங்களில் மட்டும் செல்வாக்குப் பெற்ற மாநிலக்கட்சிகள் மாநிலப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு மாநில அரசியலை முன்னெடுக்கும்போது காங்கிரசின் மாநிலப்பிரிவுகள் அவற்றிற்கு முகம்கொடுக்க முடியாதவாறு தடுமாறின. ஆனால் தலைமை இவற்றைப் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளவில்லை. மாறாக தம் விருப்பப்படியே நடக்க வேண்டுமென வற்புறுத்தியது.

விளைவு மாநிலத்தலைமைகள் கட்சியிலிருந்து வெளியேறி தனியான மாநிலக்கட்சிகளை அமைத்தன. அவ்வாறு நிகழாத இடங்களில் கட்சி அடையாளம் காணாதவாறு சிதைகின்ற போக்குவளரத் தொடங்கியது.

தமிழ்நாடு, மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் மாநிலக்கட்சிகள் உருவாகிய அதேவேளை உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் கட்சி, அடையாளம் காணாதவாறு சிதையத் தொடங்கியது. சென்ற தேர்தலில் மொத்தம் 85 ஆசனங்களைக்கொண்ட உத்தரப்பிரதேசத்தில் ஒரு ஆசனத்தைக்கூட காங்கிரஸ்ஸினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதுவும் ராஜிவின் சொந்தத் தொகுதியான அமேதி தொகுதியில் கூட காங்கிரஸ் தோல்வி கண்டிருந்தது. இம்மாநிலத்தில் காங்கிரஸ் 5.99 வீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தது.

பீகாரில் காங்கிரஸ் 7.01 வாக்குகளையும், 5 ஆசனங்களையும் மட்டுமே பெற்றிருந்தது. லாலு பிரசாத் யாதவ்வின் கட்சியுடனான கூட்டின் மூலமே இவற்றைப் பெற முடிந்தது. சரத்பவாரின் வெளியேற்றத்தினால் மகாராஸ்டிரத்திலும் இந்நிலை ஏற்படலாம்.

தேர்தலில் காங்கிரஸ் வெற்றிவாய்ப்பு எவ்வாறிருக்கும்?

சிறிது காலத்திற்கு முன்னர் நடைபெற்ற மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தில்லி மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் அலையொன்று நாடுமுழுவதும் வீசியிருந்தது. சோனியா கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நிகழ்வும் தொண்டர்களிடையே உற்சாகத்தினை ஏற்படுத்தி காங்கிரஸ் அலையை வளர்த்திருந்தது.

ஆனால் அண்மைய ஆட்சிக்கவிழ்ப்போடு இவ்வலை வேகமாக சரிந்துள்ளது. இந்தியா டுடே எடுத்த கருத்துக்கணிப்பின்படி 1998 டிசம்பரில் 295-305 வரையிலான ஆசனங்களை பெறக்கூடிய நிலையிலிருந்த காங்கிரஸ் 1999 மே கணிப்பின்படி 203 வரையிலான ஆசனங்களைப்பெறக்கூடிய நிலையிலேயே உள்ளது. தற்போது கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு சரிவினை மேலும் வளர்த்துள்ளது.

அதிக ஆசனங்களைக்கொண்ட உத்தரப் பிரதேசம், பீகார் மேற்குவங்காளம், போன்ற இடங்களில் இதற்கு வெற்றி வாய்ப்பு மிகவும் குறைவு பீகாரில் காங்கிரசின் கூட்டணிக் கட்சியான லாலு பிரசாத் யாதவ்வின் கட்சியும் மாநிலத்தில் பேர் கெட்டு நிற்பதனால் சென்ற முறை கிடைத்த 5 ஆசனங்களைப் பெறுவது கூட கடினமானதாக இருக்கும்.

சென்ற தடவை பெரு வெற்றியை ஈட்டிய மகாராஸ்டிரத்தில் சரத்பவாரின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து நின்று பிடிப்பது கடினம். மத்திய பிரதேசம், ராஜஸ்தான், போன்ற இடங்களில் சற்று அதிகளவிளான ஆசனங்களைப் பெற்று கொள்ளக்கூடிய நிலை உண்டு. குஜராத், ஒரிஸா, ஆந்திரப் பிரதேசம் போன்றவற்றில் கடுமையான போட்டி நிலவுகின்ற போதும் பாதியளவு ஆசனங்களையாவது பெற்றுக்கொள்ளலாம். புதுடில்லி, கேரளம், வடகிழக்கு மாநிலங்கள் என்பவற்றிலும் சற்று தேறலாம். கர்நாடகத்திலும் வெற்றிவாய்ப்பு குறைவு. தமிழ்நாட்டில் வெற்றி அறவே கிடையாது. அங்கு ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்டாலும் அது அற்புதமாகவே இருக்கும்.

மொத்தத்தில் வெற்றிவாய்ப்புக்கான அறிகுறிகள் மிகக் குறைவாகவே உள்ளன. ஏனைய கட்சிகளுடனான கூட்டணியும் மிகப் பலவீனமான நிலையிலேயே உள்ளது.

காங்கிரசின் எதிர்காலம் எப்படி இருக்கும்.

காங்கிரஸ் மீண்டும் எழுச்சியடைய வேண்டுமானால் கட்சி முதலாம் நிலையிலுள்ள மாநிலங்களில் அதனை தக்கவைக்க வேண்டும். இரண்டாம் நிலையிலுள்ள மாநிலங்களில் முதலாம் நிலைக்கு வரவேண்டும். அதற்கு "எல்லாம் மத்தியில்" என்ற தனது ஒற்றைப் பரிமாணச்சிந்தனையை தகர்த்து மாநிலப்பிரச்சினைகளிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மாநிலங்களின் சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். சிறுபான்மையினரின் நலன்களில் கவனம் செலுத்த வேண்டும். மூன்றாம் நிலையிலுள்ள மாநிலங்களில் கட்சி புதிய கட்டுமானங்களை ஆரம்பிக்க வேண்டும். அங்குள்ள கட்சிகளுடன் நெகிழ்ச்சியான கூட்டணிகளை அமைத்துக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். மத்திய ஆட்சியில் கூட்டணிக் கட்சிகளுக்கும் பங்கு கொடுக்க முன்வரவேண்டும்.

மொத்தத்தில் நாடு இன்று வேண்டி நிற்கின்ற பன்முக அரசியலுக்குத் தயாராக வேண்டும்.

இவையெல்லாம் நடைபெறுவதற்கு கட்சியின் உட்கட்டுமானங்களில் பாரிய மாற்றங்கள் தேவை.

அதன் அரசியலிலும் அமைப்புத்துறையிலும் மாற்றங்கள் தேவை.

அரசியலில் கட்சி பன்முக அரசியலுக்கு தயராக வேண்டும். அதன்வழி ஒரு கூட்டணி ஆட்சிக்குத் தயாராக வேண்டும். அமைப்புத்துறையில் தனியொரு குடும்பத்தின் ஆதிக்கமும் தனி நபர் வழிபாடும் இல்லாது ஒழிய வேண்டும் தனி நபரை முன்நிறுத்துவதை விட கொள்கையை முன்னிறுத்தும் அரசியல் வளர வேண்டும்.

இவற்றில் முன்னேற்றம் ஏற்படுமானால் எதிர்காலத்தில் காங்கிரஸ் தப்பிப் பிழைக்கலாம்.

இல்லையேல் காங்கிரஸ் மீள்வதை நேரு குடும்பத்தினால் மட்டுமல்ல வேறு எவராலும் தடுத்துநிறுத்திவிட முடியாது.

**சி.அ.யோதிலிங்கம்.**

நன்றி - நூலகத்திட்டம்



# ராஜீவ் கொலை:


## நீதித்துறை மறந்த யதார்த்தம்!

கடந்த 11ம் திகதியன்று இந்திய உயர் நீதிமன்றம் ராஜீவ் கொலை தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த 26 பேரில் 19 பேருக்கு விடுதலையும், மூவருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கியதும் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த நளினி, முருகன், சின்னசாந்தன், பேரறிவாளன் ஆகியோரது மரண தண்டனை மீள் உறுதி செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்த தகவல். இந்த உயர்நீதி மன்றத் தீர்ப்பு நீதித்துறைக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றும், இத்தீர்ப்பு இந்தியாவின் பெயருக்கு ஏற்பட இருந்த ஒரு மாபெரும் களங்கத்தை துடைத்திருக்கிறது என்றும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி நவநீதம் அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கு எத்தகைய வேறுபாடும் இன்றி மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கினார். இந்தியாவில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே இவ்வாறு ஒரு கொலைக்காக 26 பேர் மரணத் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டது அன்று தான் முதன்முறையாக நடந்தது. அந்த உலக வரலாற்றுப் பெருமையைத் தட்டிக் கொண்டவர் நீதிபதி நவநீதம் அவர்கள். ஆனால் இத்தீர்ப்பை உலகெங்கும் வாழ்கின்ற சட்டத்துறை, நீதித்துறை நிறுவனங்கள் மட்டுமல்லாமல் மனிதஉரிமை அமைப்புக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரும் தீவிரமாக எதிர்த்தன. ஒரு பாரபட்சமான, கொடுரமான, தீரவிசாரிக்கப்படாத தீர்ப்பு இது என்று வர்ணித்தனர். தண்டனைக் கோவையில் உள்ள மிக உயர்ந்த பட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்கப்படும் அளவுக்கு சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருமே தீவிரமாக, சந்தேகத்திற்கு இடமற்ற விதத்தில் கொலைச் சதியில் ஈடுபட்டவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டதா என்ற கேள்வியை எழுப்பி எக்கனமிக்ஸ் டைம்ஸ் தலையங்கம் எழுதியது. நடாத்தப்பட்ட விசாரணை சட்ட நீதி நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடாத்தப்படவில்லை என்றும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட விதம் விசாரணை தொடங்கப்படுவதில் காட்டப்பட்ட அசாதாரண தாமதம் என்பவற்றை காரணம் காட்டி சர்வதேச மன்னிப்பு சபை தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

ராஜீவ் காந்தி படுகொலையின் முக்கியத்துவமும், இந்திய அரசியலில் அதன் தாக்கமும் புறக்கணிக்கத்தக்களவு சின்ன விடயங்கள் அல்லத் தான் என்ற போதும் ஒரு வகை அரசியல் உணர்ச்சி வேகத்துடன் வழங்கப்பட்டது போல தெரிந்த இந்தத் தீர்ப்பை அங்குள்ள சமூக நிறுவனங்கள் கூட எதிர்க்கவே செய்தன. இந்தத் தீர்ப்பு நியாயமான விசாரணைக்கோ, சர்வதேச சட்ட விழுமியங்களுக்கு உட்பட்டோ நடக்கவில்லை. என்பதற்கு பல காரணங்களை அவை சுட்டிக் காட்டின. சில முக்கியமான காரணங்கள் இவை...

1. குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1991 ஜூலையில் கைது செய்யப்படுகிறார்கள். 1992 மேயில் தான் குற்றப்பத்திரிகை தரப்படுகிறது. விசாரணை ஆரம்பிக்கப்பட்டதோ 1994 ஜனவரியில். தவிரவும் இந்த விசாரணை இந்திய தடா சட்டத்தின் கீழேயே நடாத்தப்பட்டது. சர்வதேச நெறி முறைகளுக்கு எதிரானது எனக் கருதப்படும் தடா சட்டத்தின் கீழ் நேர்மையான விசாரணையை எதிர்ப்பார்க்க முடியாது என்பதை யாருக்கும் சொல்லி விளக்கத் தேவையில்லை.
2. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான ஆதிரை என்ற பெண் 17 வயதுச் சிறுமி. 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படக் கூடாது என்று சர்வதேச குழந்தைகள் உரிமைப்பாதுகாப்பு ஒப்பந்தத்தின் 37(a) விதியும் ICCPR சட்டத்தின் 6(5) விதியும் கூறுகின்றன. ஆயினும் ஆதிரைக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
3. பொலிஸ் நீதிமன்றில் அளித்த வாக்குமூலங்களின்படி இந்த 26 பேரில் எவரும் கொலையுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. நேரில் சம்பந்தப்படாவிட்டாலும் இவர்களுக்குத் தெரியாமல் கொலை நடந்திருக்க முடியாது. என்ற அனுமானமே இத்தீர்ப்புக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. இந்த அனுமானங்களும் கூட ஆதாரங்களால் நிரூபிக்கப்படவில்லை.
4. நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் போது அதற்குரிய ஆதரங்களோ ஆவணங்களோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதாரங்கள் அவ்வப்போதும் தேவைப்பட்டபோதுமே வழங்கப்பட்டன. நீதிமன்ற நடைமுறைக்கு முற்றிலும் எதிரான ஒரு செயலாகும் இது. இது சட்ட ரீதியற்றதும் கூட.
5. ஒப்புதல் வாக்குமூலங்கள் பெரும்பாலும் சித்திரவதை செய்யப்பட்டே பெறப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் பெரும்பாலானவற்றில் வாக்குமூலம் அளித்தவர்களின் ஒப்பங்கள் இல்லை. ஒப்பம் இல்லாத வாக்கு மூலங்கள் செல்லுபடியற்றவை. ஆயினும் அவற்றை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.
6. தடா சட்டம் சாதாரண குற்றவியல் சட்டத்தினைப் போலன்றி, கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவருமே குற்றவாளிகள் என கூறுகின்றது. நீதிமன்றில் குற்றவாளிகள் தம்மை சுத்தவாளிகள் என நிரூபிக்க வேண்டும். ஆனால் அதற்கான எந்த அவகாசமும் நீதிபதியால் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.
7. வழக்கு விசாரணையின் போது பெரும்பாலான சாட்சிகள் திட்டமிட்டு விவாதிக்கப்படவில்லை. தவிரவும் விசாரணைகள் யாவும் இரகசியமாக நடாத்தப்பட்டன. பத்திரிகையாளர்கள் கூட விசாரணையின் போது பார்க்க அனுமதிக்கப்படவில்லை.



இவை ஒருசில காரணங்கள். இதைவிட பல காரணங்களும் இந்தத் தீர்ப்பை உலகம் எதிர்க்கக் காரணமாக இருந்தன.


எப்படியோ, உயர்நீதிமன்றத் தீர்ப்பு உலகின் எதிர்ப்பில் நியாயம் இருக்கின்றது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. ஆயினும் இன்னமும் மரண தண்டனை ஊர்ஜிதப்படுத்தப்பட்ட நால்வர் மற்றும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட மூவர் தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பும், ஆதாரங்களையும் சட்டத்தையும் சரிவர ஆராய்ந்து செய்யப்பட்டதா என்ற கேள்வி எழவே செய்கிறது. இதற்கும் காரணிகள் இருக்கவே செய்கின்றன. மரண தண்டனை குற்றவாளிகளான நளினி மீதுள்ள குற்றச்சாட்டு ராஜீவ் கொலைசெய்யப்படப் போகிறார் என்பது, முதலே தெரிந்திருந்தது என்பதுவும் இன்னொரு குற்றவாளியான முருகனை காதலித்து திருமணம் செய்துகொண்டார் என்பதுவும் தான். கொலைச்சதி பற்றி தெரிந்திருந்ததும் கொலையாளியாக குற்றம் காணப்பட்ட ஒருவரை காதலித்ததும் மரணதண்டனைக்குரிய குற்றமாக முடியுமா? கொலைக் குற்றவாளியான முருகனுக்கு பேரறிவாளன், நளினி ஆகியோருடன் தொடர்பு இருந்தது என்பதைத் தவிர ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் காட்டும் எந்த ஆதாரங்களையும் சி.ஐ.பியினர் நீதிமன்றத்தில் வழங்கவில்லை. மூன்றாவது கொலைக்குற்றவாளியான சாந்தன் ஏனைய குற்றவாளிகளுடன் [illegible] என்பதைத் தவிர வேறு எந்தச் சம்பந்தமும் கொலையுடன் தொடர்புபட்டு அவருக்கிருந்ததாக நீதிமன்றில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எண்பதாயிரம் ரூபா லஞ்சம் கொடுத்து போலிக்கடவுச்சீட்டை எடுத்து வெளிநாடு செல்ல முயன்ற குற்றச்சாட்டைத் தவிர வேறெதுவும் ஆதாரபூர்வமாக இவர் மீது நிரூபிக்கப்படவில்லை. அடுத்த மரண தண்டனை குற்றவாளியான பேரறிவாளன் சிவராசனுக்கு பற்றரிகள் வாங்கிக் கொடுத்திருக்கிறார். இந்தப் பற்றரிகள் ராஜீவைக் கொல்லவே வாங்கப்படுகின்றன. இவர் தெரிந்தே செய்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை இந்தியத் தமிழரான இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட பற்றி தொடர்பான விசாரணைகள் எதையும் நீதிமன்றம் செய்யவில்லை.

ஆக, இந்தத் தீர்ப்பும் கூட மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதே பலரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ராஜீவ் கொலைச் சம்பவத்தில் புலிகள் பங்குபற்றினார்கள் என்பதோ, அந்தக் கொலை சரியான ஒன்றல்ல என்பதோ இங்கு சந்தேகத்துக்குரிய விடயங்கள் அல்ல. ஒரு நாடு யுத்தத்தால் பீடிக்கப்பட்டிருக்கையில் யுத்தமும் எதிர்தாக்குதல்களும் பல்வேறு விதங்களிலும் நடக்கக் கூடும் என்ற யதார்த்தத்தை மறந்து நீதிக்குப் புறம்பான முறையில் செயற்பட நீதித்துறையினர் முயலக்கூடாது என்பதே இங்கு முக்கியமானது. ராஜீவ் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் என்று எல்லோருக்குமே மரண தண்டனை வழங்குவதாயின் வடக்கு கிழக்கில் கொல்லப்பட்ட பலலாயிரக் கணக்கான மக்களின் அநியாயமான படுகொலைகளுக்காக, அவற்றில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இராணுவத்தினருடன் பழகிய அனைவருக்குமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டி இருக்கும். அப்படிச் செய்வதானால் இன்று இலங்கையிலுள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, ஜனாதிபதி சந்திரிகா போன்றவர்கள் கூட மரணதண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

அரசியல் படுகொலைகள், யுத்தகாலப் படுகொலைகள், ஏன் யுத்தங்கள் எவையுமே அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க வெவ்வேறு தரப்பினர் கையாளும் வழிமுறைகளாக உள்ளன. இவை எவையும் நியாயப்படுத்தப்படக் கூடியவையோ, சரியானவையோ, ஜனநாயக விரும்பிகளது கண்டனத்துக்கு அப்பாற்பட்டவையோ அல்ல. ஆனால் அதே வேளை அவை எந்தக் காரணத்தாலும், நிலவும் அரசியல் பின்னணியிலிருந்து பிரித்தெடுத்து ஆராயப்படக் கூடியவையும் அல்ல.

ராஜீவ் கொலை அரசியல் சாணக்கியமற்ற, முட்டாள் தனமான, தேவையற்ற, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எத்தகைய பயனுள்ள பங்களிப்பையும் செய்யாத ஒரு கொலைதான். ஆனால் இந்தக் காரணங்கள் எவையும் நேரடியாக சம்பந்தமற்றவர்களை ஊகத்தின் பேரில் மரணதண்டனைக் குள்ளாகி விடுவதை நியாயப்படுத்த போதுமானவை அல்ல!

இந்திய நீதித்துறை மட்டுமல்ல, இலங்கையின் நீதித்துறைக்கும் இது தெரியவேண்டிய விடயமாகும். ●



நளினி சாந்தன் பேரறிவாளன் முருகன

நன்றி - நூலகத்திட்டம்



**இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் மொழிப்பாவனை பற்றிக் கொஞ்சம் பேசுவோம். மனிதாபிமானச் சிக்கல், இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு போன்ற சொற்றொடர்கள் பாவிக்கப்படுவது பற்றி. அவை இன்று கொசோவாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிலையில் என்ன சொல்லுகிறீர்கள்?**

நல்லது! மனிதாபிமானச் சிக்கல் என்ற கோட்பாட்டிற்கு, ஒரு தொழில்நுட்பம் சார்ந்த அர்த்தம் இருக்கிறது. இந்தச் சொல்லால் அர்த்தப்படுத்தப்படுகிறதாகக் கொள்ளப்படக் கூடிய விடயங்களுக்கும் இந்த தொழில்நுட்பம் சார்ந்த அர்த்தத்திற்கும் இடையில் பெரியளவு சம்பந்தம் இருப்பதில்லை. மனிதாபிமான சிக்கல் என்ற சொற்றொடரின் தொழில் நுட்ப அர்த்தம் எல்லாப் பணக்காரர்களதும் அதிகார பலமிக்கவர்களதும் நலன்களைப் பாதிக்கக் கூடிய ஏதாவது பிரச்சினைகள் எங்காவது வருவதைத்தான் குறிக்கிறது. இது தான் இதனை ஒரு சிக்கலாகக் கொள்வதற்கான அடிப்படைக் காரணமாகும். இப்போது பால்க்கனில் நடக்கும் எந்தக் குழப்பங்களும் பணக்காரர்களையோ, அதிகாரம் மிக்கவர்களையோ பாதிப்பதில்லை. குறிப்பிட்டுச் சொல்வதானால் ஐரோப்பிய அமெரிக்க மேட்டுக் குடிகளை அவை பாதிப்பதில்லை. பால்கனில் மனிதாபிமானப் பிரச்சினைகள் எழும்போது அவை மனிதாபிமானச் சிக்கல்கள் ஆகிவிடுகின்றன. மறுபுறத்தில் சியரா லியோனிலோ அல்லது கொங்கோவிலோ மக்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொன்றால் அது ஒரு மனிதாபிமானச் சிக்கல் அல்ல. அண்மையில், கொங்கோவிலுள்ள ஒரு சமாதானப்படைக்கு ஒப்பீட்டளவில் மிகச் சிறிய தொகையான ஒரு லட்சம் டொலரை வழங்க கிளின்டன் மறுத்திருக்கிறார். உண்மையில் இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்குமானால் அங்கு பெரியதொரு இனப்படுகொலை நடப்பதைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் இந்த வகையான சிறப்புக்கள் மனிதாபிமான சிக்கலுக்குள் வருவதில்லை. இவ்வாறே அமெரிக்கா நேரடியாகப் பங்களிக்கும் பல இழப்புகளும் துயரங்களும் இந்த மனிதாபிமானச் சிக்கலுக்குள் வருவதில்லை. உதாரணமாக கொலம்பிய இனப்படுகொலைகளோ, அல்லது துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டதோ, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதோ இவையெல்லாம் மனிதாபிமானச் சிக்கல்கள் அல்ல ஆனால் கொஸோவோ ஒரு மனிதாபிமானச் சிக்கல். ஏனென்றால் அது பால்கனில் இருக்கிறது.

இனப்படுகொலை என்ற பதத்தை எடுத்துக் கொள்வோம். இன்று கொஸோவோவில் நடப்பதை இந்தப் பதத்தால் அழைப்பது என்பது உண்மையில் ஹிட்லரால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிப்பது போன்றதாகும். இது இனப்படுகொலை என்றால், இன்று உலகத்தில் எல்லா இடங்களிலும் இனப்படு கொலையே நடந்து கொண்டிருக்கிறது. தவிர அந்த இனப்படுகொலையை நடைமுறைப்படுத்துவதில் பில்கிளின்ரன் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறார். இது இனப்படுகொலையானால், துருக்கியின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் நடப்பதை எப்படிச் சொல்வது? அங்குள்ள அகதிகளின் தொகை மிகப் பிரமாண்டமானது பாலஸ்தீனியத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியர்களின் தொகையில் அரைப்பங்களவு தொகையை இந்த அகதிகளின் தொகை அண்மித்து விட்டது. இது இன்னமும் அதிகரிக்குமாயின், அது கொலம்பியாவில் உள்ள அகதிகளின் தொகையை அண்மித்துவிடும். கடந்த ஆண்டு கொசோவாவில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவு மக்கள் இராணுவத்தாலும் பரா இராணுவத்தாலும் கொலம்பியாவிலும் கூட கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இனச்சுத்திகரிப்பு, மறுபுறத்தில் ஒரு யதார்த்தமாக உள்ள விடயமாகும். துரதிஷ்டவசமாக இது நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. இந்த நாட்டில் முன்பிருந்த மூதாதையருக்குப் பதிலாக நாம் இங்கு வாழ்கிறோமே அது எப்படி? அவர்கள் சந்தோசமாக வெளியேறினார்களா?

உலகில் பலராலும் அறியப்பட்ட மார்க்சிய சிந்தனையாளரான நோம் சொம்ஸ்கி அமெரிக்காவின் மா சேசூசெட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் மொழியியற் துறைப் பேராசிரியராகப் பணிபுரிபவர். அமெரிக்காவின் ஜனநாயக விரோத மக்கள் விரோதப் போக்குகளை மூன்று தசாப்தங்களாக தொடர்ந்து அம்பலப்படுத்தி வருபவர். ஸ்போக்ஸ்மன் பத்திரிகையின் ஆசிரிய குழு உறுப்பனர்களுள் ஒருவரான இவரது பேச்சுக்களும் எழுத்துக்களும் (Sqnthatic Structures, Aspects of The Theory of Syntax, Cartesian Linguistics, Language and Mind, American Power and the New Mandarins, Problems of Knowledge and Freedom) என்ற பெயர்களில் நூல்களாக வெளிவந்துள்ளன. அண்மையில் CBC வானொலி நடாத்திய அவருடனான நேர்காணல்கள் இரண்டிலிருந்து சில பகுதிகளை இங்கு தமிழில் தருகிறோம். யூகோஸ்லாவியா சம்பந்தமான இப்பேட்டியில் அவர் அமெரிக்காவின் போக்கு குறித்து பல விடயங்களை தெளிவுபடுத்துகிறார். இப்பேட்டி முழுமையாக இன்டர்நெட்டில் http:home.cbc.ca/real/radio/news-audio/ram/aih990416.ram எனும் தளத்தில் கிடைக்கின்றன.

—ஆர்



**ஆக உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஒரு அரசாங்கம் கொசோவோவிலுள்ள மனித உரிமை மீறல்களை, மனிதாபிமானப் பிரச்சினை என்று அழைக்கிறது. ஆனால் அதிலிருந்து எப்படி ஒரு முழுமையான ஒரு யுத்தத்தை நோக்கிப் போக முடிந்தது?**

நல்லது நாம் இந்த நிலைமையை அமெரிக்காவின் நிலையில் நின்று பார்ப்போம். அங்கு ஒரு பிரச்சிளை நிலவுகிறது. இதற்கு நாம் என்ன செய்யலாம்? ஒருவழி, இந்த மாதிரியான சிக்கல்களை ஒப்பந்தம் காரணமாக சர்வதேச சட்டங்களின் கீழ் கையாள கடப்பாடுள்ள அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையினூடாக நாம் செயற்படுவது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையோ நீண்ட காலத்திற்கு முன்பே புதிய உலக ஒழுங்கை உருவாக்கல் என்ற கோட்பாட்டை நிராகரித்து விட்டது. ஆனால் ஐ.நா இப்படித்தான் எப்போதும் இருந்ததென்றில்லை. ஆரம்ப காலத்தில் அமெரிக்காவின் இராட்சத அரசியல் பலம் காரணமாக பெரும்பாலான நாடுகள் அதை ஆதரித்தன. ஆனால் கூட்டணிகளை இல்லாதொழித்தல் பரவலாக்கப்பட்டது. மற்றும் உலக அதிகாரம் அமைக்கப்பட்டுப் பகிரப்படல் இடம் மாறியது. போன்ற காரணங்களால் இந்த நிலமையில் மாற்றம் ஏற்பட்டது. இப்போது அமெரிக்கா ஐ.நாவில் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் செயற்படும் ஒரு நிலையில் இல்லை. ஆகவே ஐ.நா சபை சிறிதும் அமெரிக்காவுக்கு ஒரு நம்பிக்கையான ஸ்தாபனம் அல்ல. ஜனாதிபதி றேகன் காலத்தில் இது தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. இப்போது அது கிளின்ரன் காலத்தில் இன்னும் வெளிப்படையாகியுள்ளது. வலது சாரி விமர்சகர்களே கவலைப்படுமளவுக்கு இந்த நிலமை மோசமடைந்துள்ளது. 'Foreign affairs' பத்திரிகையின் மிக அண்மைய இதழ் ஒன்று உலகத்திற்குள்ள ஒரே அச்சுறுத்தல் இந்தப் போக்கிரி வல்லரசு தான் என்றும் எழுதியுள்ளது. சர்வதேச சட்டத்தின் ஆட்சிக்கும், சர்வதேச சிறுவர்களுக்கும் மேலான ஒன்றாக அமெரிக்கா தன்னை நிறுத்தி வைத்துள்ளது.

நேட்டோ அமெரிக்க ஆதிக்கத்தின் கீழுள்ள ஒரு அமைப்பாக இருக்கிறது. ஆனால் அதற்குள்ளும் அபிப்பிராய பேதங்கள் உள்ளன. கடந்த செப்டம்பரில் கொசோவோவுள் ஆயுதம் தரிக்காத நேட்டோ கண்காணிப்பாளர்களை அனுப்பும் விவகாரத்தில் ஒவ்வொரு நேட்டோ நாடும் அது (பிரித்தானியா ஒருவேளை விதிவிலக்காக இருக்கலாம்) ஐ.நா பாதுகாப்பு சபையின் ஒப்புதலுடனேயே செய்யப்பட வேண்டும் என்று கோரின. ஆனால் அமெரிக்கா இதை உறுதியாக மறுத்தது. அது ஒப்புதல் அல்லது அனுமதி என்ற சொல்லைப் பாவிப்பதை எதிர்த்தது. ஐ.நாவுக்கு அமெரிக்க செயல்களுக்கு அதிகாரமளிக்க எந்த உரிமையும் கிடையாது என்று அடித்துக் கூறியது. பலத்தைப் பாவித்தல் என்ற விடயங்கள் தொடர்பான விவாதத்துக்கு வந்த போது அமெரிக்காவும் பிரித்தானியாவும் யுத்த வெறிகொண்ட தமது இயல்புக் கேற்ப பேச்சுவார்த்தையைக் கைவிட்டு யுத்தத்தில் குதிக்க விரும்பின. உண்மையில் ஐரோப்பிய இராஜதந்திரிகள் அமெரிக்காவில் இந்த ஆத்திரபூர்வப் போக்கால் தாம் எரிச்சலுற்றிருப்பதாக பத்திரிகைகளுக்குத் தெரிவித்தனர். ஆக, நேட்டோ படைபலத்தை பாவிக்க ஒரு அமைப்பாக தயாராகிய போதும், ஒருபகுதி தயக்கத்துடனேயே அதில் ஈடுபட்டது. உண்மையில், இந்தத் தயக்கம் அந்தப் பிராந்தியத்தை அடையும் போது அதிகரித்தது. இங்கிலாந்தும், அமெரிக்காவும் மிகவும் உற்சாகமாக இருந்தன. ஒரு சில மிகவும் தயங்கின. சில இடையில் நின்றன.

**அமெரிக்கா யுத்தத்தில் தீவிரம் காட்டுவதற்கு காரணம் என்ன?**

காரணம் வெளிப்படையானது மோதலில் ஈடுபட்டிருக்கும் போது, நீங்கள் உங்களது பலமான துருப்புச் சீட்டை வீசி அந்த மோதலை நீங்கள் பலமாக உள்ள பகுதிக்கு நகர்த்த முயல்வீர்கள். அமெரிக்காவின் பலமான துருப்புச்சீட்டு படைபலம். அநேகமாக அமெரிக்கா அந்த ஒரு விடயத்தில் தான் ஏனைய நாடுகளுடனான உறவில் அது தனிக்காட்டு ராச்சியம் நடத்தக் கூடியதாக உள்ளது. யூகோஸ்லாவியா மீதான படைப்பலம் பிரயோகத்தினால் வரும் விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டவை தான். நேட்டோவின் படைத்தளபதியான வெஸ்லி கிளாக், குண்டு வீச்சால் பலத்த அநியாயங்களையும் குடிப்பெயர்வுகளையும் ஏற்படுத்தும் என்பது தெளிவாக எதிர்பார்க்கப்படக் கூடிய ஒன்று தான் என்று குறிப்பிட்டார். உண்மையில் அதுதான் நடந்தது. நேட்டோ தலைமை, சேர்பியாவிலுள்ள கவனத்திற்குரிய துணிச்சலான ஜனநாயக இயக்கத்தையும் இந்தக் குண்டுத் தாக்குதல்கள் சிதைத்துவிடும் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருந்திருக்க முடியாது. அதுவும் நடந்தது. தவிரவும் சூழஉள்ள நாடுகளில் பல கொந்தளிப்புகள் உருவாகவும் அது காரணமாக இருந்தது. துருக்கிபோன்ற இடங்களிலோ உள்ள அளவுக்கு நிலமை மோசமாக இல்லாவிட்டாலும் அது தான் நடந்தது.

எப்படியோ, நேட்டோவின் நம்பகத்தன்மையை பாதுகாப்பது பற்றி கிளின்ரனின் கொள்கை வகுப்பாளர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். நம்பத்தக்கவர்களை பற்றி இப்போது பேசும் போது அவர்கள் டென்மார்க், பிரான் நாடுகளில் நம்பத் தன்மை பற்றிப் பேசுவதில்லை. கிளின்ரன் அரசாங்கம் இந்த நாடுகளில் நம்பகத் தன்மை பற்றி அக்கறைப்படுவதே இல்லை. அமெரிக்காவின் நம்பகத்தன்மை பற்றி மட்டுமே அவர்கள் அக்கறைப்படுகிறார்கள். நம்பகத் தன்மை என்பது அவர்கள் சொல்வது அச்சத்தை, அதாவது உலக ஒழுங்கை நிலை நாட்ட விரும்புவதை, அதாவது அமெரிக்காவை இட்டு ஒரு அச்சத்தைப் பேணுவது. அந்த அச்சத்தைப் பேணுவதே லட்சக் கணக்கான கொசோவியர்களதோ அல்லது வேறு இப்படியான நெருக்கடிக்குள்ளான மக்களதோ நிலைமை முக்கியமானது அமெரிக்காவுக்கு. ஆக அமெரிக்காவும் நேட்டோவும் கூட்டாக ஏற்கெனவே மிக மோசமான பேரழிவுக்குள்ளாகியிருந்த நிலைமையை தெரிந்து கொண்டே மேலும் கிளறிவிட்டு ஒரு மோசமான மனிதாபிமானப் பேரழிவை உருவாக்கும் வேலையைச் செய்துள்ளன.


**சிலர் சொல்கிறார்கள் இறந்த அமெரிக்க இராணுவத்தினரின் உடல்களை பைகளில் போட்டு கப்பலில் நாட்டுக்கு திருப்பி அனுப்பும் செயல் நடந்திராவிட்டால் இங்கு ஒரு யுத்த எதிர்ப்பு நடவடிக்கை உருவாகியிராது என்று உங்கள் கணிப்பு என்ன?**

நான் இதை ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட்டேன். வரலாற்றைப் பாருங்கள். 80களில் மத்திய அமெரிக்காவில் அமெரிக்கா செய்த அட்டூழியங்களுக்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. இந்த எதிர்ப்பு எந்தளவுக்கு இருந்ததென்றால் றேகன் காலத்தில் அது தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தானே நேரடியாக ஈடுபடாமல் கொண்ட்ராஸ் போன்ற சர்வதேச பயங்கரவாத வலைப் பின்னல்களைப் பயன்படுத்தும் அளவுக்குப் போயிருந்தது. அப்போதெல்லாம் எந்தவொரு அமெரிக்கரின் உடலும் பைகளில் கட்டப்பட்டு அங்கு வந்திருக்கவில்லை. இப்போது இந்தோனேசியாவின் கிழக்குத் திமோர் மீதான கொலைகளுக்கு அமெரிக்கா உதவுவதற்கு பலத்த எதிர்ப்பு நிலவுகிறதே. அங்கெல்லாம் அந்த அமெரிக்கரின் உடல் பொதியாகக்கட்டப்பட்டு அனுப்பப்படவில்லையே. வியட்நாமிய யுத்தத்திற்கு இருந்த எதிர்ப்பைப் பார்த்தீர்களானால், அங்கு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டார்கள் தான். ஆனால் அவை அன்றைய தீர்மானங்களுக்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கவில்லை. இறந்த அமெரிக்கர்கள் தான் சமாதான இயக்கத்திற்குத் தூண்டுதலாக இருப்பார்கள் அல்லது அமெரிக்க மக்கள் சுயநலனின் அடிப்படையில் தான் இதற்கெதிராக தூண்டப்படுவார்கள் என்பது ஒரு [illegible]கை அமெரிக்கப் பிரச்சாரமே. மக்கள் தாமாகவே மனித விழுமியங்களின் தூண்டுதல் காரணமாக செயற்படுவதை அமெரிக்க பிரச்சார மையத்தால் சகிக்க முடியவில்லை.

**பெரும்பாலான அமெரிக்கர்கள் உதாரணமாக நேட்டோ தரைப்படைகளை நிறுவுவதன் மூலமாக யுத்தத்தைத் தொடங்குவதை ஆதரிப்பதாக வாக்கெடுப்புக்கள் காட்டும் போது உங்களது இந்தக் கருத்தை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?**

இந்த மக்கள் எதைக் கேள்விப்படுகிறார்கள் என்பதை நீங்கள் உள்ளத்தில் எடுக்க வேண்டும். வாஷிங்டனில் இருந்துதான் பொதுமக்களுக்கு படைநகர்வு உத்தரவுகள் கிடைக்கின்றன. இத்தகைய உத்தரவுகள் பிற அட்டூழியங்களை புறந்தள்ளி விடுகின்றன. குறிப்பாக அமெரிக்கா நேரில் சம்பந்தப்பட்டிருக்கிற, கொசோவோவை விட மோசமான விடயங்களை விட இவை புறந்தள்ளி விடுகின்றன. உங்களுக்கு உலகிலுள்ள ஒரேயொரு பேரழிவு இதுதான் என்பது போலவும், அதுவும் ஒரு தனிப்பட்ட பிசாசு மனிதனாலேயே இவ்வினப்படுகொலைகள் செய்யப்படுகின்றன என்பது போலவும் சொல்லப்படுகிறது. இரவு பகலாக எமது தொடர்பு சாதனங்கள் இதைத்தான் சொல்கின்றன. இது மிகவும் வினைத்திறன் மிக்க ஒரு பிரச்சாரம். பெரும்பாலான மக்கள் இதனால் படைநகர்வு உத்தரவினை ஏற்கிறார்கள். அவர்கள் தாம் ஏதாவது செய்தாக வேண்டும், குறைந்த பட்சம் தரைப் படைகளை நகர்த்துவதையாவது செய்யவேண்டும் என்று கருதுகிறார்கள்.

பென்ரகனும் ஐரோப்பியப் படைகளும் கூட இதைப் பலமாக எதிர்க்கிறார்கள். பிரதானமாக தொழில்நுட்பக் காரணங்களுக்காக தரைப்படைகளை அனுப்புவது என்று நினைப்பது இலகுவாகத் தோன்றலாம். ஆனால் படைகளைத் திரட்டி



தயார்ப்படுத்துவது இதற்கு பல மாதங்கள் எடுக்கலாம். அவ்வளவு இலகுவானதல்ல. இந்தச் செயல் அப் பிராந்தியம் முழுவதுமே ஒரு கெரில்லா யுத்த நிலைமையை உருவாக்கலாம். தரைப்படைகளை அனுப்பி பேரழிவுகளை நீங்கள்

—9

"நீங்கள் மக்கள் மீது குண்டுகளை வீசிக் கொண்டிருக்கையில் அவர்கள் உங்கள் மீது பூக்களையா வீசப் போகிறார்கள்?"

-நோம் சொம்ஸ்கி

நன்றி - நூலகத்திட்டம்



செய்யும் போது இதுதான் நடக்கிறது. இது இலகுவாகவே பல அழிவுகளைத் தொடங்கி வைக்கிறது.

**இந்த யுத்தத்தை எதிர்க்கும் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

அக்கறையுள்ள மக்கள் இதற்கெதிராக நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்ற பதில் கேள்விக்கே இடமில்லை. இந்த யுத்தத்தை நிறுத்த நாம் என்ன செய்ய முடியும்? வழமைபோல இதற்கு எந்த மந்திர தந்திரமும் கிடையாது. கல்வியூட்டல், விளக்கமளித்தல், நிறுவனமயப்படுதல், ஆர்ப்பாட்டம் செய்தல், அழுத்தத்தைப் பிரயோகித்தல் இவைதான் நாம் அறிந்தது. இது மிகவும் கடினமானது. ஒரு லைட்டின் சுவிச்சைப் போடுவது போன்றதல்ல இது.....

**நேட்டோ நடவடிக்கையானது கொசோவோ அல்பேனியர்களை விடுவிக்க செய்யப்படும் ஒரு நடவடிக்கை என்பதை நீங்கள் ஏற்கவில்லையா?**

இது எந்தவிதத்திலும் தர்க்கரீதியாக நம்பக்கூடியதாக இல்லை. அதற்கான காரணங்களும் ஒன்றும் கடினமானவை அல்ல. ஒரு காரணம் கொசோவோ. அமெரிக்க நேட்டோ விமானத்தாக்குதல்கள் மார்ச் 24ம் திகதி ஆரம்பமாகும் வரை நேட்டோ புள்ளிவிபரம் ஒன்றின்படி இருபுறமும் 2000 பேர் கொல்லப்பட்டும் ஒரு சில லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகவும் இருந்திருக்கின்றனர். அது மோசமானது தான். இதே மாதிரியான நிலைமை இன்று உலகம் முழுவதும் காணப்படுகிறது. உதாரணமாக கொலம்பியாவில் உள்ள நிலைமையைப் பாருங்கள். அங்கு 3 லட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளதாக அரச திணைக்கள புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்தத் தொகை கொசோவாவிலுள்ள அகதிகளின்

**இப்போது நாம் மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று பெரும்பாலான அமெரிக்கர்களும் கனேடியர்களும் இந்த யுத்த நடவடிக்கையை ஆதரிக்கிறார்கள் என்று காட்டுகிறது. ஏனென்றால் இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய மனிதாபிமான நடவடிக்கை என்று கருதுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் மக்களைப் பாதுகாப்பதாக கருதுகிறார்கள்...**

அது உண்மை தான். அதற்கான காரணங்களும் உள்ளன. திரும்பத்திரும்ப, காலை முதல் மாலை வரை கிட்டத்தட்ட நூறுவீதமான நேரம் முழுவதும் நாம் செய்வது மக்களைப் பாதுகாக்கவே என்று சொல்லிக் கொண்டிருந்தால் நீங்கள் உங்களையறியாமலே இதை நம்ப ஆரம்பித்து விடுவீர்கள்.

**நேட்டோ குண்டுவீச்சு உட்பட்ட பல தாக்குதல்களாலும் பாதிக்கப்பட்ட அகதிகளுடனான நேர்காணல்களில் அவர்கள் தமக்கு நடந்தது தவறுதான் என்றாலும் நேட்டோ தொடர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதல்களில் ஈடுபட வேண்டும் என்று கேட்டார்களே. அவர்கள் நேட்டோ செய்வது சரியே என்று கூறினார்களே.....**

உலகெங்கும் வாஷிங்டன் மீது குண்டுவீச்சு நடாத்த வேண்டும் என்று கருதும் மக்களை நாம் காணமுடியும். அதற்காக அதை ஒரு சரியான கருத்து என்று கூற முடியுமா?

**ஆனால் இது பாதிக்கப்பட்ட மக்களால் கூறப்படுவது அல்லவா....**

ஆம். அவர்கள் சொல்கிறார்கள் தான்.

**உங்களுக்கு உலகிலுள்ள ஒரேயொரு பேரழிவு இதுதான் என்பது போலவும். அதுவும் ஒரு தனிப்பட்ட பிசாச மனிதனாலேயே இவ்வினப் படுகொலைகள் செய்யப்படுகின்றன என்பது போலவும் சொல்லப்படுகிறது. இரவு பகலாக எமது தொடர்பு சாதனங்கள் இதைத்தான் சொல்கின்றன. இது மிகவும் வினைத்திறன் மிக்க ஒரு பிரச்சாரம். பெரும்பாலான மக்கள் இதனால் படைநகர்வு உத்தரவினை ஏற்கிறார்கள். அவர்கள் தாம் ஏதாவது செய்தாக வேண்டும். குறைந்த பட்சம் தரைப் படைகளை நகர்த்துதையாவது செய்யவேண்டும் என்று கருதுகிறார்கள்.**

**...இந்த யுத்தத்தை நிறுத்த நாம் என்ன செய்ய முடியும்? வழமைபோல இதற்கு எந்த மந்திர தந்திரமும் கிடையாது. கல்வியூட்டல், விளக்கமளித்தல், நிறுவனமயப்படுதல், ஆர்ப்பாட்டம் செய்தல், அழுத்தத்தைப் பிரயோகித்தல் இவைதான் நாம் அறிந்தது. இது மிகவும் கடினமானது. ஒரு லைட்டின் சுவிச்சைப் போடுவது போன்றதல்ல இது.....**

தொகைக்கு கிட்டத்தட்ட சமமானதாகும். அங்கு இரண்டு அல்லது மூன்று ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் அமெரிக்காவின் ஆயுத உதவியால் போசாக் கூட்டப்பட்ட இராணுவ மற்றும் பரா இராணுவத்தினரால் செய்யப் பட்டமையாகும். இப்படித்தான் மனிதாபிமானப் பிரச்சினைகள் நடக்கும் போதெல்லாம் அமெரிக்காவும் பிரிட்டனும் நடந்து கொள்கின்றன. இன்று கொசோவோவில் நடந்து கொண்டிருப்பது என்ன? அதே விடயங்கள் தான் நடந்திருக்கின்றன. மார்ச் 23ம் திகதி அமெரிக்காவுக்கு என்ன செய்வது என்று தீர்மானிக்கப் பல விடயங்கள் இருந்தன. ஆனால் அவர்கள் மிகவும் தெளிவான நோக்குடன் திட்டமிட்ட விதத்தில் அந்த முடிவை எடுத்தார்கள். விளைவு கொலம்பிய நிலையிலிருந்த கொசோவாவை ஒரு பேரழிவை நோக்கித் தள்ளுவதாக அமைந்தது. அமெரிக்க நேட்டோ படைத் தளபதி கூறியதை பார்த்தால் இது விளங்கும். அவர் சொன்னார்: தரையில் சேர்பிய இராணுவத்தின் எதிர் நடவடிக்கைகள் எதிர்பார்த்தது போலவே முன்பிருந்தபடியே இருக்கிறது என்றார்.

**இந்த இடத்தில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். எமது வெளிநாட்டமைச்சர் இப்படியான ஒரு எதிர் விளைவை யாரும் எதிர்பார்க்கவில்லை என்றாரே.....**

அது சுத்த அபத்தம். அவர்கள் முழு அளவிலான எதிர்விளைவை எதிர்பாராமல் இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள். மக்கள் மீது குண்டுகளை வீசுகையில் அவர்கள் உங்கள் மீது பூக்களை வீசிக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் எதிர்ப்பார்கள்.

அதே போல துருக்கியிலுள்ள மக்கள் அமெரிக்கா துருக்கிய அரசுக்கு ஆயுதம் கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அங்காரா மீது குண்டு வீச வேண்டும் என்று விரும்பக் கூடுமே....

**ஆனால் இவர்கள் எல்லாவற்றையும் இழந்த அகதிகள் அப்படியிருந்தும் நேட்டோ செய்வதை சரி என்கிறார்கள்.**

நீங்கள் அகதியாக இருக்கும் போது நீங்கள் அதிகமாக வெறுப்பது உங்களை துப்பாக்கி முனையில் விரட்டிய ஒருவரையே. அமெரிக்காவிலும் கனடாவிலும் பிரித்தானியாவிலும் உள்ள மக்களால், இந்த நாடுகளால் தான் இவ்வளவு மோசமான நிலை தோன்றியது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் போது, நெருக்கடிக்குள் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு அகதியால் எப்படி நிதானமாகப் பேச முடியும்?

**கனேடிய பாராளுமன்றத்தில் இந்த விடயத்தில் கிட்டத்தட்ட பூரண ஆதரவு நிலவுகிறதே. நீங்கள் சொல்வது சரியானால் இது எப்படி சாத்தியமாக இருக்க முடியும்?**

நான் நினைக்கிறேன், இங்கே நான் சொன்னவை எல்லாம் மிகவும் வெளிப்படையானவை என்று. இன்று நடப்பவை எவையும் எமது தவறல்ல என்ற பிரச்சாரம் ஒரு குண்டுமாரியாகப் பொழியப்பட்டுக்கொண்டிருக்கையில், இன்றுள்ள புத்திஜீவிகள் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டுப் போபவர்களாக இருக்கும் ஒரு சூழலில் இத்தகைய ஒரு நிலைமை பற்றி அவர்கள் சிந்திக்காமல் இருக்கக் கூடும்.

**—தமிழில் : அருண்**

## யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் கைதுகளும் காணாமல் போதல்களும்

யாழ்ப்பாணம் கைதடி கிழக்கைச் சேர்ந்த வசந்தநாதன் ஜெகநாதன் (21வயது) என்பவர் 16.5.99 ஆம் திகதி முதல் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவரின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

கடந்த 11.5.99 ஆம் திகதி நீர்வேலியில் சனசமூக நிலையத்தின் மைதானமொன்றைத் துப்பரவு செய்யும் வேலையில் ஈடுபட்ட மாணவர்கள் ஐந்து பேர் காணாமல் போயிருந்தனர். மேற்படி சம்பவத்துடன் . சேர்த்து ஒரு வாரகாலத்திற்குள் மொத்தம் ஆறு போ காணமல் போயுள்ளனர். இவர்கள் பற்றிய எந்தவித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மே மாதம் 15, 16ம் திகதிகளில் விடுதலைப்புலிகளுக்கு உதவியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அச்செழு பிரிகேட் அலுவலகத்தில் தடுத்து வைக்கப் பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:

மே 15ம் திகதி கைது செய்யப்பட்டோர்:

1) துரைசிங்கம் மோகனராசா(27) உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்,
2) செல்வராசா நந்தகுமார் (21) வளாக வீதி, கொக்குவில்,
3) சிவலிங்கம் வாகீசன் (16) மட்டுவில் தெற்கு மட்டுவில்,
4) விவேகானந்தன் ஜெயராசா (21) பொற்பதி வீதி கொக்குவில்;
5) பாலசுந்தரம் பாலமயூரன்(22) உரும்பிராய் தெற்குஉரும்பிராய்;
6) குமாரசூரியர் உதயசூரியர்(24) பொற்பதி வீதி கொக்குவில்;
7) சுந்தரலிங்கம் விபுலானந்தன் (21) 6ம் வட்டாரம், நயினாதீவு,
8) நடேசன் உதயகுமார் (26) தாவடி கிழக்கு.

மே மாதம் 16ம் திகதி கைது செய்யப்பட்டோர் வருமாறு:

1)நந்தகோபால் பிரகாஷ் (18) பொற்பதி வீதி கொக்குவில்;
2)முத்துலிங்கம் ஜெயகாந்தன் (22) கோண்டாவில்;
3) கதிர்காமத்தம்பி சிறீகாந்தன் (49) பொற்பதி வீதி கொக்குவில்;
4) செல்லையா லோகேஸ்வரன் (25) சங்கரப்பிள்ளை வீதி ஆனைக்கோட்டை.

இதுதவிர மே16ம் திகதிஇரவு ஏழு மணியளவில் விவசாய விரிவாக்க திணைக்கள பிரதம லிகிதரான கே.தவராஜா(44) இணுவிலில் வைத்துப் படையினரால் தாக்குதலுக்குள்ளானார். இத்தாக்குதல் குறித்து பொலிஸாரிடமோ படையினரிடமோ முறையிட்டால் உனதுஉயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று படையினர் மிரட்டியுமுள்ளனர்.

அருகிலுள்ள அட்டவணையில் 1999 ஜனவரி முதல் ஏப்ரல் வரை கைது செய்யப்பட்டவர்களதும் காணாமல் போனவர்களதும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

எழுவான்

| | பெயர் | இடம் | கைது செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1. | யேசுதாஸ் ஜெயராஜ் | யாழ் | 02.1.99 |
| 2. | தங்கராஜா துஷ்யந்தன் | ஏழாலை | 07.1.99 |
| 3. | சின்னக்குட்டி செல்வரத்தினம் | பருத்தித்துறை | 13.1.99 |
| 4. | முருகேசு நாககுமார் | யாழ் | 06.1.99 |
| 5. | வி.ஜெயசித்திரா | அல்வாய் | |
| 6. | மார்க்கண்டு தெய்வேந்திரம் | கைதடி | 13.1.99 |
| 7. | வேலன் கனகலிங்கம் | கைதடி | 14.1.99 |
| 8. | ஆறுமுகம் கணேசரத்தினம் | வல்வெட்டிதுறை | 14.1.99 |
| 9. | அ.ஸ்ரீகாந்தன் | திருநெல்வேலி | 17.1.99 |
| 10. | சுப்பிரமணியம் விஜயகுமார் | கொக்குவில் | 17.1.99 |
| 11. | சதாசிவம் துளசிதாசன் | சாவகச்சேரி | 18.1.99 |
| 12. | இராமலிங்கம் தேவதுரை | சாவகச்சேரி | 16.1.99 |
| 13. | விஸ்வநாதன் ஜெயகுமார் | சாவகச்சேரி | 18.1.99 |
| 14. | வைரமுத்து வரதன் | மட்டுவில் | 20.1.99 |
| 15. | சச்சிதானந்தன் சுதர்சன் | திருநெல்வேலி | 24.1.99 |
| 16. | நிக்கலஸ் சுரேஷ்குமார் | கொடிகாமம் | |
| 17. | விக்கினேஸ்வரராஜா சுதாகரன் | கைதடி | 27 1 .99 |
| 18. | தம்பையா தர்மபாலன் | சாவகச்சேரி | 1.2.99 |
| 19. | சபாநாதன் நாகரத்தினம் | சாவகச்சேரி | 1.2.99 |
| 20. | நாகராஜா ரூபகுமார் | பண்டத்தரிப்பு | 5.2.99 |
| 21. | மயில்வாகனம் சாந்தகுமார் | கொழும்புத்துறை | 7.2.99 |
| 22. | நாகமணி சதீஷ் | சிறுப்பிட்டி | 7.2.99 |
| 23. | இராமலிங்கம் தேவதுரை | நயினாதீவு | 10.2.99 |
| 24. | சண்முகநாதன் ஜெகந்நாதன் | கொடிகாமம் | 8.2.99 |
| 25. | தெ. விஜயகுமார் | யாழ் | 11.2.99 |
| 26. | கணேஷ் செல்வகுமார் | கொக்குவில் | 13.2.99 |
| 27. | திருநாவுக்கரசு குமாரதாசன் | யாழ் | 19.2.99 |
| 28. | சிவஞானம் பிரதீபன் | ஆனைக்கோட்டை | |
| 29. | மாணிக்கம் சுரேந்திரராஜா | யாழ் | |
| 30. | குணபாலசிங்கம் சுரேஷ்குமார் | திருநெல்வேலி | |
| 31. | இலங்கைநாதன் கஜேந்திரன் | | 19.2.99 |
| 32. | க.பஞ்சலிங்கம் | புத்தூர் | 27.2.99 |
| 33. | கந்தசாமி சுதாகரன் | சாவகச்சேரி | 27.2.99 |
| 34. | பஸ்தியாம்பிள்ளை யோசேப் | பாஷையூர் | 4.3.99 |
| 35. | தியாகராஜா குகதாஸ் | யாழ் | 4.3.99 |
| 36. | அந்தோனிப்பிள்ளை பெர்னாண்டோ | யாழ் | 4.3.99 |
| 37. | கந்தசாமி கிருஷ்ணகுமார் | கொடிகாமம் | 6.3.99 |
| 38. | மகிந்தராஜா பிரமன் | சாவகச்சேரி | 6.3.99 |
| 39. | கனகரத்தினம் சிவகுமார் | மிருசுவில் | 10.3.99 |
| 40. | சண்முகநாதன் குமணன் | சாவகச்சேரி | 7.3.99 |
| 41. | ந.கணேசலிங்கம் | சுழிபுரம் | 6.3.99 |
| 42. | முருகேசு பாலரத்தினம் | வரணி | 6.3.76 |
| 43. | இராமு சரவணமுத்து | வரணி | 19.3.99 |
| 44. | சின்னப்பு கென்யூட் | குருநகர் | 20.3.99 |
| 45. | அமுதானந்தன் குலிற்சன் | குருநகர் | |
| 46. | சங்கரப்பிள்ளை சுமித்திரன் | சாவகச்சேரி | 9.3.99 |
| 47. | பத்மநாதன் ஜெகிஸ் | நல்லூர் | 24.3.99 |
| 48. | மகாதேவன் மதிவதனன் | யாழ் | 24.3.99 |
| 49. | தேவதாஸ் சந்திரகுமார் | யாழ் | 24.3.99 |
| 50. | செல்லையா சபாநாதன் | ஏழாலை | 4.4.99 |
| 51. | சுப்பிரமணியம் மார்க்கண்டு | சாவகச்சேரி | 31.3.99 |
| 52. | அ.சுரேந்திரன் | நல்லூர் | 3.4.99 |
| 53. | சின்னத்தம்பி யோகராஜா | கோப்பாய் | 4.4.99 |
| 54. | ஐயாத்துரை சேகர் | இருபாலை | 3.4.99 |
| 55. | கண்ணதாசன் நாகேந்திரராணி | வல்வெட்டிதுறை | 4.4.99 |
| 56. | இ.உதயசூரியன் | ஏழாலை | 6.4.99 |
| 57. | சரவணமுத்து செல்வராசா | நாகர்கோயில் | 4.4.99 |
| 58. | சபாரத்தினம் திருக்குமார் | கொக்குவில் | 7.4.99 |
| 59. | திருநாவுக்கரசு சிவசீலன் | மல்லாகம் | 7.4.99 |
| 60. | சுப்பிரமணியம் சசிகுமார் | ஏழாலை | 8.4.99 |
| 61. | நடராஜா சங்கரநாதன் | சாவகச்சேரி | 9.4.99 |
| 62. | பிரான்சிஸ் ஜெயகுமார் | யாழ் | 10.4.99 |
| 63. | சிவராசா சசிகுமார் | யாழ் | 10.4.99 |
| 64. | ஆரணி சந்திரன் | வசாவிளான் | 10.4.99 |
| 65. | தர்மலிங்கம் புஸ்பதீபன் | யாழ் | 20.4.99 |
| 66. | நாராயணன் உதயச்சந்திரன் | ஏழாலை | 13.4.99 |
| 67. | அந்தோனி கிறிஸ்ரி | அரியாலை | 21.4.99 |
| 68. | ஸ்ரீராமச்சந்திரன் கெங்காதரன் | புலோலி | 25.4.99 |
| 69. | செல்வரத்தினம் ஜெகன் | சாவகச்சேரி | 21.4.99 |
| 70. | இராஜேஸ்வரன் ஜெகதீஸ்வரன் | வரணி | 26.4.99 |
| 71. | கிட்டிணன் கிருஷ்ணராசா | வரணி | 26.4.99 |

**காணாமல் போனோர்**

| | | | |
|---|---|---|---|
| 01. | இராஜரட்ணம் ராஜேஸ்வரன் | கரவெட்டி | 210299 |
| 02. | வன்னியசிங்கம் கதிரேசு | குடத்தனை | 010399 |
| 03. | த.செபஸ்தியன் | குருநகர் | 020399 |
| 04. | ராஜரட்ணம் சுதர்சன் | கோப்பாய் | 220499 |
| 05. | கந்தையா வள்ளிநாயகி | பருத்தித்துறை | 100499 |

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள வீரவிதான: ஓகஸ்டுக்கு முன் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு என்ன நேரும்?

சிங்கள வீரவிதான :

சிங்கள வீரவிதான இயக்கம் குறித்து தற்போது அதிகளவில் பேசப்படுகிறது. கடந்த மே 20ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பியக்கத்தினால் நடத்தப்பட்ட ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கூட்டம், பிரச்சாரம் என்பன சிங்கள வீரவிதான இயக்கத்தின் நடவடிக்கை என்பது தெளிவாக தற்போது தெரிய வந்திருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே சரிநிகரில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் பயங்கரவாத எதிர்ப்பியக்கமானது சிங்கள வீரவிதான இயக்கத்தின் ஒரு உப அமைப்பு என்பதுவும், இன்னும் பல பெயர்களில் அதற்கு இதுபோன்ற உப அமைப்புகள் உண்டு என்பதும் சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளன.

கடந்த 20ஆம் திகதி நடத்தப்பட்ட மேற்படி ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக பல சம்பவங்கள் நடந்திருந்தன.

மே 20ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முதலில் ஊர்வலம் கொழும்பு கலாபவனத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஊர்வலத்தில் ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட பிக்குமார் கலந்து கொண்டனர்.

"முழு நாட்டையும் திராவிடஸ்தான் ஆக்கும் தமிழ் விஸ்தரிப்புவாதத்தைத் தோற்கடிப்போம்!"

"பிரபாகரனுக்கு தமிழீழம், அஸ்ரப்புக்கு, கிழக்கிஸ்தான், தொண்டமானுக்கு மலைநாடு!"

"கொழும்பில் 4 லட்சம் தமிழர்கள் குடியேறியுள்ளனர். தமிழ் விஸ்தரிப்பு வாதம் மேல்மாகாணத்தை அடைந்துள்ளது. அதனை விரட்டியடிப்போம்!"

"சிங்கள நாட்டைக் கட்டுப்படுத்தும் தமிழ் இனவாதத்தையும், அதறகுத் துணைபோகும் சிங்கள அரசியல் துரோகிகளையும் எதிர்த்துப் போராடுவோம்!"

"கொலைகாரப் புலியோடு பேச்சுவார்த்தை வேண்டாம!"

"அந்நிய மத்தியத்துவம் எமக்கு வேண்டாம்."

"சிங்களவர்களே விழித்தெழுங்கள் சிங்கள மல்லாதவர்களிடமிருந்து சிங்கள நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்"

என்பது போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. இது போன்ற பல இனவாதத்தைக் கக்கும் பதாதைகளையும் தாங்கிய வண்ணம் பலர் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர். ஊர்வலம் அனகாரிக்க தர்மபால மாவத்தை வழியாக வந்து டி.எஸ்.சேனநாயக்க வீதி சுற்றுவட்டத்துக்கூடாக திரும்பி விகாரமகாதேவி பூங்காவை வந்தடைந்தது. அங்கு ஆர்ப்பாட்ட கோஷங்கள் எழுப்பப்பட்டன.

விகாரமகாதேவி பூங்காவின் அருகில் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பயங்கரவாத எதிர்ப்பியக்கத்தின் தலைவரும் சிங்கள வீரவிதான இயக்கத்தின் மறைமுகத் தலைவருமான சம்பிக்க ரணவக்க, மற்றும் மடிகே பஞ்ஞாசீல மகாநாயக்க தேரோ உள்ளிட்ட பல முக்கிய இனவாத பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மடிகே பஞ்ஞாசீல தேரோ பேசுகையில் "...இன்றைய இந்த நடவடிக்கை மிகவும் பெருமைப்படக்கூடிய ஒன்று. 10,000 ஆண்டுகளை விட அதிக கால வரலாற்றைக்கொண்டுள்ள சிங்கள இனத்துக்கு தொடர்ச்சியாக அநியாயங்கள் இழைக்கப்பட்டு வருகிறது. சிங்களவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சிங்களமல்லாதவர்களை கடமைப்பட வைப்பது அரசினது கடமை. சிங்களவர்களே ஐக்கியப்படுவோம். சிங்கள நாட்டைப் பாதுகாப்போம் என்றார்..."

தேசிய சங்க சபையின் அமைப்பாளர் அத்துரலிய ரத்ன ஹிமி பேசுகையில்

"...1987இல் புலிகள் கோட்டையில் குண்டு வைத்தனர். சகலரும் மௌனித்திருந்தனர் ஆனால் அதிலிருந்து தொடர்ச்சியாக கொழும்பில் குண்டுகள் வெடித்தன. இன்று எமக்கு இந்த பயங்கரவாதத்தை முறியடிக்கும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அதனை தட்டிக் கழித்து விட்டுப் போக முடியாது. ஆப்கானிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, சீனா, மத்தியகிழக்கு, ஜப்பான் போன்ற நாடுகளில் பௌத்த இயக்கங்கள் வன்முறையோடு இயங்கவில்லை. ஆனால் 10ஆவது நூற்றாண்டைத் தொடர்ந்து முஸ்லிம் விஸ்தரிப்புவாதத்தால் பௌத்த இயக்கங்கள் அழிக்கப்பட்டன. பௌத்த மக்கள் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டனர். எனவே தான் அதற்கு எதிராக எமது பிக்குமார்கள் அணிதிரண்டு போராடத் தொடங்கினார்கள். தாம் போராடுவது சமாதானத்துக்காகவே என்று கூறினார்கள். உண்மையில் எங்களால் ஒரு கொசுவைக் கூட கொல்லமுடிவதில்லை. ஆனால் பலிபீடத்துக்கு தலையைக் கொடுக்க முடியாது. லேக் ஹவுஸ் பத்திரிகைகளோ பௌத்தர்கள் அஹிம்சைவாதிகள் எனக் கூறி மக்களின் மூளையை சலவை செய்யப் பார்க்கின்றன. மகாபோதியைத் தாக்கும் போதும், தலதா போதியைத் தாக்குகின்ற போதும், திம்புலாகல ஹாமதுருவை கொல்கின்ற போதும் எங்களைச் சும்மா இருக்கவா சொல்கின்றன இந்த என்ஜீ.ஓக்கள். புலிகள் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல கொழும்பிலும் இருக்கிறார்கள். எங்களுக்கு பாரிய பொறுப்புள்ளது...."

சம்பிக்க ரணவக்க உரையாற்றுகையில்

"...போலி சர்வமத குழுக்களும், என்.ஜீ.ஓ.க்களும், வர்த்தகர் சம்மேளனமும், ஐ.தே.க.வும், குப்பைக்கூடைக்குள் விழுந்திருக்கும் இடது சாரி முன்னணிகளும் சந்திரிகாவின் ஆசீர்வாதத்துடன் புலிப்பயங்கரவாதிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கும்படி கோருகின்றன. இவர்கள் எவருக்கும் புலிகளோடு பேசக்கோர உரிமை கிடையாது. இன்று 4 லட்சம் தமிழர்கள் கொழும்பு தலைநகரில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு கொழும்பில் வசிக்க உரிமை கிடைத்திருக்கிறது. ஆனால் சிங்கள முஸ்லிம்களை விரட்டிவிட்டு போலி தமிழ் விஸ்தரிப்புவாதத்தை நிறுவ முயற்சி செய்கின்றனர். தமிழ் குடியேற்றங்களை இங்கு அமைக்கும் தொலைநோக்கிலான திட்டமிட்ட நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். புலிகளோடு நேரடியாகப் பேசி உடன்பாடு காண்பதற்கூடாகவோ அல்லது புலிகளையும் தமிழ் மக்களையும் இரு வேறு தரப்பினர் என்று கருதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கூடாக இந்த பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவரலாமென சிங்கள தலைவர்கள் செயற்பட்டனர். ஆனால் இது வரை 23,000க்கும் மேற்பட்ட மக்கள் பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டுள்ளனர். 14,000 படையினர், 3500 சிங்கள மற்றும், சிங்களமல்லாதவர்கள், 550 முஸ்லிம்கள், கொல்லப்பட்டுள்ளனர். ஜே.ஆர் மாவட்ட அபிவிருத்தி சபையை அறிமுகப்படுத்தி சமாதானத்தை கொண்டு வரப்போவதாகப் பிதற்றினார். திம்பு பேச்சுவார்த்தை நடக்கும் போது தான் பாதுகாப்பு படையினரைச் சுற்றி நிலக்கண்ணிகள் வைக்கப்பட்டன. திம்பு பேச்சுவார்த்தையினால் நாங்கள் இழந்த யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க 10 வருடங்களைச் செலவிட வேண்டி வந்தது. இன்று புளொட், டெலோ, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்எல்எப். போன்ற இயக்கங்ளுக்கு விசித்திரமான சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு சுதந்திரமில்லையேல் மீண்டும் காடடுக்குத் திரும்பிப்போவோம் என டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். 82இலிருந்து இவர்கள் டெலோவுக்கு சம்பளம் வழங்கி வருகின்றனர். ஏனைய இயக்கங்களுக்கும் கூட அரசாங்கம் சம்பளம் வழங்குகிறது. இதனை நிறுத்தி அனைத்து இயக்கங்களிடமிருந்தும் ஆயுதங்களை களைய அரசை நாங்கள் நிர்ப்பந்திக்கிறோம். மாவட்ட சபை முடிந்து 1987இல் இந்தோ-லங்கா உடன்படிக்கையின் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு மாகாணமாக்கினார்கள். தமிழ் இனவாத இயக்கங்கள் இதன் மூலம் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதானத்தை கொண்டுவரப்போவதாக ஜே.ஆர் கூறினார் இந்த ஒப்பந்த்தினால் 72,000 சிங்களவர்கள் தென்னிலங்கையில் கொல்லப்பட்டனர். 667 பிக்குமார் கொல்லப்பட்டனர். இந்த உயிர்களுக்கு சகல அரசியற் தலைவர்களும் பொறுப்பெடுக்கவேண்டும்.



சம்பிக்க ரணவக்க

ரணிலுக்கும டில்வினுக்கும சந்திரிகாவுக்கும பாகுவுக்கும் ஒன்றைக் கூறுகிறோம சமாதானத்தைபற்றி மட்டும் அதிகம் கதைக்க வேண்டாம். அன்றைய பிணங்கள் மீண்டும் வெளியே வரும். பிரேமதாச பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்கியிருந்த போது 1238 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். பிரேமதாச காலத்தில் இத்தொகை 2679ஆக அதிகரித்தது. ரணில் போன்றோர் இதற்கு பொறப்பு கூற வேண்டும். சந்திரிகா பேச்சு வார்த்தையைத் தொடக்கி 4 மாதம் கூட ஆகவில்லை புலிப் பயங்கரவாதிகள் 3 ஆயுதக் கப்பல்களைக் கொண்டு வந்து சேர்த்தனர். ஒரு கப்பலில் வெடிமருந்து பொருட்கள் 60,000 தொன்கள் இருந்தன. சபுகஸ்கந்த, மருதானை, தெஹிவளை, சிறி தலதா மாளிகை என்பன தாக்கப் பட்டது இந்த வெடிமருந்துகளாலேயே.

இப்போது இந்தப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை, சமாதானம் என்றெல்லாம் பிதற்றப் படுகிறது. ஜீ.எல்.பீரிஸின் பொதி வரலாற்றுத் துரோ கம். அந்தத் துரோக அரசியலுகுக்குப் பதிலளிக்க மக்கள் தயார்.

ஜீ.எல்லுக்குஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறோம். முடிந்தால் பொதியை மக்களின் முன் வைக்கட்டும். புலிகளை யுத்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும், கருத்து ரீதியிலும் தோற்கடிக்கும் ஆற்றல் எங்களுக்கு உண்டு.

1971இன் தொகைமதிப்பீட்டின்படி வன்னியில் வாழ்ந்த தோட்டப்புற தமிழர்களின் எண்ணிக்கை 61,000 மட்டும் தான் இருந்திருக்கிறது. அதுவே 81 ஆகும் போது 141,000 ஆக ஆகியிருக்கிறத. இது போல குடியேற்றங்கள் தோற்றுவிக்கப்படுவது எதனால்? எங்களது போலி சமாதானத் தூதுவர்களிடம் கேட்கிறேன். இது போன்ற தமிழ் குடியேற்றங்களை அமைக்க புலிகள் எத்தனை கோடி ரூபாய்களை செலவிட்டிருக்கிறார்கள். எதிர்வரும் ஓகஸ்டுக்கு முன்னர் இந்த தேசிய இயக்கம் இராட்சத் பாய்ச்சலொன்றை பாய வேண்டும். பயங்கரவாத எதிர்ப்பியக்கத்தைத் தேசிய சக்தியாக ஆக்கிக் காட்ட வேண்டும். தற்போது பத்திரிகைகளுக்கூடாக எம்மைத் தாக்குகின்றனர். அவற்றிற்கு பதிலளிப்பதில் பிரயோசனமில்லை. அது காலவிரயம். செயலில் காட்டுவோம்.

எஸ்.எல்.குணசேகர உரையாற்றுகையில்

புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் விடுதலைக்கான அமைப்பல்ல. அவர்கள் அதிகாரத்தின் மீது கொண்டுள்ள பேராசையினாலேயே இந்த யுத்தத்தை நடத்தி வருகின்றனர். அவர்கள் மதத் தலங்களை அழித்து வருகிறார்கள். சகல சமாதானப் பேச்சுவார்த்தை காலங்களிலும் புலிகள் தங்களை பலப்படுத்திக்கொள்வதற்காகவே அதனைப் பயன்படுத்தி வந்துள்ளனர். எனவே இனிமேலும் பேச்சுவார்த்தையென்று ஒன்று நடக்குமாயிருந்தால் அது புலிப் பயங்கரவாதிகளை மேலும் பலப்படுத்தத்தான் பயன்படும். யுத்தம் மேலும் நீடிக்கும். பெரும் அழிவுகள் தொடரும் எனவே பேச்சுவார்த்தைக்கு இடமளிக்கக்கூடாது.

இந்தக் கூட்டத்தின் இறுதியில் படையைச் சேர்ந்த சிலரைத் தெரிவு செய்து அவர்களின் வீரப்பிரதாபங்களுக்காக விருதுகள் வழங்கப்பட்டன.

நுவரெலியா நகரில் இ.தொ.கா. இம்முறை மே தினத்தை நடத்துவதற்கு தீர்மானித்தது தொட்டு வீரவிதானவும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியிருக்கிறது. நுவரெலியாவில் இருந்து கிடைக்கின்ற தகவல்களின்படி மே தினத்துக்கு முதல் நாளான ஏப்ரல் 30ஆம் திகதி சிங்கள பேரினவாத சக்திகளை உற்சாகப்படுத்தும் நோக்கிலும், அடுத்த நாளைய மேதின கூட்டத்தை குழப்புவதற்கு ஒழுங்கமைப்பதற்குமென 30ஆம் திகதி வீரவிதான இயக்கத்தால் ஒரு கூட்டம் நுவரெலியா பொது நூலக சபையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்திருக்கிறது. புலியைத் தோற்கடிப்பதற்கானத் திட்டம் எனும் பேரில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்துக்கான பிரச்சார சுவரொட்டிகளில் [illegible]ட்ட மக்களுக்கு எதிராக இனவாதத்தை கக்குகின்ற வாசகங்கள் எழுதப் பட்டிருந்திருக்கின்றன. இ.தொ.க. ஆதரவாளர்களால் மேதின பிரச்சார சுவரொட்கள் கொண்டு அவை மூடப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து சில கைகலப்புகள் நடந்திருக்கின்றன. பொலிஸ் அதிகாரி வரை இப்பிரச்சினை போயுள்ளது. தொண்டமானுக்கு எதிராக நுவரெலியா மாவட்ட சில அரசியல் சக்திகளும் இந்த தருணத்தை உபயோகித்து வீரவிதானவுக்கு ஆதரவாக இருந்துள்ளனர். இவை எல்லாம் சேர்ந்து அடுத்த நாள் மேதினத்தன்று ஊ அடித்தல், சத்தமிட்டு கேலி செய்தல் எனப் பல ஆத்திரமூட்டல்கள் நடந்துள்ளன. சில கைகலப்புகளும் நடந்திருக்கின்றன. இ.தொ.க. அரசியல் பிரமுகர்கள் கூறுவதைப்போல தோட்டத்தொழிலாளர்களை அன்று கட்டுப்படுத்தாமல் போயிருந்தால் அன்றைய கைகலப்புகள் இனவன்முறை என்கிற அளவுக்கு மேலெழும்பியிருக்கும்.

பயங்கரவாத ஒழிப்பு இயக்கம் இச் சம்பவத்தைத் தொடர்ந்து பத்திரிகைகளில் பெரும் தொண்டமான் எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது. தொண்டமான் மலைநாடு அமைக்க அறைகூவியதை எதிர்த்தே 30ஆம் திகதி கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததாக சம்பிக்க ரணவக்க 3ஆம் திகதி வெளிவந்த லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

சிங்கள வீரவிதான இயக்கம் மிகவும் தீவிரமாகவும், திட்டமிட்டும், நிறுவனமயப்பட்டும் செயற்பட்டு வருவதை தொடர்ந்து அதனை ஆழமாக அவதானிப்போரால் அறியமுடியும். தென்னிலங்கையில் ஜே.வி.பி. தவிர்ந்த எந்த இயக்கமும் வீரவிதானவின் அமைப்பு பலத்துக்கு முன்னாள் தூசு என்றே கூறலாம். இவ்வமைப்பின் அமைப்பு வடிவமும், சித்தாந்த பலப்படுத்தலுக்கான வேலைத்திட்டமும், சிறு சிறு சேரிகள் வரை சென்று அமைப்புகளை உருவாக்கி வருவதும், அதன் உள்ளூர், வெளியூர் அமைப்பு வலைப்பின்னலும் எளிமைப்படுத்தி மதிப்பிடக் கூடியவை அல்ல. தாங்கள் குழப்ப நினைக்கும் எந்தவொரு கூட்டத்தையும் குழப்புவதற்கு கூட தனியான அணிகளை உருவாக்கி வைத்துள்ளனர். (கடந்த வருடம் டிசம்பர் 11ஆம் திகதி கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நடத்தப்பட்ட சமாதானக் கூட்டமும் இவர்களாலேயே குழப்பப்பட்டன என்பதும், அவர்கள் அடிதடிக்கும் தயாராக வந்திருந்தனர் என்பதும் பலர் அறிந்த விடயம்.) தமது செயற்பாடுகளை புரட்சிகர இயக்கங்களைப் போல தலைமறைவு வேலை முறையையும் கொண்டியங்கி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிராகவும், போராட்டத்துக்கு எதிராகவும், பிரச்சார நடவடிக்கைகளுக்கு மாத்திரம் தற்போது பல பெயர்களில் இன்டர்நெட் வெப் தளங்களை நிறுவியிருக்கின்றனர்.


தென்னிலங்கையில் சிங்கள மக்களை சிங்களபௌத்த பேரினவாத மயப்படுத்துவதில் திட்டமிட்டு செயற்பட்டு வருவதில் வீரவிதானவுக்கு நிகர் வீரவிதான தான். இந்தப் போக்கு காலப்போக்கில் பாசிசத்தை உறுதியாக நிறுவினாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை. ஏற்கெனவே இந்த நிலைமைகளுக்கு காரணமான சிங்கள அரச கட்டமைப்பும், அரசாங்கங்களும் இனி தமது வழியை மாற்றிக் கொண்டாலும் அதனால் பிரயோசனம் ஏற்படப் போவதில்லை என்பதை மற்றும் உணரமுடிகிறது. எழுச்சியுற்று வரும் சிங்கள பேரினவாத சக்திகளின் பிடியிடம் இருந்து அவையும் தப்பப் போவதில்லை.

தென்னிலங்கை பாராளுமன்ற சிங்கள அரசியல் சக்திகளைப் பொறுத்தவரை அவை ஒன்றில் முழுமையாக தம்மை மாற்றிக் கொண்டு அரசியல் செய்ய வேண்டும். இல்லையேல் தற்போதைய பேரினவாதத்திடம் முழுமையாக சரணடையவோ அல்லது அந்த பேரினவாதத்துக்கு தலைமைதாங்கவோ வேண்டிவரப்போகிறது. அவ்வாறு செய்யாவிட்டால் தற்போதைய நிலைமையில் அவை இருப்புக் கொள்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

—கோமதி

நன்றி - நூலகத்திட்டம்

# கூட்டம் பார்க்கப் போன ந.ச.ச.க. உறுப்பினர் கைது! புலிகளின் உளவாளி என்று சந்தேகமாம்!



பழனிமுத்து பஞ்சவர்ணம்

மலையகத்தில் மாத்தளையைப் பிறப்பிடமாகக்கொண்ட பழனிமுத்து பஞ்சவர்ணம் கடந்த 15 வருடங்களாக கொழும்பில் வசித்து வருபவர். நவ சமசமாஜக்கட்சியின் உறுப்பினராகவும், அக்கட்சியின் தமிழ்ப் பத்திரிகையான புதிய சமதர்மம் பத்திரிகையின் குழுவில் ஒருவராகவும் இருந்து வருகிறார். 20ஆம் திகதியன்று வீரவிதான கோஷ்டியினரால் கைது செய்து பொலிஸாரிடம் தான் ஒப்படைக்கப்பட்டமை குறித்து அவர் இப்படிக் கூறுகிறார்.

அன்று கட்சி வேலையாக சலாகாவில் போட்டோக்களை பெற்று வருவதற்காகப் போயிருந்தேன். அருகில் டவுன் ஹோலில் ஆர்ப்பாட்டம் நடப்பதைக் கேள்விப்பட்டு அதனையும் பார்த்து வரலாம் என்று போயிருந்தேன். அந்த ஆர்ப்பாட்டம், ஊர்வலம், கூட்டம் என்பனவற்றைப் பார்த்துவிட்டு பஸ் ஏறி வரும் போது கொம்பனி வீதியிலுள்ள சோதனை அரணுக்கு அருகிலுள்ள பஸ் நிலையத்தில் பஸ் நின்றது. அப்போது சுமாராக 3 மணி இருக்கும். பஸ்ஸில் வைத்து இருவர் சாரதியிடம் எதையோ சொல்லிவிட்டு இறங்கிச்சென்று காலரணில் உள்ள பொலிஸாரிடம் எதையோ கதைத்து விட்டு திரும்பி வந்தனர். என்னை இறங்கச் சொல்லிவிட்டு பஸ்ஸை அனுப்பி வைத்தனர். நான் இறக்கப்பட்டு பொலிஸ் அதிகாரியொருவரால் விசாரிக்கப்பட்டேன்.

அப்போது தான் என்னால் உணர முடிந்தது, என்னை ஆரம்பத்திலிருந்தே இரு சிங்கள இளைஞர்கள் பின் தொடர்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும், அவர்களின் நிர்ப்பந்தத்தாலேயே இறக்கி விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன் [illegible]தையும்.

அவர்கள் இருவரு[illegible]கள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எ[illegible]ம் வீரவிதானவின் உறுப்பினர்கள் என்றும், ப[illegible]ங்கரவாத எதிர்ப்பியக்கத்தின் கூட்டத்தை வேவு பார்க்க வந்த புலிகளின் உளவாளி நான் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்தனர். பொலிஸார் என்னை விசாரித்தனர். நான் நவ சமசமாஜக்கட்சியின் உறுப்பினர் என்றும், கட்சி வேலையாக வெளியில் வந்ததையும், கூட்டத்தையும் பார்த்துவிட்டு திரும்பிப் போகும் வழியிலேயே இவ்வாறு நடந்தது என்பதையும் தெரிவித்தேன். பொலிஸார் என்னுடன் அந்தளவு மோசமாக நடந்து கொள்ளவில்லை. ஆனால் அவ்விளைஞர்கள் இருவரும் தொடர்ந்தும் பொலிஸாருடன் தர்க்கித்தனர். தாங்கள் பின்தொடர்ந்து கண்காணித்து வந்த சந்தேகத்துக்கிடமான ஒரு நபரை சுலபமாக விடுவிக்க வேண்டாம் என்றும் என்னை கைது செய்து விசாரிக்கும்படியும் கூறினர்.

அங்கிருந்த பொலிஸ் அதிகாரியும் பொலிசுக்கு தகவல் அனுப்பி ஒரு வாகனத்தை வரவழைத்து என்னையும் அந்த இளைஞர்கள் இருவரையும் ஏற்றி பொலிசில் போய் பார்த்துக்கொள்ளும்படி கூறி அனுப்பினார்.

பொலிஸ் வ[illegible]ததும் அங்கும் விசாரணை நடந்தது. அந்த இருவரும் என்னை உளவாளி என்று முடிவே செய்திருந்தார்கள். என்னை உள்ளே தள்ளாமல் போகமாட்டேன் என்றிருந்தார்கள். 5 மணியளவில் நான் அத்தனையையும் கூறியதன் பின்னரும் எனது வாக்குமூலத்தை உறுதி செய்வதற்காக நவசமசமாஜ கட்சி காரியாலயத்துக்கு என்னை அழைத்து வந்தனர். அங்கு தோழர் திருநாவுக்கரசு உள்ளிட்ட கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் பலர் இருந்தனர். அவர்கள் என்னைப் பற்றி உறுதிபடுத்தினார்கள். ஆனாலும் ஒரு வாக்குமூலத்தை எடுத்துவிட்டு விடுகிறோம் என்று கூறி மீண்டும் என்னை பொலிசுக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்விளைஞர்கள் இருவரும் முறைப்பாடு எழுதி கொடுத்ததினாலேயே வாக்கு மூலத்தைப் பெற்றுக் கொண்டு விடுவித்து விடுவதாகக் கூறிய பொலிஸார் பின்னர் அங்கேயே தடுத்து வைத்து விட்டனர். அன்று இரவு 8 மணிக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வந்து என்னை விசாரணை செய்தனர். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வீட்டிலிருந்து யாரும் வரவில்லையா என்று கேட்டனர். ஆனால் அதுவரை வீட்டுக்கும் பொலிஸார் தகவல் அனுப்பி வைத்திருக்கவில்லை. கட்சி உறுப்பினர்கள் தான் வீட்டுக்கு தகவல் தெரிவித்திருந்தனர். மீண்டும் என்னிடம் வாக்குமூலம் ஒன்றினை எடுத்தனர். எனது முழு விபரத்தையும் வாக்குமூலமாகப் பெற்றுக் கொண்டனர். எனது பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, தொழில், கொழும்பு வந்ததன் நோக்கம், நவசமசமாஜக்கட்சியில் இணைந்ததற்கான காரணம். அதில் எனது பொறுப்புக்கள் என பல கேள்விகளைக் கேட்டதோடு, வீரவிதானவின் கூட்டத்தை பார்க்கப் போனதன் காரணத்தையும் கேட்டனர். இந்த நாட்டின் பிரஜை என்கின்ற முறையில் ஒரு பகிரங்கக் கூட்டமொன்றை காணச் சென்றேன் என்று பதிலளித்தேன்.

பின்னர் சிங்களத்தில் எழுதப்பட்ட அறிக்கையைக் காட்டி அதில் கையெழுத்து இடும்படி கேட்டனர். சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த அதில் கையெழுத்திட்டேன். எனக்கு அதில் இருந்த சிங்களம் தெரியாது.

பின்னர், கட்சியிலிருந்து யாரையாவது வரச்சொல்லி பிணை வழங்கினால் என்னை விடுவித்துவிடுவதாகக் கூறினார்கள். ஆனால் அதற்கு உள்ளே இருக்கும் எனக்கு வாய்ப்பு இருக்கவில்லை. அதற்குள் 12 மணியளவில் என்னை நீதிமன்றத்தில் ஒப்படைத்து விடுவிப்பதாகக் கூறி அழைத்துச் சென்றனர். கொம்பனி வீதியிலுள்ள கோட்டை நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்ற போது அங்கு நீதிவான் இருக்கவில்லை. பின்னர் என்னை மகசின் சிறைச்சாலைக்கு கொண்டு சென்று அடைத்து விட்டனர். அடுத்த நாள் சனி, ஞாயிறு இரு தினங்களும் நீதிமன்றங்கள் இயங்காது. எனவே திங்கள் வரை உள்ளே அடைந்திருக்க நேரிட்டது. முதலில் கொம்பனி வீதி பொலிஸில் வியாழக்கிழமையும், மகசின் சிறைச்சாலையில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களும் இருந்தேன். மகசின் சிறைச்சாலையில் ஒரு பெரிய அறையில் 130 பேருக்கு மேல் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். சிங்களம் பேசத்தெரியாத ஒரு தமிழ் இளைஞனை அந்த ஒரே காரணத்துக்காக சிறைக்காவலர்கள் தாக்கியது, தண்டனை பெற்ற குற்றவாளிகளின் சண்டித்தனம், வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கொண்டு வரப்பட்டிருந்தவர்களின் அவலம் என பலவற்றையும் காணக் கிடைத்தது.

24ஆம் திகதி திங்கள் மீண்டும் கோட்டை நீதிமன்றத்துக்கு என்னைக் கொண்டுவந்து குற்றங்கள் எதுவுமின்றி விடுவித்தனர்.

# இ.தொ.கா. மே தினக் கூட்டத்தில் குழப்பம் !

கடந்த மே தினத்தன்று நுவரெலியாவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய மேதின ஊர்வலம் கூட்டம் என்பனவற்றை குழப்பவும், அதனை இனவன்முறையாக ஆக்கவும் சிங்கள வீரவிதான இயக்கம் செய்த முயற்சியும், அங்கு நடந்த சில அசம்பாவிதங்களும் தொடர்ச்சியாக சர்ச்சைக்குரிய விவாதமாக ஆகியுள்ளன. இம் மேதினக் கூட்டம் குழப்பப்பட்டமை குறித்து காலம் கடந்து ஞானம் பிறந்தாகக் காட்டிக்கொண்ட தொண்டமான் அக்கூட்டம் சிங்கள வீரவிதான இயக்கத்தினால் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என திடீரென்று அறிக்கை விட்டதைத் தொடர்ந்து இப்பிரச்சினை அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக ஆனது. அமைச்சர் தொண்டமானின் அவ்வறிக்கையில் இது குறித்து அரசாங்கம் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகரின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு எடுக்கும் வரை புதிதாக அமைக்கப்பட்ட மாகாண அரசாங்கங்களுக்கு தாம் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் தொண்டமான் மலையக மக்களின் முக்கிய பிரச்சினைகள் குறித்து தீர்மானகரமான நிபந்தனைகளுடனும், ஒப்புதல்களுடனுமே மாகாண சபை அரசாங்கங்களுக்கு தாம் ஆதரவு அளிக்கப்போவதாக முன்னர் அறிவித்திருந்தார். ஆனால் வெறும் மே தின நிகழ்ச்சியை எடுத்து அதனையே ஒரு நிபந்தனையாக விதித்தமையும் அதனைத் தொடர்ந்து அவர் மீதும் மலையக மக்கள் மீதும் சிங்கள பௌத்த பேரினவாதம் பாய்ந்த பாய்ச்சலானது மலையக மக்களின் உண்மையான கோரிக்கைகளையும் மறக்கடிக்கும்படி செய்யப்பட்டிருந்தது. உண்மையில் தொண்டமானுக்கும் இது தான் தேவைப்பட்டிருக்கும். தொண்டமான் வாழ்வதே இப்படி அடிக்கடி பேரினவாதத்துக்கும், பேரினவாத அரசாங்கங்களுக்கும் எதிராக மேற்கொள்ளும் வாய்ச்சவாடலாலும், கவர்ச்சிகரமான தாக்குதல்களாலும் தான். இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் தொண்டமானை பாதுகாக்க வேண்டுமென்கிற கருத்து பொதுவாக தமிழர்கள் மத்தியில் பரவுவது வழக்கம். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை தொண்டமான் அதிகபட்சம் பயன்படுத்துவது வழக்கம். அவ்வாறான ஒன்று தான் இந்த மேதின குழப்பமும், அரசாங்கத்துக்கு இட்ட நிபந்தனையும். அப்படிப் பார்த்தால் இந்த மே தினமென்ன மலையகத்தில் வேட்டையாடப்பட்டுக் கொண்டிக்கும் மலையக இளைஞர்களுக்காக (இவ் வேட்டையாடலின் பங்குதாரர்கள் என்பதை திரும்பத்திரும்ப சொல்லத்தேவையில்லை) தனது அமைச்சுப் பதவியை துறந்திருக்க வேண்டும். அதிகம் தேவையில்லை இரத்தினபுரியில் நடத்தப்பட்ட நரவேட்டையை எதிர்த்து தற்போது அரசாங்கத்துக்கு வழங்கி வரும் சகலவித ஆதரவினையும் வாபஸ் வாங்கியிருக்க வேண்டும்.

இம்முறை தான், மே தின சம்பவத்துக்கு பின்னால் இருந்த அமைச்சரின் பெயரை அம்பலப்படுத்த கூட தொண்டமான் பின்வாங்கலாம். ஆனால் ரத்தினபுரி சம்பவத்துக்கு பின்னால் இருந்த அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களின் முழு விபரங்களும் முழு மக்களும் அறிவர். ஆனால் இது வரை அமைச்சர் தொண்டமான், அச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தக்கோரி எந்தவித நிர்ப்பந்தங்களையும் கொடுக்கவுமில்லை. அதற்காக எந்தவித 'நிபந்தனையையும் விதித்ததில்லை. இன்று ரத்தினபுரி சம்பவம் மறக்கடிக்கப்பட்ட சம்பவமாகப் போய்விட்டது.



'...நாங்கள் மாதாமாதம் அவசரகால சட்டத்துக்கு அதரவளித்து வருபவர்கள். அவ்வாறு ஆதரவளிப்பதன் நோக்கம் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே. அப்படிப்பட்ட எங்களை பயங்கரவாதத்துக்கு ஆதவானவர்கள் என்று முத்திரை குத்த முயற்சிக்கிறார்களே....' இவ்வாறு தெரிவித்திருப்பவர் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நுவரெலியா மாவட்ட எம்.பி. சதாசிவம். மே தினமன்று இ.தொ.க.வின் கூட்டம் குழப்பப்பட்டமை குறித்து லங்காதீப பத்திரிகையாளர்கள் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு ஆராய சென்றிருந்த போதே அவர் அவ்வாறு தெரிவித்திருக்கிறார். மே 23ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் இச்சம்பவம் பற்றிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகளின் கருத்துக்கள் அப்பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தன.

ஒரு புறம் தமிழ் பத்திரிகைகளுக்கு புலிகளைப் பற்றியும், வடக்கு கிழக்கு போராட்டம் குறித்தும் ஆரவாரத்தோடு ஆதரித்துப் பேசும் இ.தொ.கா. இன்னொரு புறம் தம்மை அப்போராட்டத்தக்கு எதிரானவர்கள் என்று காட்டுவது அதன் உண்மையான சுயரூபத்தை தோலுரித்துக்காட்டப் போதுமானது.

இந்த பேரினவாத செயற்பாடுகளின் மூலம் அரசியல் லாபமடைய எதனையும் செய்யத்தயாராக இருக்கும் பேரினவாத அரசியல் தலைவர்களுக்கும் தொண்டமானுக்கும் எந்த வித்தியாசமுமில்லை.

பேரினவாதத்தை எதிர்த்து நிற்கும் அனைவரும், தனது அரசியல் நலன்களுக்காக சொந்த மக்களை எந்த நிலையிலும் பழியாக்க தயாராக இருக்கும் தொண்டமானின் திருகுதாளங்களை அறிந்து வைத்திருத்தல் மிகமிக அவசியம்.

நன்றி - நூலகத்திட்டம்



பிரெக்ட் நூற்றாண்டு விழா:

# ஜெர்மனியிலிருந்து ஒரு மக்கள் கலைஞன்...

பிரெக்டின் 'எமக்குப் பின் பிறந்தார்க்கு' என்ற கவிதை தான் அவர் பெயரைச் சொன்னவுடன் நினைவுக்கு வரும். பிரெக்டின் முக்கியமான அரசியல்



கவிதைகளில் அது ஒன்று.

"அவர்கள் சொன்னார்கள்:
'சாப்பிடு, பருகு'
கிடைத்ததே என்று சந்தோசப்படு'
எப்படி நான் தின்பேன், குடிப்பேன்!
எனக்கான சோறு பசித்தவனிடமிருந்து
பிடுங்கிக் கொடுக்கப்படுகிறதே,
கிடைக்கும் ஒரு குவளைத் தண்ணீரும்
தாகத்தால் துடிப்பவர் கையில்
இருக்கிறதே.
இருப்பினும் நான் தின்கிறேன்,
குடிக்கிறேன்."

பிரெக்ட் பெர்லின் நகரத்திற்கு வந்தபோது எங்கும் பசி, பட்டினிச்-சாவுகள், மக்களின் கலகங்கள். கலகம் செய்தவர்களோடு பிரெக்டும் சேர்ந்து கொண்டார். கிடைத்த நேரத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டார். எந்நேரமும் கொலை நிழல் அவரது உறக்கத்தின் மீது படர்ந்து கொண்டே இருந்தது. பேச உரிமை இல்லை, நடமாட உரிமை-யில்லை. அதிலும் அரசியல் விமர்சகர் உண்மையைப் பேசினால் கசாப்புக்கு அனுப்பப்பட்டார். அரசியல் தொடர்பு-களைச் சந்திப்பதற்குச் சென்றால் அநேகமாகச் சிறைக்குள் தள்ளப்படுவது நிச்சயம்; அல்லது சுட்டுக் கொல்லப்-படலாம்.

ஜெர்மனியில் ஹிட்லரின் கூலிப்படைகளின் அடக்குமுறை ஆட்சி பற்றி பிரெக்ட் எழுதிய கவிதையே மேலே நீங்கள் படித்தது. அவர் கலை வேறு, வாழ்க்கை வேறு என்று வாழ்வதை வெறுத்தார். அதனாலேயே பல பிரச்சினைகளை எதிர் கொண்டார். பிரெக்ட் உள்ளுறையாக மறைத்து அரசியலை எழுதினாலும், அதை ஹிட்லரின் உளவுப்படை விளங்கிக் கொண்டது. அவரது நூல்களைத் தேடிப்பிடித்து எரித்தது. தடை செய்தது. அவரது நாடகங்களுக்கு உயிர் கொடுத்து வந்த நாடக அரங்கம் பூட்டிச் சீல் வைக்கப்பட்டது.

தனது பதினாறாவது வயதிலேயே சமூக நோக்குள்ள கவிதை எழுதத் தொடங்கிய அவர், தனது வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சந்திக்கக் கூடும் என்று தெரிந்தே இப்படி முடிவு செய்திருந்தார். ஆரம்ப காலத்திலேயே, - "கவிதை என்பது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தரத்தில் சுய அனுபவங்களைச் சொல்ல வேண்டும். அன்றாட சமூக, அரசியல் பிரச்சினைகளைப் பற்றி எழுதினால், அவற்றின் வாழ்வு அற்ப சொற்பமாக முடிந்து போய்விடும்" என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. தனது கவிதைகளுக்கு நிரந்தரத்துவம் தேவையில்லை. அதைப் படிப்பவர் ஏற்றுப் பயன்படுத்த வேண்டும். அந்தக் கருத்துக்களுக்கு செயல் உருக்கொடுக்க வேண்டும் என்று முடிவு கொண்டிருந்தார்.

முப்பதாம் ஆண்டுகளில் ஜெர்மனியக் கவிஞர்கள் சிலர் வறுமைக்கும், துயரத்-துக்குமான காரணத்தை சமூகத்துக்கும் அப்பால் தேடிப் பிடித்து, தப்பித்து, விலகி வாழ்ந்த போது, பிரெக்டும் அவரைப் போன்ற சிலரும் அதற்கான காரணங்களைச் சமூகத்திலேயே தேடினார்கள். பொருளாதாரச் சீர்குலைவே சமூக அவலங்களுக்கு அடிப்படை, இதற்குக் காரணம் முதலாளித்துவப் பொருளாதாரமே என்று மார்க்சிய தத்துவத்தை வழிகாட்டியாக மேற்கொண்டார்கள்.

தொழிலாளிகள் ஐரோப்பா முழுவதும் ஒரு பெரும் சக்தியாகத் திரண்ட அன்றைய சூழலில் பிரெக்டு போன்றவர்கள் 'நடை முறைப் பாடல்கள்' என்ற வடிவத்தைத் தேர்ந்-தெடுத்தார்கள். சாதாரணத் தொழிலாளிகளும் எளிதாகப் பாடுவதற்காகப் பாடல்களை எழுதினார்கள். தனி நபர்வாதக் கவிஞர்களுக்கு எதிராக அரசியல் கலகக் கொடி ஏற்றிய கலைஞர்களுக்கு பிரெக்டு தலைமை தாங்கினார் என்றே சொல்லலாம்.

தனிநபர்வாதிகள் தங்கள் கவிதைகளின் ஆழத்துக்காக, ரசனைகளுக்காக பழைய வடிவங்களிலிருந்தும் சரி, புதிய வடிவங்களிலும் சரி 'உயர்ந்த' பாணியை கடைப்பிடித்தார்கள். அதற்கு நேர் எதிராக - பிரெக்ட் ஜெர்மனிய நாட்டுப்புறப் பாடல்களைப் பயன்படுத்தி கதைப் பாடல்களை எழுதினார்.

அவரது பாடல்கள் போர்க்கள முழக்கமாயின. படைநடைப் பாடல்களாயின. அங்கத வீச்சு வாள்களாயின. அவரது கதைப் பாடல்கள் ஒரே ஒரு கித்தாரைப் பின்னணி இசையாக மீட்டி இசைக்கப்பட்டன. அவரே கித்தாரை மீட்டிப்பாடுவார். நடைமுறைப் பயன்பாடு என்ற அணுகுமுறையை வைத்து கலையின் புது அழகியலை உருவாக்கிக்-கொண்ட பிரெக்ட் இயல்பாகவே நாடகத்தின் பக்கம் இழுக்கப்பட்டார். அவரது கதைப் பாடல்கள் நாடக அரங்கிலும் இடம்பெற்றன.

நாடக அரங்கிலும், சினிமாவிலும் இசைப்-பாடல்களைப் பயன்படுத்தினார். குர்த்வைல், ஹான்ஸ் ஐஸ்லர் போன்ற இசையமைப்பாளர்-களைக் கொண்டு இசையமைத்து இவர் அமைத்த பாடல்கள் சர்வதேச அளவில் தொழிலாளர் இயக்கங்களில் ஏற்றுப் பாடப்பட்டன. ஜெர்மனி, ரசியா, பிரான்ஸ், ஸ்பெயின் உள்நாட்டுப்போர் அமெரிக்கா போன்ற நாடுகளின் தொழிலாளர் வழி நடைப்-பாடல்களாக அவை உருவாயின. ஒரு சில தொழில் விற்பன்னர்களின் அக்கறையாக இருந்த கவிதை பல இலட்சம் தொழிலாளர்களை முடுக்கி, தூண்டி, உணர்வூட்டி இயக்கிய ஜனரஞ்சகமான பாடல்களாயின.

அவரது பேனாவிலிருந்து பல நாடகங்கள் பிறந்தன. அவை அன்றைய அரசியல் பற்றிய கூர்மையான அங்கத நகைச்சுவை நாடகங்க-ளாகவோ, அல்லது முதலாளித்துவச் சந்தையைத் திரைகிழிக்கும் விமர்சன அரசியல் நாடகங்களாகவோ இருந்தன. 'எடுத்த நடவடிக்கைகள்', 'சந்தையின் புனித ஜோன்', கார்க்கியின் 'தாய்' நாவலின் நாடக வடிவம், 'மூன்று பென்னி (ஜெர்மனிய நாணயம்) இசை நாடகம்', வட்டத்தலைகளும் முக்கோணத் தலைகளும்' (ஒருவரின் இனத்தை வைத்து அவர் குலத்தைத் தீர்மானிக்கும் ஹிட்லரின் இனவெறி அரசியலைக் கிழித்தெறியும் அங்கத நாடகம்), 'வெள்ளை வட்டம்' (உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கருத்து), 'கலிலியோ' (பூமி உருண்டை என்று முடிவெடுத்ததற்காக கிறிஸ்தவ மதத் தலைவர்களால் சித்திர-வதைக்குள்ளாகும் கலிலியோ வாழ்க்கை பற்றி) - இப்படிப் பல நாடகங்கள் காவிய பாணியில் படைக்கப்பட்டன.

பிரெக்ட் விஞ்ஞான யுகத்திற்கேற்ப தன் நாடக மேடையை அமைப்பதாகச் சொன்னார். "விஞ்ஞானம் என்பது நேருக்கு நேர் மோதுதலைக் கொண்ட அறிவுத்தேட்டம்... அதுபோல, நாடகக்-காரர்களான நாம் விஞ்ஞானத்துக்கு முந்திய அஞ்ஞான யுகத்தில் இருப்பது போல் நடக்க முடியாது. பார்வையா-ளர்கள் நுழைவாயிலேயே தங்கள் மூளைகளைக் கழட்டிவிட்டு வரும்படி நாம் கோரமுடியுமா? அது வெட்கக் கேடானது, அதேநேரம் அபாயகர-மானதும் பொறுப்பற்றதும் கூட."

சமூகத்தை, அரசியலை விளங்கிக் கொள்வதும், அதை மாற்றுவதற்கான உந்துதலைப் பெற்றுக் கொள்வதும் நாடக மேடையிலிருந்தும் நடக்க வேண்டும். இதற்கேற்ற 'காவியபாணி' என்றொரு பாணியை, வடிவத்தை பிரெக்ட் உருவாக்கினார். பல ஊற்றுமூலங்கள் இதற்கு உண்டு. கிழக்கு ஆசிய நாடக மேடையின் எளிமையும் தூரப்படுத்தும் கோட்பாடும், ஹெர் ஸ்டெயின்ரக் என்ற நடிகரின் தேர்ந்த யதார்த்த பாணி நடிப்பு, எர்வின் பிஸ்கேட்டர் என்ற கம்னியூஸ்டு அரசியல் நாடக இயக்குனரின் நாடகங்கள், அமெரிக்கர்களின் அங்க சேட்டைகள் - இதிலிருந்து மனித நடத்தைகள் பற்றிய கவனிப்பையும் ஆய்வையும் பிரெக்டு எடுத்துச் செய்தார். சார்லி சாப்ளினின் பாவனைகள் (உடல் அசைவுகள்) இப்படி ஒரு வளமான கல்வியைப் பிரெக்டு தன் சொந்த முயற்சியில் பெற்றிருந்தார்.

ஆசிய நாடகங்களிலிருந்து அவர் பெற்ற தூரப்படுத்தும் வடிவம் பற்றிச் சில முக்கிய பிரச்சினைகளை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக தமிழக தெருக்கூத்தில் இடம்பெறும் கதை சொல்லும் முறையும், கட்டியங்காரனின் பங்கு பாத்திரமும் இத்தகையது. பழம் சீன நாடகங்கள் பற்றி பிரெக்ட் இதேபோல் குறிப்பிடுகிறார். மேடையில் நடக்கும் கதை பல ஆயிரமாண்டு முந்தையதாக இருந்தாலும், இடையே கதையைத் தற்கால அரசியலுக்கும், சமூகச் சூழலுக்கும் பொருத்தியோ அல்லது விமர்சித்தோ நடத்துவது இதன் முக்கியமான அம்சம். இதன் மூலம் நாடகம் பார்ப்பவர்கள் நாடகத்தின் உணர்ச்சிமயமான (நகைச்சுவை, சோகம்) பாத்திரங்களிலோ காட்சிகளிலோ மூழ்கிவிடாமல் ஒரு சமூக விமர்சகனைப் போலவும், ஒரு ஆய்வாளனைப் போலவும் விலகி நின்று ஆராயும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பிற்போக்குக் கருத்துக்களைத் தாங்கி இருப்பினும், ஆசிய நாடகங்களில் - குறிப்பாக நாட்டுப்புறக் கலைகளில் இந்தக் கூறுகள் உண்டு. இவை பற்றி பிரெக்ட் அறிந்திருந்தார். உணர்ச்சிகளுக்கு அல்ல, மாறாக அறிவுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று காவிய பாணி நாடகம் பற்றி அவர் கூறியதாகக் குறிப்பிடு-வார்கள்.

பிரெக்டின் கலைப்பாணியை அவர் வாழ்ந்த காலத்தின் அரசியல் பாண்பாட்டுச் சூழலுடன் பொருத்திப் பார்த்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆரிய இனவெறி, வெள்ளைநிற வெறி, யூத எதிர்ப்பு, ஜெர்மன் தேசவெறி, போர்வெறி ஆகிய அனைத்தும் கலந்த நாஜி அரசியல் ஜெர்மனிய மக்கள் மீது செல்வாக்கு செலுத்திய காலம் அது.

ஆரிய இனத்தவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அரைக் குரங்குகள் என்று கருதும் இனவெறி வெறும் அரசியல் பிரச்சாரமாக மட்டுமின்றி பரிணாம வளர்ச்சிக் கோட்பாடாக இயற்கை விஞ்ஞானமாகவே திருத்தி எழுதப்பட்ட காலம் அது. வேறு வார்த்தைகளில் சொன்னால் போலி உணர்ச்சிகளின் பலி பீடத்தில் பகுத்தறிவு காவு கொடுக்கப்பட்ட காலம் அது.

அந்தப் போலி உணர்ச்சிகளின முகத்திரையைக் கிழித்தெறிய கலை, இலக்கியமும் பகுத்தறிவு எனும் ஆயுதத்தை முதன்மையாகப் பயன்படுத்த வேண்டியிருந்த காலம் அது.

எனினும், அறிவும் உணர்ச்சியும் இசைந்து செல்லும் படைப்பில் தான் கலை, இலக்கியம் முன் மஹாதிரிகளைப் படைக்கிறது. இசைந்து செல்லுதல் என்பது ஒத்து ஊதுதல் அல்ல.

பிரெக்டின் அனுபவத்தை நாம் நமது நிலைக்குப் பொருத்துவது எப்படி? மதவெறியும், தேசவெறியும் ஆளும் வர்க்கங்களின் புனிதமான ஒழுக்க விழுமியங்களும் "உணர்ச்சிபூர்வமாக" ஊதிப் பருக்க வைக்கப்படும்போது, பகுத்தறிவு எனும் குண்டூசியால் நமது படைப்புக்கள் அதனைக் குத்த வேண்டியிருக்கிறது.

நுகர் பொருள் மோகமும், இன்பக்-களியாட்ட வெறியும், அந்த வாழ்க்கையைப் பெறுவதற்காக எல்லா மனித உறவுகளையும், சக மனிதர்களையும் பண்டமாகக் கருதி "வரவு - செலவு கணக்கு" போடும் காரிய சாத்தியப் (Pragmatic) 'பகுத்தறிவும்' கோலோச்சும் இன்றைய பண்பாட்டுச் சூழலில் இதற்கெதிராக உழைக்கும் மக்களின் உணர்ச்சியை வாளாக ஏந்தவும் வேண்டியிருக்கிறது.

சமூக மாற்றத்திற்கான நோக்கமோ, அதற்குரிய நாணயமான நடைமுறையோ, இல்லாத முதலாளித்துவ அறிஞர்கள் சிலர் பிரெக்டின் தூரப்படுத்தும் கோட்பாட்டைச் சோதனை செய்து பார்க்கவும் அதற்குப் புதிய தத்துவஞான விளக்கம் தரவும் முயற்சிக்கிறார்கள்.

ஆனால், சோசலித்தையும், சோவியத் அரசு வடிவத்தையும் எதிர்த்த இவ்வறிஞர்களின் மூதாதையர்களை எதிர்த்துப் போராடியவர் பிரெக்ட். சோசலிசம் உருவாக்கும் புதிய மனிதனைப் போற்ற கிழக்கு ஜெர்மனியின் கூட்டுப் பண்ணை அனுபவத்தை மேடையேற்றியவர். பால்ராப்சனைப் போலவே சோவியத் அளித்த லெனின் விருது பெற்ற, கலைஞர்.

முதலாளித்துவத்தைக் கட்டோடு வெறுத்த, சோசலிசத்தை நேசித்த, ஒரு இயங்கியல் பொருள் முதல்வாதிதான் பிரெக்ட் எனும் மனிதன். அந்த மனிதனில் மலர்ந்தவன் தான் பிரெக்ட் எனும் கலைஞன்.

பிரெக்ட் எனும் மனிதனின் சமூகக் கண்-ணோட்டத்தை ஏற்க மறுக்கும் "கலை விற்பன்-னர்கள்" அவரது கலைக்கோட்பாட்டின் அடிப்-படையில் நடத்தும் "வித்தியாசமான சோதனை"களுக்கும், டி.வி.எஸ். அய்யங்கார், நாட்டுக் கோட்டை செட்டியார் வம்சங்களைச் சேர்ந்த மாமிகளும், ஆச்சிகளும் சதையைக் குறைப்பதற்காக நடத்தும் "நாட்டிய சோதனை"களுக்கும் பெரிய வேறுபாடு இல்லை.

"எங்கள் மூளைகளிலிருந்து சில்லு-களையும், தூசுகளையும் துடைத்தெறிந்தவர்" என்று பிரெக்டைப் பற்றிக் கூறுகிறார் அன்னா செகர்ஸ் என்ற சக எழுத்தாளர். தாங்கள் அமைதி கண்டுவிட்டதாகச் சொன்ன நண்பர்களை ஓயாது தொந்திரவு செய்து அவர்களது அமைதியைக் குலைத்தவர் பிரெக்ட். அவரது நூற்றாண்டில் நாம் தொடர வேண்டிய பணியும் அதுதான்.

நன்றி : புதியகலாசாரம்

## பிரெக்டின் வாழ்க்கையிலே....

பெர்டோல்டு பிரெக்ட் - நாஜி இட்லரை குலை நடுங்க வைத்த கம்யூனிஸ்டு கலைஞர்களில் ஒருவர். முக்கியமாக நாடக ஆசிரியர். ஒரு கவிஞர். மக்கள் கலை படைத்த ஒரு பேனாப் போராளி.

1898-இல் ஜெர்மனியில் பிறந்த பிரெக்டு, தாயின் மத நம்பிக்கையில் வளர்க்கப்பட்டு, பின் எந்த மத நம்பிக்கையுமில்லாதவராக முதிர்ச்சி பெற்று ஒரு கம்யூனிஸ்டுக் கொள்கைப் பற்றாளராக வாழ்ந்தார். முதல் உலகப்போர் நிகழ்ச்சிகள் அவருக்கு ஏகாதிபத்திய நரகத்தையும், சோசலிச ரசியா என்ற நம்பிக்கை மலர்ச்சியையும் ஒருங்கே அடையாளம் காட்டின.

1918-இல் இராணுவ மருத்துவமனையில் சேவை செய்ய உதவியாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று ஜெர்மனி இளைஞர்கள் கட்டாய இராணுவ சேவை செய்தேயாகவேண்டும். அது 'தேச'ப்பணி. இதற்குப் பிறகு மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து முடித்தார். என்றாலும் ஜெர்மனிய இதயங்களின் மனநோய்க்கு மருந்துகாண கலை இலக்கியத்தையே வாழ்க்கையாகத் தேர்ந்தெடுக்கொண்டார்.

1942-இல் பிரெக்டு பெர்லின் நகருக்குச் சென்று அங்கு பத்தாண்டுகள் வாழ்ந்தார். 'டாய்ட்ஸ் தியேட்டர்' என்ற நாடக அரங்குடன் இணைந்து பல நாடகங்களை எழுதி இயக்கினார். இவ்வாண்டுகளில் அவர் மார்க்சியத்தை முறையாகப் படித்தார். பாட்டாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தைப் பயின்ற-தோடு நில்லாமல் அவர்களோடு வாழ்ந்து அவர்களின் போராட்டங்கள், நடப்பு அரசியல் நிகழ்ச்சிகளை நெருங்கிக் கவனித்தார்.


1928-இல் தொழிலாளிகளுக்காக நடத்தப்பட்ட "மார்க்சியப் பள்ளி'க்குச் சென்று கற்றார். நாஜிகள் உருவாக்கி வந்த யுத்தம் பற்றி வர்க்க விழிப்பு தேவை என்பதைப் பிரச்சாரம் செய்தார். இக்காலத்தில்தான் எலன் வைகல் என்ற பொதுவுடமைப் பற்று கொண்ட நடிகையை மணந்தார். நாஜிகள் சர்வாதிகாரம் ஆட்சிக்கு வருவதற்குச் சில நாட்கள் முன்னமேயே "வட்டத்தலைகளும் கோணத் தலைகளும்" என்ற நாடகத்தின் மூலம் இட்லரின் 'தேசிய சோசலிஸ்டுகள்' பற்றிய முதல் எச்சரிக்கையை மக்களிடம் கொண்டு சென்றார்.

1933-இல் நாஜிகள் ஆட்சிக்கு வந்தனர். பிரெக்டின் மீது பாசிசக் கட்டுமிராண்டித் தாக்குதல் தொடங்கியது. அவரது புத்தகங்கள் எரிக்கப்பட்டன. 'டாய்ட்ஸ் தியேட்டர்' இழுத்து மூடி சீல் வைக்கப்பட்டது. அவரது ஜெர்மனியக் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1933 - முதல் 1941 வரை ஒன்பதாண்டுகளுக்கு ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே போன்ற நாடுகளில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். டென்மார்க்கில் நீண்ட காலம் இருந்து, பிறகு அமெரிக்கா சென்று 1947 வரை வாழ்ந்தார். அந்தப் பத்தாண்டு காலமும், அரசி-யல் ரீதியில் பாசிச முன்னணிச் செயல் வீரராகத் திகழ்ந்தார். பாசிசம் வீழும் என்று அறிவிக்கும் வலிமை வாய்ந்த கவிதைகளை, நாடகங்களை இக்கட்டத்தில் தான் பிரெக்டு எழுதினார்.

1949 -இல் கிழக்கு ஜெர்மனிக்குத் திரும்பிய பிரெக்டு 'பெர்லின் நாடகக் குழு'வை நிறுவினார். 1871 -இல் பாரீசில் தொழிலாளர்கள் அமைத்த கம்யூனை நினைவுகொண்டு 'கம்யூன் நாட்கள்' என்று ஒரு நாடகத்தை எழுதினார். அதுவே அவரது கடைசி நாடகம். போராட்டம் மிகுந்த ஒரு செழுமையான வாழ்க்கை வாழ்ந்த பிரெக்டு, 14 ஒகஸ்ட 1956 அன்று மறைந்தார்.

நன்றி - நூலகத்திட்டம்





சின்ன வயசுலே இருந்த கொஞ்ச நஞ்ச அசட்டுத் தைரியம், சுயமரியாதை எல்லாம் என்னை விட்டுபோய்கிட்டே இருந்துச்சு.. என்னைச் சுற்றி இருந்தவங்க பண்ணின கிண்டலும் கேலியும் தான் என்னை அப்படியாக்கிடுச்சு.

நான் இங்கிலீஷ்லே பேசினா.. எல்லோரும் சிரிப்பாங்க.. என்னது டெல்லிவரியா.. டிலிவரி.. டிலிவரி.. அது அனியன்.. ஆனியன் இல்லே..!

தாழ்வு மனப்பான்மையே இல்லாத எனக்கு தாழ்வு மனப்பான்மை வந்திடுச்சு. அதனால எதையும் சொல்ல நினைச்சா கூட அது தொண்டைக் குழியோட நின்னு போயிடும். சமயத்துல துணிச்சலை வரவழைச்சிக்கிட்டு அவருகிட்டே எங்காவது வெளியே கூட்டிட்டு போங்களேன்னு கெஞ்சி இருக்கேன்.

அவருடைய பிரண்ட்ஸ் வீட்டுக்கு கூட்டிட்டு போனாரு.. ஆனா என்னை ஒரு ரூம்லே உட்கார வைச்சுட்டு, அவரு அவருடைய பிரண்ட், அவங்க மனைவி எல்லாம் சிரிச்சு பேசிக்கிட்டு இருப்பாங்க... நான் தனியா மரக்கட்டை மாதிரி ரூம்முலே உட்கார்ந்திருப்பேன். எனக்கு மனைவிங்கிற அந்தஸ்த்து உள்ள மரியாதை மட்டும் கிடைக்கவே இல்லை. ஏன்னா நான் ஊர்ப்பொண்ணு தானே?

மாமியார், அவங்க மகளுக்கு கல்யாணமாகி, மாப்பிள்ளையும் வீட்டிலே தங்குனதாலே எங்களை தனியா போக சொன்னாங்க. தனியா வந்ததும் கொஞ்சம் நிம்மதி வந்த மாதிரி இருந்தது. என் சிறகுகள் மீண்டும் துளிர்க்க ஆரம்பிச்சதை உணர்ந்தேன் பிள்ளை கொஞ்சம் வளர்ந்ததும் வேலைக்கு போக ஆரம்பிச்சேன். வெளியே வந்ததும் தான் எவ்வளவு சுதந்திரத்தை இழந்து இருக்கோம்கிறது தெரிஞ்சது.

(பறவையாக அபிநயிக்கிறாள்.)

ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு யாரோ கதவைத் தட்டுனாங்க. யாருன்னு கதவுல இருந்த ஓட்டை வழியா பார்த்தேன். ஒரு பொண்ணு நின்னுக்கிட்டிருந்துச்சு. கதவைத் திறந்தேன்.

என்ன வேணும்?

Sam இருக்காரா?

Sam ஆ! அவருக்கு வெளியே சாம்முன்னு இன்னொரு பேரு.

அவருக்கு வர்ற சில போன்கால்ஸ்ல கூட சாம் இருக்கிறாரான்னு தான் கேட்பாங்க

அவரு இல்லை நீங்க யாரு?

என் பேரு லில்லி. நான் அவரு இந்த வீட்டுக்கு வர்றதைப் பார்த்தேன். நான் எதிர்த்த புளோக்லே இருக்கேன். ரொம்ப அவசரம். அவருகிட்டே பேசனும். அவரை ரொம்ப அவசியம் பார்த்தாகனும்.. என்ன ஆனாலும் சரி. அவர் வர்ற வரைக்கும் நான் உள்ளே வந்து உட்கார்ந்து இருக்கேன்.

ஏய் யாரு நீ.. நான் அவரோட ஒய்ப். நீ அவரை உரிமையோட பார்க்கணும்கிற.. என்ன விஷயம்? ஒழுங்கா சொல்லு.. போலிஸைக் கூப்பிடுவேன்!

நான் போனை எடுத்து Neighbourood Police Postக்கு டயல் பண்ணுனேன். அவள் உள்ளே வந்து போனை என் கையிலே இருந்து வாங்கி கீழே வைச்சுட்டு..

நான் ஊருலே இருந்து வந்த மெயிட். அந்த புளோக்லே ஒரு வீட்டுலே வேலை செய்யுறேன். அவங்க வீட்டு நாய்க்குட்டியை வாக்கிங் கூட்டிக்கிட்டு போறப்போ சாம்மை மீட் பண்ணுனேன். எங்களுக்குள்ள ஆறு மாசம் பழக்கம். அடிக்கடி நாங்க ஒன்னா வெளியே போயி இருக்கிறோம். கேலாங்லே உள்ள ஹோட்டலுக்கு போவோம். நான் இப்ப மூனு மாசம் கர்ப்பம். வீட்டுக்காரங்களுக்கு தெரிஞ்சிடுச்சு. என்னை ஊருக்கு அனுப்பி வைச்சிடுவோம்னு சொல்றாங்க. சாம் எனக்கு உதவி பண்றேன்னு போன வாரம் சொன்னாரு... தினமும் வெயிட் பண்ணி பார்த்தேன். அவர் வரலை. இந்த பிளாட்லே தான் எஸ் டிவோர்ஸி தங்கச்சியோட தங்கி இருக்கேன்னாரு. நீங்க தான் அவர் ஒய்ப்புன்னு தெரியாது. என்னை நீங்கதான் காப்பாத்தனும். சிஸ்டர்.. இல்லேன்னா நான் தற்கொலை பண்ணிக்குவேன்.

இந்தாப்பாரு லில்லி! நீ தவறான முகவரிக்கு வந்திருக்கே. என் ஹஸ்பண்ட் நீ சொல்ற மாதிரியெல்லாம் இல்லை. அவரு அவ்வளவு கேவலமானவரு இல்லை. இப்ப நீ போகலை.... போலிஸ் வரும்... அனாவசியமா மிரட்டுறேன்னு கம்பிளையின்ட் கொடுப்பேன். போ! போ! இந்தப் பக்கமே வராதே.. பணம் பறிக்க வேஷம் போடுறியா? இந்த வேலையெல்லாம் இங்கே ஆகாது...

இல்லே மேடம்.. இந்த பெண்டன்ட் பாருங்க...

அவ கழுத்து சங்கிலியிலே சாம்முன்னு பொறிச்சு இருந்துச்சு. நான் கதவை சாத்தினேன். அவ அழுதுகிட்டே ஒரு பத்து நிமிஷம் நின்னுட்டு போயிட்டா.

நான் எங்கே போவேன்? நான் கேட்டது எல்லாம் நிஜமா? எனக்குள்ள எல்லாமே இடிஞ்சு விழற மாதிரி இருந்துச்சு. நிராதரவா புதைமணல்ல சரியுற மாதிரி இருந்துச்சு. அப்படியே எல்லாம் இருண்டு போய் மயங்கி விழுந்துவிட்டேன். (விழுகிறாள்)

கண்ணு முழிச்சு பார்த்தப்போ படுக்கையிலே இருந்தென். எதிரே அவரு



நின்னுக்கிட்டிருந்தாரு.

ஏம்மா.. ஏம்மா மயக்கம் போட்டு விழுந்தியாமே? என்னாடா ஆச்சு?

யாரு அவ... ஒரு மெயிட்! போயும் போயும் அவளை ஏமாத்தி இருக்கீங்களே.. இது நியாயமா.. இதுக்கு என்ன பதில் சொல்ல போறீங்க.. ஒரு பிள்ளைக்கு தகப்பனான நீங்க செய்றது அடுக்குமா.. நீங்க தான் தொழுவுறதும் இல்லை.. கலிமா கூட சொல்ல தெரியாது... அதுக்குன்னு இப்படியா.. ஒரு முஸ்லிம்கிற பயம் கூட இல்லாம... என்கிட்டே இல்லாதது அவகிட்டே இருக்கா.. வீடு தேடி வந்து கேட்குறா.. நீங்க அவளை லவ் பண்ணறதா சொல்றா. இதெல்லாம் பொய்ன்னு மட்டும் சொல்லாதீங்க... அவ வயித்துல வளர்றது உங்க பிள்ளைதானே.. சொல்லுங்க.. சொல்லுங்க!

சாமுன்னு உங்க பேரு போட்ட பெண்டன்ட் மாட்டி இருக்கிறா.. எனக்கு நியாயம் வேணும்!

அவரு சிரிச்சிக்கிட்டே இருந்தாரு.

பளார்ன்னு அறை விழுந்தது. நானும் திகிலோட பார்த்தேன். பார்த்தியா கொஞ்சம் விட்டா எனக்கே அறிவுரை சொல்லுவே போலிருக்கே. இதுக்கு தான் உன்னை மாதிரி பொட்டச்சிங்களை அதிகம் பேச விடறதில்ல எப்பவும் இல்லாம இன்னைக்கு என்னமா ரொம்ப துள்ளி குதிக்கிறே? சும்மா சொல்லக்கூடாது கோபப்படும்போது கூட அழகா இருக்குறே.

அவ சாமுன்னு சொன்னா...? அது குப்புசாமியோ அல்லது ராமசாமியோ.. ஏன் அது சம்சுதீனா இருக்கனும்னு சந்தேகப்படுறே? இதுக்கு போயி பதட்டப்பட்டு, மயங்கி விழுந்து.. உடம்புக்கு ஏதாவது ஆச்சுன்னா? கவலைப்படாதேம்மா!

அந்த சனியன் கிட்டே அப்பவே சொன்னேன். வீட்டு பக்கம் வராதேன்னு.. அனுபவிச்ச சுகத்துக்கு பணம் கொடுத்துட்டேன். காதல் கீதல்ன்னு அள்ளி விட்டதை அவ நம்பிட்டா.. அவ வயித்து வளர்ற பிள்ளைக்கு நான் தகப்பன்னு எப்படி சொல்ல முடியும்? என்ன மாதிரி எத்தனை பேரோட இருந்திருப்பா?

என் மாதிரி அவளும் ஒரு பொண்ணு. பெண் பாவம் உங்களை சும்மா விடாது!

நான் ஆம்பிள்ளை! இது மாதிரி ஆயிரம் இருக்கும். நீ பொம்பிளை! என் ஒய்ப்! அந்த பொஸிஷன் உனக்கு வேணுமா? வேண்டாமா? நான் நினைச்சா உன்னை தலாக் சொல்ல முடியும். எத்தனையோ காரணம் சொல்ல முடியும். நான் சொல்றதை தான் இந்த ஊர் நம்பும். இங்க உனக்கு எந்த நாதியும் கிடையாது. நீ ஊர்க்காரி வேறே. அப்புறம், நடுத்தெருவில தான் நிக்கணும்.. என்னை எதிர்த்துக்கிட்டு சாதகமா பேச யாரும் வர மாட்டாங்க புரிஞ்சுதா? புரிஞ்சுதா? புரிஞ்சுதாடி. தலைமுடியைப் பிடிச்சு இழுத்து ஆட்டுனாரு.. அடப்பாருடா.... கண்ணுல இருந்து பொல பொலன்னு கண்ணீர் வெள்ள்ம்... உதடு கிழிஞ்சு போச்சா.. இரத்தம் வடியுது. வாயை மூடிக்கிட்டு ஒரு நல்ல இந்திய முஸ்லிம் பொண்ணா இரு. எனக்கும் உனக்கும் பதினாறு வயசு வித்தியாசம். ஞாபகம் இருக்கட்டும்... விசாரணையா பண்றே விசாரணை.. போடி! (உதை விழுகிறது.)

அவரு கதவைச்சாத்திட்டு போயிட்டாரு... அன்னைக்கு இரவு வீடு திரும்பவே இல்லை. அன்னையிலேருந்து அவர் போக்கில மாற்றம். கையும் களவுமா பிடிபட்டோம் இனிமே தப்பிக்க முடியாதுன்னு தெரிஞ்சதும் தன்னுடைய ஆண்கிற அதிகாரப் பலத்தையும், பலாத்காரத்தையும் காட்ட ஆரம்பிச்சாரு.. எப்பவும் கை நீட்டதாவரு. இப்ப நான் கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டதனாலே அடிக்க ஆரம்பிச்சாரு. நான் எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு ஒன்னுமே நடக்காத மாதிரி நடிக்க ஆரம்பிச்சுட்டேன். எங்க சண்டைகள் எல்லாம் ரூமுக்குள்ளே தான் நடக்கும்.

ஒரு தடவை அவர் சட்டை பாக்கெட்டிலே புடவை கடை பில் இருந்தது. அதில் நூற்றியம்பது வெள்ளிக்கு ஒரு புடவை வாங்கி இருந்தார்.

யாருக்கு வாங்கினீங்கன்னு கேட்டேன்.

உனக்கில்லைன்னு அறை விழுந்தது.

அவரோட பைல்ஸ் எல்லாம் எடுத்து பார்த்தேன். புலாவ் லங்காவி ஹோட்டலிலே டீலக்ஸ் ரூம் புக் பண்ணி தங்கியிருந்த ரசீது கிடைத்தது. அந்த தேதியிலே அவரு கம்பெனி விஷயமா செந்தோசாவில் அஞ்சு நாள் செமினாருக்கு போயிருந்தாரு. பாஸ்போட்டை செக் பண்ணுனேன். அதிலே மலேசியா போய் வந்த 'சாப்' (முத்திரை) குத்தி இருந்தது. யாரோட போயிருப்பாரு? வேற டாக்குமெண்ட் எதுவும் கிடைக்கலை. ஒரு என்வலப்லே சில பிலிம் நெகட்டிவ் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். அவரு மாதிரி இருந்துச்சு... ஆனா கூட ஒரு பொண்ணு!

உடனே கடைக்கு கொண்டு போய் கொடுத்து பிரிண்ட் பண்ணி பார்த்தேன். அவரும் யாரோ ஒரு பொண்ணும் ஹோட்டல் ரூமிலே, பீச்சிலே, ரொம்ப நெருக்கமா எடுத்துக்கிட்ட படங்கள். ஹோட்டல் ரூம்.. பீச்.. பாத்ரூம்.. ச்சீ!

(மெளனம்)

அவரு அன்னைக்கு ரொம்ப சீக்கிரமே வீட்டுக்கு வந்தாரு.

ஹால்லே டிவி பார்க்க உட்கார்ந்தாரு... ஏப்ரல் ஒன்பதுலே இருந்து பதிமூனு வரை செந்தோசாவுலதான் இருந்தீங்களா?

ஏன் கேட்குறே?

இல்லை சும்மா தான்!

ஆமாம் அங்க தான் இருந்தேன். கம்பனி செமினாருன்னு சொல்லியிருந்தேனே அதுக்கென்ன இப்போ?

ஆனா உங்க பாஸ்போர்ட்டே நீங்க மலேசியா போனதா காட்டுதே?

அவர் முறைச்சு பார்த்தாரு. என் டாக்குமென்ட் எல்லாம் என் அனுமதி இல்லாமல் எடுக்குற அளவுக்கு போயிட்டியான்னு... சுட்டெறிக்கிற மாதிரி பார்த்தாரு.

இதோ உங்க பாஸ்போர்ட்.. கிளீனா சாப் பண்ணியிருக்காங்க. ஏன் இப்படி பொய் சொல்றீங்க?

சரிசரி.. செமினார் மலேசியாவுலதான் நடந்துச்சி.. அதுக்கு இப்ப என்னா?

மலேசியாவுலேன்னா.. லங்காவியா? அவரு அதிர்ச்சியோட பார்த்தாரு.

இந்த ஹோட்டல் ரசீது எல்லாத்தையும் சொல்லிடுச்சு.. யாரோட போயிருந்தீங்க?

என் பிரண்ட் கூட!

கேர்ல் பிரண்டா பாய் பிரண்டா?

அதையும் நீயே கண்டுபிடிக்க வேண்டியதுதானே.

இந்த போட்டோவுல இருக்கறவ கூட தானே? மடியிலே உட்கார்ந்திருக்கா.. கிஸ் பண்ணிக்கிட்டு இருக்கா.. என்னை விட அழகா இருப்பான்னு பார்த்தா.. அசிங்கமா இருக்கா.. டேஸ்ட்டே கிடையாதா உங்களுக்கு. கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலும் குரங்கு மாதிரி ஒன்றை தேடுவான்னு சொன்னது சரியாப் போச்சு...

பிளடி பிட்ச்!

(அலறியவர்றே சுருண்டு விழுகிறாள்.)

வயித்துல ஓங்கி உதைச்சாரு... நான் புழுவாய் துடிச்சு போனேன். போட்டோவை எல்லாம் பொறுக்கி எடுத்துகிட்டாரு, தலைமுடியைப் பிய்ச்சு தரதரன்னு இழுத்துகிட்டே கிச்சனுக்கிட்டே போனாரு.. கதறக் கதற அறைஞ்சாரு... நான் போராடினேன்.

என்னை ஏமாத்திட்டீங்க! என்னை ஏமாத்திட்டீங்க! உங்களை சும்மா விட மாட்டேன்!

அப்படியா.. வாடி! உன்னை வேலைக்கு அனுப்புனது பெரியதப்பாப் போச்சு.. யாரோ சொல்லிக்கொடுத்து தான் இப்படியெல்லாம் பண்ணுற. என்ன சொன்னடி? அவ உன்னைவிட அழகா இல்லையா? ஆனா அவ படுக்கையிலே உன்னைவிட நல்லா சுகம் கொடுப்பா தெரியுமாடி.. காட்டுறேன்... வாடி.. வாடி.. நான் போராடப் போராட என்னைப் பெட்ரூமுக்கு இழுத்துக்கிட்டுப் போனாரு.. என் துணிமணியைக் கிழிக்க ஆரம்பிச்சாரு. என் விருப்பத்துக்கு மாறா என்னை பலவந்தமா....

உன்னால மறக்க முடியாத பாடம் சொல்லித்தரேன்னு... புனிதமா செய்ய வேண்டியதை மிருகமா மாறி, வெறி பிடிச்சுப் போய், தன்னுடைய காமவெறியை தீர்த்துக்கிட்டாரு.. நான் சுய நினைவை இழக்குறதுக்கு முன்னால.. அவர் கத்திக்கிடே இருந்தது இன்னும் ஞாபகத்தில் இருக்குது.

(கைகளைத் தரையில் ஊன்றியவாறு கத்துகிறாள்.)

அவ யாருன்னுதானே கேட்ட.. அவ பேரு தேவி! அவளுக்கும் எனக்கும் பல வருஷமா பழக்கம். அவ எனக்காகவே காத்திருந்தா.. அவதான்டி எனக்கு உண்மையான பெண்டாட்டி.. நீ இல்லை ஊர்க்கார கழுதை. அவளைக்கட்டிக்கிட்டா எங்கே என் தங்கச்சிக்கு யாரும் உறவு முறையில மாப்பிள்ளை தர மறுத்துடு வாங்கன்னு எங்க உம்மா ஏற்பாடு பண்ணுனதுனாலே தான் உன்னை நிக்காஹ் பண்ணினேன். என் காதலை தியாகம் பண்ணினேன். இனிமே என்னடி கிழிப்பே.. எதுக்கு லங்காவிக்கு போனேன்னு தெரியுமா? ஹனிமூன்... ஹனிமூன்.. இதுக்குதாண்டி இதுக்குதான்.... ஹனிமூன்! தேவியோட ஹனிமூன்..

(வெறித்தனமான அலறல். மேடையில் இருள்.)

(மேடையில் ஒளி. அவள் தரையில் கிடக்கிறாள்.)

காலையிலே எழுந்திருச்சு பார்த்தபோது.. அவரைக் காணோம். படுக்கையிலே எனக்குப் பக்கத்துல ஒரு வெள்ளை பேப்பர்லே.. நான் உன்னை தலாக் பண்ணுறேன்னு எழுதி இருந்தது. முதல் தலாக்.

என் முகமெல்லாம் வீங்கி இருந்தது. உடம்பெல்லாம் ஒரே வலி. பெட்ஷீட்டிலே இரத்தக்கறை. எனக்கு குமட்டிக்கிட்டு வந்தது. அப்படியே படுக்கையிலேயே வாந்தி எடுத்துட்டேன். குளிச்சி முடிச்சிட்டு, பாலிகிளினிக் போனேன். மெடிக்கல் ரிப்போர்ட் கொடுத்தாங்க. போலிஸ் ரிப்போர்ட் பண்ணச் சொல்லி வற்புறுத்துனாங்க.. மறுத்துட்டேன்.

மாமியார், பினாங்குக்கு சொந்தக்காரங்க வீட்டுக்கு போய் இருந்தாங்க. அங்க போன் செய்து நடந்ததையெல்லாம் சொல்லி அழுதேன். அவங்க ஆச்சரியப்படவே இல்லை.

ஆம்பிள்ளை அடிப்பான். வாங்கிக்கிட்டு பேசாம இருக்கணும்... என் மவன் உன்னை எப்படி சொகுசா வச்சிருக்கான். உனக்குத்தான் திமிரு. ஊர்க்காரிதான.. புத்தியைக் காட்டிட்டே. உன்னை யாரு அவனோட அந்தரங்க விஷயத்துல தலையிடச் சொன்னது. வாயை மூடிக்கிட்டு இருக்க வேண்டியதுதானே.. என் மவன் உன்னை நல்லதா வச்சிருக்கிறதே அதிகம். இது போதாதா? முடிஞ்சா ஏத்துக்கிட்டு இரு... இல்லைன்னா டைவர்ஸ் தான். முதல் தலாக் கொடுத்துட்டான்... ஜாக்கிரதையா இரு. இன்னொரு தலாக் கொடுத்தானா.. ரெஜாஹ் பண்ண வாய்ப்பிருக்கு. மூனாவது தலாக் கொடுத்தா நீ அனாதையா நிற்க வேண்டி இருக்கும். மறந்துடாதே. பெரிசா என் மகன் என்ன தபபு பண்ணிட்டான்? ஊர் உலகத்துல பண்ணாத தப்பா.. என் மகன் அப்படி தான் செய்வான். அவன் நினைச்சா ஆயிரம் கல்யாணம் பண்ணிக்குவான். உனக்கு வேணும்னா நீயும் எவனையாவது போய் தேடிக்கோ. போலிஸ் கீலீஸ்ன்னு போயிடாதே. கோர்ட்டுக்கு போனா உனக்குதான் அவமானம். அப்படி ஏதும் என் மகனுக்கு எதிரா நீ குல் கொடுத்துடலாமுன்னு நினைக்காதே. உனக்கு எதிரா நாங்க எல்லாம் சாட்சி சொன்னா.. தீர்ப்பு உனக்கு எதிரா தான் இருக்கும். எச்சரிக்கிறேன். இருக்கிறதைக் கெடுத்துக்காதே. சரி போனை வை! பில் ஏறுது!

மாமியாரோட எச்சரிக்கையைக் கேட்க கேட்க நான் நெருப்பாய் மாறிப்போனேன். ஊமையாய் இருந்துட்டா பிரச்சினையே இல்லை.


ஒரு வாரமா அவரும் வீட்டுக்கே வரலே. எங்கப் போய் தங்கி இருந்தாருன்னு தெரியலை. அவரோட பர்சனல் டாக்குமென்ட் எல்லாம் எடுத்துக்கிட்டு போயிட்டாரு.

(மெளனம்.)

-தொடரும்-

நன்றி - நூலகத்திட்டம்






ராவுத்தர் ஏகாந்தனாய் நின்றார். பொட்டல் வெளி வெறிச்சென்றிருந்தது. கருக்கட்டிய மழை முகில்கள் நீர் வயிற்றுடன் ஆகாசத்தில். தொபீரெனக் கிழிந்து பூமி சிலிர்க்க சில்லிடும் மழைவிசிற தருணம் பார்க்கும் மேக ஊர்வலம். அவர் மரத்தின் முன் நாதியற்று நின்றார். அதன் கிளைகள் உதிர்ந்து அடியில் சருகுகள் கணத்திருந்தன. பச்சைப்புழுவென ஐதாக பசுந்தளிர்கள். அடிமரமோ சகிக்கும் படியாயில்லை. விழுதுகள் இற்றுப்போன கந்துகளில் மர அணில்களின் சரசம். மரத்தினடியில் புத்தன் தியானத்திலிருந்தான். அவனுக்கு எந்தக் கவலையுமில்லை. சப்புமல் குமாரர்கள் அவன் பெயரில் நடத்தும் மனித வேள்வி குறித்து அவன் எதுவுமே சொல்லமாட்டான். அருகில் பிள்ளையாரும் அவரருகில் சிலுவையும், சில ஆயுதங்களும் பூஜைக்கென குவிந்திருந்தன. ஒரு மினாரா பார்க்க பரிதாபமாய் தூசி படிந்து மரவுச்சியில் கவிழ்ந்திருந்தது. மரத்தின் அநித்திய ஜீவிதத்தைக் காண அவருக்குத் தாழவில்லை. கம்பீரமாய் தனித்துநின்ற ஆண் மரம் நிழல் முகிழா பேரிழப்பை அவர் போன்ற எவராலும் ஜீரணிக்க முயடிவில்லை.

ஈன்றபின் கன்றைச் சுற்றி வரும் கன்னிப் பசுவின் ஆயாசம் அவருள் சுரந்தது. மிகுந்த பரிவுடன் மரத்தைச் சுற்றலானார். அதன் அடிவேரில் சர்வமதக் கொடியிருந்தது. நேற்று நட்டிவிட்டுச் சென்றிருக்க வேண்டும். மழைக்கும் நனையாமல் காற்றணைக்கப்படபடத்தது. சருகுகள் சப்திக்க அதில் கால் புதைய நடந்தார். இனிமரம் பட்டுவிடும். அவர் உள்மனம் கூவியது நேற்றிரவும் யாரோ வண்டிக்காரர்கள் மாடவிழ்த்து இளைப்பாறிப் போயிருந்தனர். சாணம் சீந்தி இரைத் தேடிக்கொண்டிருந்த காட்டுக்கோழிகள் சில மண் கண்டு சிறகடித்துப் பறந்தன.

கண் விழித்து, நீரூற்றி பசளையிட்டு வளர்த்த இம்மரத்தை எந்தப்புழு சேதாரம் செய்தது. அவரின் சிந்தனைத் தளத்தில் கள்ளிச்செடிகள். துகிலுரிய மெய் பொத்தி நிற்கும் பத்தினியின் மனோவதை அவருள் கணன்றது. தேகம் பதற மரத்தைச்சுற்றிச் சுற்றித்திணறினார் மரத்தைத் திட்ட வேண்டும் போலிருந்தது. எனினும் அதன் பாஷையைப் புரிந்து கொள்வது இப்போது சிரமமாயிருந்தது. தளிர் பருவத்தில் அதனுடன் கொஞ்சிப்பேசிய மழலை மொழியில் திட்டினார். அவரின் தேகத்துடிப்பு ஆசுவாசித்தது. இருமி இருமி கபத்தை மரத்தினடியில் சீந்தினார். மூஷ்கைச் சிந்தி வேரில் பூசினார். அவர் செய்கையில் அவருக்கே லஜ்ஜை வந்தது. சற்று நிதானிக்கையில் மரத்தின் மீது அனுதாபம் மிகுதியாயிற்று. அவரால் மரத்தின் பசுமை மிகுதளிர் பருவத்தை மறக்கமுடியவில்லை.

1

முற்காலத்தில் ம்ரம் நிற்குமிடம் தரிசாயிருந்தது. ஆட்டுமந்தைகள் மேய்வதற்கும், மாடு வெட்டுவதற்கும் ஊருக்குத் தெரியாமல் பெரியவர்கள் கஞ்சா அடிக்கவும், சிறியவர்கள் பீடி குடிக்கவும் இன்னும் சில யெளவன அசிங்கங்களின் ஒத்திகைக்கும் பேர்போன மறைவிடமாய் அதன் உபயோகம் அந்நேரம் மெச்சும்படியாயிருந்தது. ஒதுக்குப் புறத்தில் யானைகளின் அட்டகாசமுமிருந்தது. சமயத்தில் ஒரு மர்மக்கரம் தோன்றி மறைந்தது. நாதியற்றோரின் ஏக இரட்சகனென யானை பிளிறிற்று. மர்மதேவதையும் பதிலுக்குப் புலம்பிற்று புத்திமான் பலவான். நலிவுற்ற மக்களோ வீரமிகு யானையை பூஜித்தனர். அதன் தும்பிக்கையில் நம்பிக்கை மலர்கள் கமழ்வதாய் அதன் பாகன் கூவினான். அதன் வால் மயிரைப் பிடுங்கி இளைஞர்கள் தம் கரங்களில் "மொண்டையல்" அணிந்தனர். பெண்களோவெனில் அதன் சாணம் தெளித்து வீடு மெழுகினர். வயிற்றைப் பிசையும் அதன் பிளிறலில் குழந்தைகள் தூளியில் துஞ்சின.

யானையின் புகழ் ஓங்கிற்று. ஒரு யானைக்கு ஒன்பது பாகன் அங்குசம் வைத்திருப்பவனெல்லாம் பாகனெனக் கூவினான். யானையின் காதில் துரும்பெடுத்து குடைந்து விட்டு நானும் பாகனெனக் கூவியவர் விரைவில் காணாமல் போயினர். ராஜ யானை ஊருக்குள் நடைபோட்டது. தரிசு நிலத்தில் வாய்க்கால் நிரம்பியது. மூன்று போகமும் நெல் விளையும் பூமி பச்சை பசேலென்ற பூரிப்பும். செஞ்செழிப்பில் பூமி குளிர்ந்தது. நெஞ்சு முட்ட மகிழ்ச்சியும் சகலதும் யானையின் கடாட்சத்தால் கிடைத்ததென ஆசிகள் பிறந்ன.

பள்ளிக்கூட வாசனையற்றோர் பிளிரை படமெடுத்து தம் கூடத்தில் கொளுவினர். புத்திஜீவிகள் தம் மதில்களில் வரைந்து குதூகலித்தனர். வரையாதோர் வாழ்வில் வறுமை படர்ந்தது. கொம்பன் தெருவுக்குத் தெரு இராஜபிஷேகம் செய்யப்பட்டான். தேசமெங்கும் அதன் கீர்த்தியும், கியாதியும் ஓயாமல் பேசப்பட்டன. பலமுள்ளவனுக்கே உலகம் மசியும். அவனுக்கு சாதுர்யம் தேவையில்லை. ஆளுமையும் அறிவும் தேவையில்லை. நம்பிக்கை நாணயம், நல்லொழுக்கம் எதுவுமே தேவையில்லை. பலம் ஒன்றே போதும் தரணி ஆள.

அங்குசத்தின் நுனி கொண்டு பாகர்கள் மக்களை வதைத்தனர். யானை மிதித்து மாண்டவர் தொகை மிகுதமாயிற்று. யானையை நம்பினோர் கைவிடப்படார் என்றவர் திகைத்தனர். ஓர் அநாதைபோல சமூகம் தனித்து நின்றது. தன் தலைவிதியின் எழுத்தைக் கடிந்து கொண்டது. ஒருபக்கம் சிறுத்தைகள் மறுபக்கம் பிளிறுகள். சிறுத்தைகள் இரத்தம் குடித்து வன்மம் தீர்த்தன. காடேகிய மனிதர்கள் கழனிசென்ற உழவர்கள் முண்டங்களாய் ஊரின் நடுவே பாயும் ஆற்றின் முதுகில் மிதந்து வந்தனர். வரிச்சுமை தாளா செல்வந்தர் தலைகள் எல்லையில் தனித்துக் கிடந்தன. ஏழு நரகமும் ஒரு சேர ஊருக்குள் குமுறின. தரிசு நிலத்தில் செழிப்புற்றவர் சருகுகளாய் உதிர்ந்தனர். ஒரு மர்ம தேஸத்தின் குடிகளாயினர். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கு வந்தது. இத்தனையும் மீறி, தரிசுநில மக்கள் தம் நிலத்தில் தமக்கென நிழல்தர ரகஸிய வித்தொன்றை ஊன்றினர்.

2

எங்கும் வெக்கை தாழ முடியாத அந்தரிப்பு. நிழல் தரும் மரங்களென எதுவுமில்லாத அந்தகாரம். யானையின் வருகையால் மரங்களின் ஆயுள் கம்மியாயிற்று. காற்றை வடிகட்டவும் மரங்களற்ற சூன்யவெளி யானைக்கு எதுவும் தப்பில. படுக்கையறைச் சுவரிலும் யானையின் காதிருந்தது. குளியலறையிலும் அதன் கண்ணிருந்தது. வளர்த்த கடா மார்பில் பாய சனங்கள் வாய் பொத்தினர். பேனாக்களில் மை நிரப்பி மெய் எழுதும் எழுத்தாளர் கடற்கரையில், களணியில் பிணமாய் மிதந்தனர். யானைக்குச் சாமரம் வீசியோர் பொற்கிழி பெற்றனர்.

சனங்கள் ஊன்றிய வித்து முளைவிடத் தொடங்கிற்று. பூமியின் முதுகைப் பிளந்து மொட்டவிழும் அதன் வசீகரம் காண்போர் மனதை கிறங்கடித்தது. யானை சேதாரம் பண்ணிய பூமியில் கடவுள் எழுப்பிய தேவதரு சொர்க்கலோகத்தின் தேவதைகள் தம் பொற்கரங்களால் நீரூற்றி செழிக்க வைத்த அதிசய மரம். அதிசயத்திலும் அதிசயம் மரம் வாய் மலர்ந்து பேசியது. சனங்கள் அஞ்சினர். விருட்ஷத்தை யானை விழுங்குமோ?

"எம்முயிர் மரமே! நீ இப்போது பேசாதே, பாகர்கள் அக்கிரமக்காரர்கள். நாம் உன்னைப் பேணிப் பாதுகாத்து ஆல விருட்ஷமாய் வளர்த்த பின் நீ குரலெடுத்துப்பேசு. நிழல் முகிழும் உன் காலடியில் இளைப்பாறவும், அடைக்கலமாகவும் எமக்கு நீ தீபமிகு ஒளியைக் காட்டு". வேதநீர் உறிஞ்சி மரம் வளர்ந்தது. மங்கையர் மரம் வளர விரதமிருந்தனர். இளைஞர்கள் அரணாயினர். அதன் நிழல் விழும் மண்ணிலிருந்து இளந்தளிர்கள் துளிர்த்தன. மரத்தின் சுகந்தத்தில் இதயங்கள் திணறின.

வானளாவ கிளைபரப்பி நெஞ்சு முட்டும் பெருமையுடன் கிளைகள் பரப்பிற்று மரம். விழுதுகள் மண்கெல்லி பூமியின் முதுகைத் துளைத்தெழுந்தன. "நாம் யார்க்கும் அடிமையல்லோம். எம்மினம் அநாதையல்லோம்" மரத்தின் கீழிருந்து கோஷங்கள் எழுந்தன. தரிசுநிலம் முசிய கிளைகளின் நிழல் வாசம். எங்கும் குளிர்மை.

மரத்தைக் காப்பது மதத்தைக் காப்பதாகுமென, மினாராக்களிலிருந்து சுபசெய்தி வந்தது.

கொம்பனின் அகங்காரம் மிகுதமான ஒரு மாலைப் பொழுதில் மரம் பேசியது. ஆண்டிகளாய், கொம்பனின் ஆணைக்குப்பணிந்தோராய் வாழ்ந்த மக்களின் தார்மீகக் குரலாய் மரம் பேசியது. அதன் நிழலில் பருந்துக்குத் தப்பி, தாயின் சிறகுள் அடைக்கலமாகும் கோழிக் குஞ்சென மக்கள் ஒடுங்கினர். மக்கள் ஊன்றிய வித்தின் நாவசைப்பில் பிரளயம் பொங்கிற்று. தரிசு நிலம் தாண்டியும் மரத்தின் கியாதி பரவிற்று. ஒலிவ் மரக்கிளையாய் அது ஒடித்துச் செல்லப்பட்டு தொழுகையறையில் செருகப்பட்டது. மதில்கள் தோறும் அதன் சௌந்தர்யமே ஆக்ரமித்தது. அதன் ஆன்மீக முழக்கம் தேஸத்தை உலுக்கியது.

கொம்பனின் மதம் தணிந்திற்று. வெறிகொண்டலைந்த அதன் தனித்துவ தர்பாரில் மரத்தின் வேர்கள் ஊடறுத்து அரிக்கத் தொடங்கிற்று. கொம்பனை சங்கிலி கொண்டு கட்டிப்போடும் இராட்ஷ மரத்தின் கீழ் மக்கள் திரண்டனர். கொம்பன் விழித்துக் கொண்டது. எனக்குத் தெரியாமல் இதெப்படி வேரூன்றிற்று. ஒற்றர்களின் மூளையில் கோளாறு துவம்சம் செய்தால் மரத்தில் கட்டுவார்கள். இராஜதந்திரம் நரிக்கு மட்டுமா? யானை பணிந்ததுபோல் நடிக்கத் தொடங்கிற்று.

மரமே! நீ இல்லையெனில் நானுமில்லை. என் தீனியுமில்லை. எனக்கு குளிர்ச்சியுமில்லை. உன் மக்களை இனிக்கொல்ல மாட்டேன். உன்னை செல்லுமிடமெங்கும் காவிச் செல்வேன். என் தும்பிக்கையில் ஓர் சிம்மாசனம் தருவேன். தரிசு நிலத்திலிருந்து உன்னைப் பிடுங்கி, அழகு மிகு பைன் மரங்களிடை நட்டுவேன். அங்கே பனி விசிறும் பொன்னந்தியில் உன் கிளைகளின் மேலிருந்து குயில்கள் கூவும், மயில்கள் அகவும். வஸந்தத்தின் ஏகனாய் நீ மனம் வீசுவாய். உன் மக்களின் விடியலை அக்கிளை மீதமர்ந்து பரவச்செய். மரமே என் முதுகிலேறி சவாரி செய். உனக்கு சர்வலோக இன்பங்களையும் தருகின்றேன்.

மரம் பிகுபண்ணிற்று. வேதத்தை உயர்த்திப் பிடித்து இது என் வழிகாட்டி. என் சுவாசமும் இதுவே. நான் வாங்கவோ விற்கவோ தேவதரு என் நிழலில் உயிரசையும் தரிசு நிலத்தாரை விட்டும் பிரியேன் என்றது. மனிதருக்கு மரத்தின் மேல் பக்தி அதிகமாயிற்று. என் மரமே நீ தான் எம் இரட்ஷகன், உன் நிழலிருக்கப்பயமேன், நாரே தக்பீர் அல்லாஹு அக்பர். பைலாப்போட ஒரு கூட்டம். பிறந்தது.

பேராசை யாரைத் தான் விட்டது. ஆசை ஏப்பமிட்ட சரிதங்கள் ஏராளம். அற்பனுக்கு பவிசு வந்தால் குடைபிடிக்க அவனுக்கு இரவென்ன பகலென்ன, கொம்பனா விடுவான். மரத்தின் முன் அமர்ந்து ஆசைத் தீயில் வாசனைத் தைலம் ஊற்றினான். அதன் வேரில் சொர்க்க நீர் பீச்சினான். வேரை அசைத்திட்டால் வேலை இலகு. யானையின் தந்திரம் பலித்தது. வனப்புமிகு சோலைகள் காட்டி மரத்தை வசியப்படுத்திற்று. "தரிசு நிலத்தில் ராஜாவாக இருப்பதைவிட பழமுதிர் சோலைகளின் அடிமையாக இருப்பது சௌபாக்கியம்" மரம் பினாத்தத் தொடங்கிற்று.

அன்றாடங் காய்ச்சிகள் ஆசையோடு வியர்வை சிந்தி வளர்த்த மரம் பேசியது. ஆண் மரமென்று ஆனந்தித்து குருதியூற்றி வளர்த்த மரம் பேசியது. காற்றடிக்கும் திசையில் சாய்வதுதான் என் பிறவிக்குணம் என்றது. தும்பிக்கையில் சுடர் இருப்பதாய் வேதம் ஓதியது. மரத்தை பூஜித்த சில குருவிச்சைகள் அதற்கு கோரம் போட்டனர். நீ எது சொன்னாலும் எம் விடிவுக்கே என ஒட்டுண்ணிகள் கூஜா தூக்கினர். மரம் பச்சோந்திகளின் தங்குமிடமாயிற்று.

பருந்துகள் உச்சியில் கூடமைத்தன. மரப்பொந்தில் கிளிகள் இல்லை. குயில்களும் இல்லை. வெண்புறாக்கள் முட்டையிட்ட கூடுகளில் கருநாகம் குடிபுகுந்தது. குரலெடுத்து கதறிய மக்களின் தலையில் மரம் கற்களை வீசிற்று. அதன் பூக்களை விற்று புண்ணியம் தேடியோர் குறுநில மன்னராயினர். மக்களோவெனில் கூடுகளற்ற பறவைகளாயினர்.

மீண்டுமொரு ஏகாந்தவெளி. பொட்டல் வெளியில் நம்பிக்கை ஊற்றிய ஆல விருட்ஷம் விஷம் கக்கும் மர்ம காடாயிற்று. மர நிழலில் இளைப்பாறச் சென்றவர்கள் அதுவிடும் உஷ்ணத்தில் கருகி மீண்டனர். கொம்பன் இளைப்பாறும் தளமாயிற்று மரம். காற்றுக் கணக்கும் தீவிலிருந்து சனங்கள் அழுதனர். மதத்தை அடகு வைத்து வளர்த்த மரம் புழுக்கள் வதியும் கூடாயிற்றே! கொம்பனின் முத்துக்கள் மரத்தை அலங்கரிக்க மரம் பூரிப்பில் சிலிர்த்தது. அதன் கிளைகளில் வஸந்தம் பூத்தது. சூர்யோதத்தின் பொற்கிரணங்கள் பட்டுத் தெறிக்கும் கிழக்கின் முகத்திலிருந்து மரத்தின் ஜீவஜோதி பூமிமுழுக்க படர்ந்தது. கடும் உறவு கண்ணைக்கெடுக்கும். அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர ப[illegible]வனுமில்லை என்றெல்லாம் தத்துவம் பாடியது. அது தன் கிளைகளில் தனக்கான சுருக்கு கயிற்றை கட்டத் தொடங்கியது.

காலம் தன் சிறகினை விரித்து பரந்துகிடந்தது. அதன் முதுகின் மேல் நிகழும் பரிணாம மாற்றங் குறித்து அதற்கேதும் சஞ்சலமில்லை. அதிர்ஷ்டமுள்ளவன் அதனை சிக்கெனப் பிடித்துக்கொண்டு நன்கு பயன்பெறும் உத்திகள் கற்றான். ஏமாளியோ, மண்கவ்வி காலத்தை குறை கூறித் திரிந்தான். மரமும் யானையும் கூட இவ்விதிகளுக்கமையவே உறவை வளர்த்தன. அளவுக்கு மீறிய அழுது கசக்கத் தொடங்கியது. யானை விருட்ஷ ஊடல் ஊடகங்களில் அம்பலேமேறிற்று. இருமனமும் கசந்தன. தாவர மனமும் மிருக மனமும் ஒத்துப்போகாதே. விரிசல்கள் வலுத்தன. யானையின் மரணத்தை மோப்பம் பிடித்த மரம் அதைக்காட்டிற்கு விரட்டியது.

கிழடு தட்டிய யானையே நீ வனவாசம் போ உனக்கிங்கு வேலை இல்லை. என் நிழலிலும் இடமில்லை. மரத்தின் ஆங்காரத்தில் கொம்பனின் சினம் வெடித்தது. தும்பிக்கையால் மண்வாரி மரத்தின் முகத்தில் அடித்தது. அதன் அடிவேரில் சிறுநீர் கழித்தது. நன்றி கெட்ட தாவரமே என் பலத்தில் நக்குண்டவனே என் முதுகிலேறி சொர்க்கத்தில் உலாவந்தாய்! பழமுதிர் சோலையில் உனக்கொரு இடந்தானிருக்கும்.

தந்தேன். உன்னில் காய கல்பகனிகளை காய்க்க வைத்தேன். உன் இனத்தின் புத்தியே இதுதானோ?. யானை பெருங்குரலில் பிளிறியது.

மரம் மசியவில்லை. இனத்தை ஏசியாலென்ன-மதத்தை இகழ்ந்தாலென்ன? மரத்திற்கு சினம் வரவில்லை அது காற்றின் திசையை மோப்பம் பிடித்தது. மர்மக் குரலொன்று மரத்தை தழுவியது. கியாதி பெற்ற மரம் கீர்த்தியின் உச்சியில் நின்று விவாதிக்கும் திறன் பெற்றது.

மரத்தில் குடியிருக்க ஒரு தேவதை வந்தாள். அவள் வானலோகத்தின் சௌந்தர்யங்களை பூண்டிருந்தாள். அவள் முகத்தில் கருணையின் ஜோதி சுடர்ந்தது. கைவிரல் கணையாழியைத் தேய்க்கத் தேய்க்க வெண்புறா சிறகடித்தது. தேவதையின் மந்தகாசத்தில் பிரபஞ்சமே கிறங்கிற்று.

கொம்பனின் கொடுங்கோளில் முகமிழந்த மனிதர்கள் தேவதையின் மடிமீது சயனிக்கத் துடித்தனர் அவள் காந்தரூபம் மரத்திலும் செதுக்கப்பட்டது. மரமோ ஆண்மை பொங்கும் பெருமித முகத்துடன் தேவதை அணைப்பில் அடங்கிற்று நம் விமோசனத்தின் இரட்சகியென வேதம் ஓதிற்று. மரத்தினடியில் தேவதை அமர்ந்தாள். கொம்பனை விரட்ட எனக்கு உதவுவாயா? காதருகில் கிசுகிசுத்தாள். பசிய புற் தரையில் கை கோர்த்து மரத்துடன் மரமென அத்வைதமானாள்.

"ஆம். இளவரசி கொம்பனை விரட்டி உன் பஞ்சு மடியில் முகம் கவிழ்ப்பேன். மக்களாணை கொம்பனை விரட்ட உன்னுடன் இணைவேன். நீ கடவுளின் செய்தியை எம்மிடம் கொண்டு வந்தவள்" மரம் கும்மாளமிட்டது. தேவதை தான் செல்லுமிடமெங்கும் மரக்கிளையை தன்னுடன் ஒடித்துப் போனாள். அதன் முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டாள்.

பொங்கும் அலையெனச் சனங்கள் திரண்டனர். வனவாசம் சென்றவர் தேவதையின் அருள்பெற நாடேகினர். அவள் மின்னல் சிரிப்பில் ஆண் வர்க்கம் கிறங்கிற்று. கதைகளில் அவள் பேசப்பட்டாள். இலக்கியத்தில் பதியப்பட்டாள். இசையோடு இசையானாள். வெள்ளைச் சிறகடிக்கும் வெண்புறாக்கள் எலும்புக் குவியலிடை உயிர்பெற்று பறந்தன. அவள் நெஞ்சுப் பொதியில் சமாதானம் கசியுமென மரம் கூறுகிறது. அதன் புராணம் ஓத எருமைக் கடாக்களும், அன்புக்கவிஞரும் தோன்றினர். சில ஆன்மீக வாதிகளின் உடைமாற்றும் மறைவிடமாய் மாறிற்று.

சமயத்தில் மரமேறிக் கந்துகளில் தொங்கிய வால் முளைத்த ஷைத்தான்கள் வேதம் ஓதின. மரமோவெனில் தேவதையை சுற்றிப் படர்ந்தது. நீரூற்றிய தரிசு நிலத்தாரை விற்றது. அடகு வைக்கையில் நாம் இழந்ததை மீட்டுவர என்றது. சனங்கள் அனலிடைப்

நன்றி - நூலகத்திட்டம்



புழுவாயினர் மரம் புது மெருகுடன் துளிர்த்தது. அதன் கிளையிலிருந்து அரச மரம் முளைத்தது. அதன் அடிவேரில் புத்தரும் தோன்றினார். அவர் பாதத்தில் மரம் பூக்களைத் தூவிற்று. அதற்கு மலர்களில் பக்தி அதிகமாயிற்று.

மண்ணறைகளிலிருந்தேரை எழுப்பி அமரர்களின் இறக்கைகளில் இருத்தி கவிதை படித்தது தேரர்களின் சிலையெழும்ப கல் நட்டியதுடன், அவர்களின் மாடத்தில் தன் கிளைகளை பரப்பி நிழல் சொரிந்தது. விருட்ஷத்தின் எழுச்சியில் கவிஞர்கள் பிறந்தனர். அவர்கள் பொற்கிழியும், விருதும் பெற்று புலவராயினர்.

தேவதைக்கான தர்ஹாக்களில் கந்தூரி கொடுத்தது ஷைகுமாரின் உமிழ்நீரை கண்களில் ஒத்தி கிருபைபெற்றது. தன்னிலை விளக்கம் தந்தது.

மரம் செல்லுமிடமெங்கும் தோரணங்கள் ஆடின. பூஜைகள் நடந்தன. அதனைச் சூழவும் வேலிகள் முளைத்தன. இப்போது அது இராஜமரம், பிள்ளையை வீசிவிட்டு, பிள்ளை கழுவிய நீரை பிள்ளையெனக்கொஞ்சும் மரத்தின் தத்துவத்தை தூக்கிப்பிடிக்க பேனாச் சித்தர் பிறந்தனர். அவர்களுக்கும் எழுதுவதைத் தவிர வேறுவழியில்லை. இப்போது மரம் அனுபவத்தில் தேறிற்று.

யானை போலவும், தேவதைபோலவும் பேச விநோத பாஷைகளைக் கற்றுக் கொண்டது. தேவதையின் மாமிசவெறிக்கு, கைதூக்கி இரத்தம் கொடுத்தது வன்முறையின் மொழி அதற்குப் புரிந்தது.

குர்ஆனின் தாளில் கஞ்சா சுற்றியது. மினாராக்களில் சாராயம் விற்றது. அதர்மங்களுக்கெல்லாம் நியாயம் கற்பித்தது. எனினும், காலத்தைவிட விஷமக்காரன் யாருண்டு? அது தருணம் பார்த்து தன் குழியுள் மரத்தை வீழ்த்தியது. எல்லோரையும் எல்லாநேரமும் ஏய்த்துப்பிழைக்க காலம் பொறுக்குமா என்ன?

அண்மைக்காலமாக மரக்கந்துகள் இற்று இலைகள் உதிர ஆரம்பித்துவிட்டன. அடிவேரில் சூபிஸப்பசளையிட்டும், நுனிக்கந்தில் அத்வைத உரம் விசிறியும் பயன் தரா உதிர்வு மரத்தை அரித்தது. உவர் நிலத்தில் அதன் அந்திமம் நிச்சயமாயிற்று. பசளைகள் திருடிப்போட்டும் பயனற்ற கையறு நிலை.

எதிர்காலம் அதன் முன் மரணித்துக் கிடந்தது. கூவி விற்க, சமூகமற்ற அதன் தனித்துவக்கோலம் கண்டு, அறிஞர்கள் அழுதனர். அடகுவைக்கப்பட்ட மக்களும் மீட்பாரின்றி நெஞ்சிலடித்துக் கதறினர். மறுபடியும் அவர்கள் அநாதையாயினர். கொத்தடிமையின் அவஸ்தையை உணர்ந்தனர். தரிவு நில மக்களோ வறண்ட காற்றை நெஞ்சில் நிறைத்தபடி ஏகாந்தமாயினர். எப்போதும் போல் மரங்களற்ற சூன்யவெளி அவர்களின் முன் வியாபித்திருந்தது.

ராவுத்தர் ஏகாந்தனாய் நின்றார். பொட்டல் வெளி வெறிச்சென்றிருந்தது. கருக்கட்டிய மழை முகில்கள் நீர் வயிற்றுடன் ஆகாசத்தில். தொபீரெனக் கிழிந்து பூமி சிலிர்க்க சில்லிடும் மழைவிசிற தருணம் பார்க்கும் மேக ஊர்வலம். அவர் மரத்தின் முன் நாதியற்று நின்றார். அதன் கிளைகள் உதிர்ந்து அடியில் சருகுகள் கணத்திருந்தன. பச்சைப்புழுவென ஐதாக பசுந்தளிர்கள். அடிமரமோ சகிக்கும் படியாயில்லை. விழுதுகள் இற்றுப்போன கந்துகளில் மர அணில்களின் சரசம். மரத்தினடியில் புத்தன் தியானத்திலிருந்தான். அவனுக்கு எந்தக் கவலையுமில்லை. சப்புமல் குமாரர்கள் அவன் பெயரில் நடத்தும் மனித வேள்வி குறித்து அவன் எதுவுமே சொல்லமாட்டான். அருகில் பிள்ளையாரும் அவரருகில் சிலுவையும், சில ஆயுதங்களும் பூஜைக்கென குவிந்திருந்தன. ஒரு மினாரா பார்க்க பரிதாபமாய் துரசி படிந்து மரவுச்சியில் கவிழ்ந்திருந்தது. மரத்தின் அநித்திய ஜீவிதத்தைக் காண அவருக்குத் தாழவில்லை. கம்பீரமாய் தனித்துநின்ற ஆண் மரம் நிழல் முகிழா பேரிழப்பை அவர் போன்ற எவராலும் ஜீரணிக்க முயடிவில்லை.

ஈன்றபின் கன்றைச் சுற்றி வரும் கன்னிப் பசுவின் ஆயாசம் அவருள் சுரந்தது. மிகுந்த பரிவுடன் மரத்தைச் சுற்றலானார். அதன் அடிவேரில் சர்வமதக் கொடியிருந்தது. நேற்று நட்டிவிட்டுச் சென்றிருக்க வேண்டும் மழைக்கும் நனையாமல் காற்றணைக்கப்படபடத்தது. சருகுகள் சப்திக்க அதில் கால் புதைய நடந்தார். இனிமரம் பட்டுவிடும். அவர் உள்மனம் கூவியது. நேற்றிரவும் யாரோ வண்டிக்காரர்கள் மாடவிழ்த்து இளைப்பாறிப் போயிருந்தனர். சாணம் சீந்தி இரைத் தேடிக்கொண்டிருந்த காட்டுக்கோழிகள் சில மண் கண்டு சிறகடித்துப் பறந்தன.

கண் விழித்து, நீரூற்றி பசளையிட்டு வளர்த்த இம்மரத்தை எந்தப்புழு சேதாரம் செய்தது. அவரின் சிந்தனைத் தளத்தில் கள்ளிச்செடிகள். துகிலுரிய மெய் பொத்தி நிற்கும் பத்தினியின் மனோவதை அவருள் கணன்றது. தேகம் பதற மரத்தைச்சுற்றிச் சுற்றித்திணறினார். மரத்தைத் திட்ட வேண்டும் போலிருந்தது. எனினும் அதன் பாஷையைப் புரிந்து கொள்வது இப்போது சிரமமாயிருந்தது. தளிர் பருவத்தில் அதனுடன் கொஞ்சிப்பேசிய மழலை மொழியில் திட்டினார். அவரின் தேகத்துடிப்பு ஆசுவாசித்தது. இருமி இருமி கபத்தை மரத்தினடியில் சீந்தினார். மூஷ்கைச் சிந்தி வேரில் பூசினார். அவர் செய்கையில் அவருக்கே லஜ்ஜை வந்தது. சற்று நிதானிக்கையில் மரத்தின் மீது அனுதாபம் மிகுதியாயிற்று. அவரால் மரத்தின் பசுமை மிகுதளிர் பருவத்தை மறக்கமுடியவில்லை.

1

முற்காலத்தில் மரம் நிற்குமிடம் தரிசாயிருந்தது. ஆட்டுமந்தைகள் மேய்வதற்கும், மாடு வெட்டுவதற்கும் ஊருக்குத் தெரியாமல் பெரியவர்கள் கஞ்சா அடிக்கவும், சிறியவர்கள் பீடி குடிக்கவும் இன்னும் சில யௌவன அசிங்கங்களின் ஒத்திகைக்கும் பேர்போன மறைவிடமாய் அதன் உபயோகம் அந்நேரம் மெச்சும்படியாயிருந்தது. ஒதுக்குப் புறத்தில் யானைகளின் அட்டகாசமுமிருந்தது. சமயத்தில் ஒரு மர்மக்கரம் தோன்றி மறைந்தது. நாதியற்றோரின் ஏக இரட்சகனென யானை பிளிறிற்று. மர்மதேவதையும் பதிலுக்குப் புலம்பிற்று புத்திமான் பலவான். நலிவுற்ற மக்களோ வீரமிகு யானையை பூஜித்தனர். அதன் தும்பிக்கையில் நம்பிக்கை மலர்கள் கமழ்வதாய் அதன் பாகன் கூவினான். அதன் வால் மயிரைப் பிடுங்கி இளைஞர்கள் தம் கரங்களில் "மொண்டையல்" அணிந்தனர். பெண்களோவெனில் அதன் சாணம் தெளித்து வீடு மெழுகினர். வயிற்றைப் பிசையும் அதன் பிளிறலில் குழந்தைகள் தூளியில் துஞ்சின.

யானையின் புகழ் ஓங்கிற்று. ஒரு யானைக்கு ஒன்பது பாகன் அங்குசம் வைத்திருப்பவனெல்லாம் பாகனெனக் கூவினான். யானையின் காதில் துரும்பெடுத்து குடைந்து விட்டு நானும் பாகனெனக் கூவியவர் விரைவில் காணாமல் போயினர். ராஜ யானை ஊருக்குள் நடைபோட்டது. தரிசு நிலத்தில் வாய்க்கால் நிரம்பியது. மூன்று போகமும் நெல் விளையும் பூமி பச்சை பசேலென்ற பூரிப்பும். செஞ்செழிப்பில் பூமி குளிர்ந்தது நெஞ்சு முட்ட மகிழ்ச்சியும் சகலதும் யானையின் கடாட்சத்தால் கிடைத்ததென ஆசிகள் பிறந்தன.

பள்ளிக்கூட வாசனையற்றோர் பிளிரை படமெடுத்து தம் கூடத்தில் கொளுவினர். புத்திஜீவிகள் தம் மதில்களில் வரைந்து குதூகலித்தனர். வரையாதோர் வாழ்வில் வறுமை படர்ந்தது. கொம்பன் தெருவுக்குத்



தெரு இராஜபிஷேகம் செய்யப்பட்டான். தேசமெங்கும் அதன் கீர்த்தியும், கியாதியும் ஓயாமல் பேசப்பட்டன. பலமுள்ளவனுக்கே உலகம் மசியும். அவனுக்கு சாதுர்யம் தேவையில்லை. ஆளுமையும் அறிவும் தேவையில்லை. நம்பிக்கை நாணயம், நல்லொழுக்கம் எதுவுமே தேவையில்லை. பலம் ஒன்றே போதும் தரணி ஆள.

அங்குசத்தின் நுனி கொண்டு பாகர்கள் மக்களை வதைத்தனர். யானை மிதித்து மாண்டவர் தொகை மிகுதமாயிற்று. யானையை நம்பினோர் கைவிடப்படார் என்றவர் திகைத்தனர். ஓர் அநாதைபோல சமூகம் தனித்து நின்றது. தன் தலைவிதியின் எழுத்தைக் கடிந்து கொண்டது. ஒருபக்கம் சிறுத்தைகள் மறுப்க்கம் பிளிறுகள். சிறுத்தைகள் இரத்தம் குடித்து வன்மம் தீர்த்தன. காடேகிய மனிதர்கள் கழனிசென்ற உழவர்கள் முண்டங்களாய் ஊரின் நடுவே பாயும் ஆற்றின் முதுகில் மிதந்து வந்தனர். வரிச்சுமை தாளா செல்வந்தர் தலைகள் எல்லையில் தனித்துக் கிடந்தன. ஏழு நரகமும் ஒரு சேர ஊருக்குள் குமுறின. தரிசு நிலத்தில் செழிப்புற்றவர் சருகுகளாய் உதிர்ந்தனர். ஒரு மர்ம தேஸத்தின் குடிகளாயினர். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கு வந்தது. இத்தனையும் மீறி, தரிசுநில மக்கள் தம் நிலத்தில் தமக்கென நிழல்தர ரகஸிய வித்தொன்றை ஊன்றினர்.

2

எங்கும் வெக்கை தாழ முடியாத அந்தரிப்பு. நிழல் தரும் மரங்களென எதுவுமில்லாத அந்தகாரம். யானையின் வருகையால் மரங்களின் ஆயுள் கம்மியாயிற்று. காற்றை வடிகட்டவும் மரங்களற்ற சூன்யவெளி யானைக்கு எதுவும் தப்பில. படுக்கையறைச் சுவரிலுய் யானையின் காதிருந்தது. குளியலறையிலும் அதன் கண்ணிருந்தது. வளர்த்த கடா மார்பில் பாய சனங்கள் வாய் பொத்தினர். பேனாக்களில் மை நிரப்பி மெய் எழுதும் எழுத்தாளர் கடற்கரையில், களணியில் பிணமாய் மிதந்தனர். யானைக்குச் சாமரம் வீசியோர் பொற்கிழி பெற்றனர்.

சனங்கள் ஊன்றிய வித்து முளைவிடத் தொடங்கிற்று. பூமியின் முதுகைப் பிளந்து மொட்டவிழும் அதன் வசீகரம் காண்போர் மனதை கிறங்கடித்தது. யானை சேதாரம் பண்ணிய பூமியில் கடவுள் எழுப்பிய தேவதரு சொர்க்கலோகத்தின் தேவதைகள் தம் பொற்கரங்களால் நீரூற்றி செழிக்க வைத்த அதிசய மரம். அதிசயத்திலும் அதிசயம் மரம் வாய் மலர்ந்து பேசியது. சனங்கள் அஞ்சினர். விருட்ஷத்தை யானை விழுங்குமோ?

"எம்முயிர் மரமே! நீ இப்போது பேசாதே, பாகர்கள் அக்கிரமக்காரர்கள். நாம் உன்னைப் பேணிப் பாதுகாத்து ஆல விருட்ஷமாய் வளர்த்த பின் நீ குரலெடுத்துப்பேசு. நிழல் முகிழும் உன் காலடியில் இளைப்பாறவும், அடைக்கலமாகவும் எமக்கு நீ தீபமிகு ஒளியைக் காட்டு". வேதநீர் உறிஞ்சி மரம் வளர்ந்தது. மங்கையர் மரம் வளர விரதமிருந்தனர். இளைஞர்கள் அரணாயினர். அதன் நிழல் விழும் மண்ணிலிருந்து இளந்தளிர்கள் துளிர்த்தன. மரத்தின் சுகந்தத்தில் இதயங்கள் திணறின.

வானளாவ கிளைபரப்பி நெஞ்சு முட்டும் பெருமையுடன் கிளைகள் பரப்பிற்று மரம். விழுதுகள் மண்கெல்லி பூமியின் முதுகைத் துளைத்தெழுந்தன. "நாம் யார்க்கும் அடிமையல்லோம். எம்மினம் அநாதையல்லோம்" மரத்தின் கீழிருந்து கோஷங்கள் எழுந்தன. தரிசுநிலம் முசிய கிளைகளின் நிழல் வாசம். எங்கும் குளிர்மை.

மரத்தைக் காப்பது மதத்தைக் காப்பதாகுமென, மினாராக்களிலிருந்து சுபசெய்தி வந்தது.

கொம்பனின் அகங்காரம் மிகுதமான ஒரு மாலைப் பொழுதில் மரம் பேசியது. ஆண்டிகளாய், கொம்பனின் ஆணைக்குப்பணிந்தோராய் வாழ்ந்த மக்களின் தார்மீகக் குரலாய் மரம் பேசியது. அதன் நிழலில் பருந்துக்குத் தப்பி, தாயின் சிறகுள் அடைக்கலமாகும் கோழிக் குஞ்சென மக்கள் ஒடுங்கினர். மக்கள் ஊன்றிய வித்தின் நாவசைப்பில் பிரளயம் பொங்கிற்று. தரிசு நிலம் தாணிடியும் மரத்தின் கியாதி பரவிற்று. ஒலிவ் மரக்கிளையாய் அது ஒடித்துச் செல்லப்பட்டு தொழுகையறையில் செருகப்பட்டது. மதில்கள் தோறும் அதன் சௌந்தர்யமே ஆக்ரமித்தது. அதன் ஆன்மீக முழக்கம் தேஸத்தை உலுக்கியது.

கொம்பனின் மதம் தணிந்திற்று. வெறிகொண்டலைந்த அதன் தனித்துவ தர்பாரில் மரத்தின் வேர்கள் ஊடறுத்து அரிக்கத் தொடங்கிற்று. கொம்பனை சங்கிலி கொண்டு கட்டிப்போடும் இராட்ஷ மரத்தின் கீழ் மக்கள் திரண்டனர். கொம்பன் விழித்துக் கொண்டது. எனக்குத் தெரியாமல் இதெப்படி வேரூன்றிற்று. ஒற்றர்களின் மூளையில் கோளாறு துவம்சம் செய்தால் மரத்தில் கட்டுவார்கள். இராஜதந்திரம் நரிக்கு மட்டுமா? யானை பணிந்ததுபோல் நடிக்கத் தொடங்கிற்று.

மரமே! நீ இல்லையெனில் நானுமில்லை. என் தீனியுமில்லை. எனக்கு குளிர்ச்சியுமில்லை. உன் மக்களை இனிக்கொல்ல மாட்டேன். உன்னை செல்லுமிடமெங்கும் காவிச் செல்வேன். என் தும்பிக்கையில் ஓர் சிம்மாசனம் தருவேன். தரிசு நிலத்திலிருந்து உன்னைப் பிடுங்கி, அழகு மிகு பைன் மரங்களிடை நட்டுவேன். அங்கே பனி விசிறும் பொன்னந்தியில் உன் கிளைகளின் மேலிருந்து குயில்கள் கூவும், மயில்கள் அகவும். வஸந்தத்தின் ஏகனாய் நீ மனம் வீசுவாய். உன் மக்களின் விடியலை அக்கிளை மீதமர்ந்து பரவச்செய். மரமே என் முதுகிலேறி சவாரி செய். உனக்கு சர்வலோக இன்பங்களையும் தருகின்றேன்.

மரம் பிகுபண்ணிற்று. வேதத்தை உயர்த்திப் பிடித்து இது என் வழிகாட்டி. என் சுவாசமும் இதுவே. நான் வாங்கவோ விற்கவோ தேவதரு என் நிழலில் உயிரசையும் தரிசு நிலத்தாரை விட்டும் பிரியேன் என்றது. மனிதருக்கு மரத்தின் மேல் பக்தி அதிகமாயிற்று. என் மரமே நீ தான் எம் இரட்ஷகன், உன் நிழலிருக்கப்பயமேன், நாரே தக்பீர் அல்லாஹு அக்பர். பைலாப்போட ஒரு கூட்டம். பிறந்தது.

பேராசை யாரைத் தான் விட்டது. ஆசை ஏப்பமிட்ட சரிதங்கள் ஏராளம். அற்பனுக்கு பவிசு வந்தால் குடைபிடிக்க அவனுக்கு இரவென்ன பகலென்ன, கொம்பனா விடுவான். மரத்தின் முன் அமர்ந்து ஆசைத் தீயில் வாசனைத் தைலம் ஊற்றினான் அதன் வேரில் சொர்க்க நீர் பீச்சினான். வேரை அசைத்திட்டால் வேலை இலகு. யானையின் தந்திரம் பலித்தது. வனப்புமிகு சோலைகள் காட்டி மரத்தை வசியப்படுத்திற்று. "தரிசு நிலத்தில் ராஜாவாக இருப்பதைவிட பழமுதிர் சோலைகளின் அடிமையாக இருப்பது சௌபாக்கியம்" மரம் பினாத்தத் தொடங்கிற்று.

அன்றாடங் காய்ச்சிகள் ஆசையோடு வியர்வை சிந்தி வளர்த்த மரம் பேசியது. ஆண் மரமென்று ஆனந்தித்து குருதியூற்றி வளர்த்த மரம் பேசியது. காற்றடிக்கும் திசையில் சாய்வதுதான் என் பிறவிக்குணம் என்றது. தும்பிக்கையில் சுடர் இருப்பதாய் வேதம் ஓதியது. மரத்தை பூஜித்த சில குருவிச்சைகள் அதற்கு கோரம் போட்டனர். நீ எது சொன்னாலும் எம் விடிவுக்கே என ஒட்டுண்ணிகள் கூஜா தூக்கினர் மரம் பச்சோந்திகளின் தங்குமிடமாயிற்று.

பருந்துகள் உச்சியில் கூடமைத்தன. மரப்பொந்தில் கிளிகள் இல்லை. குயில்களும் இல்லை வெண்புறாக்கள் முட்டையிட்ட கூடுகளில் கருநாகம் குடிபுகுந்தது. குரலெடுத்து கதறிய மக்களின் தலையில் மரம் கற்களை வீசிற்று. அதன் பூக்களை விற்று புண்ணியம் தேடியோர் குறுநில மன்னராயினர். மக்களோவெனில் கூடுகளற்ற பறவைகளாயினர்.

மீண்டுமொரு ஏகாந்தவெளி. பொட்டல் வெளியில் நம்பிக்கை ஊற்றிய ஆல விருட்ஷம் விஷம் கக்கும் மர்ம காடாயிற்று. மர நிழலில் இளைப்பாறச் சென்றவர்கள் அதுவிடும் உஷ்ணத்தில் கருகி மீண்டனர். கொம்பன் இளைப்பாறும் தளமாயிற்று மரம். காற்றுக் கணக்கும் தீவிலிருந்து சனங்கள் அழுதனர். மதத்தை அடகு வைத்து வளர்த்த மரம் புழுக்கள் வதியும் கூடாயிற்றே! கொம்பனின் முத்துக்கள் மரத்தை அலங்கரிக்க மரம் பூரிப்பில் சிலிர்த்தது. அதன் கிளைகளில் வஸந்தம் பூத்தது. சூர்யோதத்தின் பொற்கிரணங்கள் பட்டுத் தெறிக்கும் கிழக்கின் முகத்திலிருந்து மரத்தின் ஜீவஜோதி பூமிமுழுக்க படர்ந்தது. கடும் உறவு கண்ணைக்கெடுக்கும். அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர பகைவனுமில்லை என்றெல்லாம் தத்துவம் பாடியது. அது தன் கிளைகளில் தனக்கான சுருக்கு கயிற்றை கட்டத் தொடங்கியது.

காலம் தன் சிறகினை விரித்து பரந்துகிடந்தது. அதன் முதுகின் மேல் நிகழும் பரிணாம மாற்றங் குறித்து அதற்கேதும் சஞ்சலமில்லை. அதிர்ஷ்டமுள்ளவன் அதனை சிக்கெனப் பிடித்துக்கொண்டு நன்கு பயன்பெறும் உத்திகள் கற்றான். ஏமாளியோ, மண்கவ்வி காலத்தை குறை கூறித் திரிந்தான். மரமும் யானையும் கூட இவ்விதிகளுக்கமையவே உறவை வளர்த்தன. அளவுக்கு மீறிய அமுது கசக்கத் தொடங்கியது. யானை விருட்ஷ ஊடல் ஊடகங்களில் அம்பலேமேறிற்று. இருமனமும் கசந்தன. தாவர மனமும் மிருக மனமும் ஒத்துப்போகாதே. விரிசல்கள் வலுத்தன. யானையின் மரணத்தை மோப்பம் பிடித்த மரம் அதைக்காட்டிற்கு விரட்டியது.

கிழடு தட்டிய யானையே நீ வனவாசம் போ உனக்கிங்கு வேலை இல்லை. என் நிழலிலும் இடமில்லை. மரத்தின் ஆங்காரத்தில் கொம்பனின் சினம் வெடித்தது. தும்பிக்கையால் மண்வாரி மரத்தின் முகத்தில் அடித்தது. அதன் அடிவேரில் சிறுநீர் கழித்தது. நன்றி கெட்ட தாவரமே என் பலத்தில் நக்குண்டவனே என் முதுகிலேறி சொர்க்கத்தில் உலாவந்தாய்! பழமுதிர் சோலையில் உனக்கொரு இடந்தானிருக்கும்

தந்தேன். உன்னில் காய கல்பகனிகளை காய்க்க வைத்தேன். உன் இனத்தின் புத்தியே இதுதானோ? யானை பெருங்குரலில் பிளிறியது.

மரம் மசியவில்லை. இனத்தை ஏசியாலென்ன மதத்தை இகழ்ந்தாலென்ன? மரத்திற்கு சினம் வரவில்லை அது. காற்றின் திசையை மோப்பம் பிடித்தது. மர்மக் குரலொன்று மரத்தை தழுவியது. கியாதி பெற்ற மரம் கீர்த்தியின் உச்சியில் நின்று விவாதிக்கும் திறன் பெற்றது.

மரத்தில் குடியிருக்க ஒரு தேவதை வந்தாள். அவள் வானலோகத்தின் சௌந்தர்யங்களை பூண்டிருந்தாள். அவள் முகத்தில் கருணையின் ஜோதி சுடர்ந்தது. கைவிரல் கணையாழியைத் தேய்க்கத் தேய்க்க வெண்புறா சிறகடித்தது. தேவதையின் மந்தகாசத்தில் பிரபஞ்சமே கிறங்கிற்று.

கொம்பனின் கொடுங்கோளில் முகமிழந்த மனிதர்கள் தேவதையின் மடிமீது சயனிக்கத் துடித்தனர். அவள் காந்தரூபம் மரத்திலும் செதுக்கப்பட்டது. மரமோ ஆண்மை பொங்கும் பெருமித முகத்துடன் தேவதை அணைப்பில் அடங்கிற்று. நம் விமோசனத்தின் இரட்சகியென வேதம் ஓதிற்று. மரத்தினடியில் தேவதை அமர்ந்தாள். கொம்பனை விரட்ட எனக்கு உதவுவாயா? காதருகில் கிசுகிசுத்தாள். பசிய புற் தரையில் கை கோர்த்து மரத்துடன் மரமென அத்வைதமானாள்.

"ஆம். இளவரசி கொம்பனை விரட்டி உன் பஞ்சு மடியில் முகம் கவிழ்ப்பேன். மக்களாணை கொம்பனை விரட்ட உன்னுடன் இணைவேன். நீ கடவுளின் செய்தியை, எம்மிடம் கொண்டு வந்தவள்" மரம் கும்மாளமிட்டது. தேவதை தான் செல்லுமிடமெங்கும் மரக்கிளையை தன்னுடன் ஒடித்துப் போனாள். அதன் முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டாள்.

—19

நன்றி - நூலகத்திட்டம்

# "பார்த்திருந்தது போதும் போராட்டத்தில் குதிப்போம்!"

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் பெரும் பிரச்சாரத்தைப் பார்த்தால் பண்டார உட்பட வங்கித் தலைவர்கள் முதல்தர ஐ.தே.க. காரர்கள் அல்லது புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று எவராவது நினைக்கக் கூடும். அவ்வளவு பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, திட்டமிட்டு அரசாங்கத்தைக் கவிழ்க்க வங்கித் தலைவர்கள் தயாராகின்றார்கள் எனச் சில இடங்களில் இருந்து பேச்சுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. தனியார் துறை வங்கி ஊழியர்கள் நடத்தும் போராட்டத்தையும், அந்தந்தத் தனியார் துறை வங்கி உரிமையாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் என்பதைவிட அரசாங்கத்துக்கு எதிராக விடுக்கப்பட்ட போராட்டமாகவே அரசாங்கத்தின் தொடர்புடகவியலாளர்கள் காட்டுகின்றனர்.

இதற்கிடையே பல்கலைக் கழக ஊழியர்களும் தமக்கு நடந்த அநியாயங்களை இல்லாது ஒழிப்பதற்காகத் திடகாத்திரமான போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இந்த ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு நிர்வாகம் 1988 மட்டிலேயே உடன்பட்டிருந்தாலும் இதுவரை அந்தக் கோரிக்கைகளை வழங்க இந்த அரசாங்கத்தினாலும் கூட முடியாது போயுள்ளது.

தொழிற்சங்கங்களின் கோரிக்கை இந்த நேரத்திற்குப் பொருத்தமற்றது என்றும் இவர்களது போராட்டம் தவறானது என்றும் அரசாங்கத்திற்கு நெருக்கமான நண்பர்கள் கூறுகின்றார்கள். அதற்கிணங்க இந்தப் போராட்டங்கள் பெரும் அரசியல் பொறி எனக் காண்பிக்க இவர்கள் பாடுபடுகின்றனர். உண்மையிலேயே இந்த இரு பிரிவினதும் அரசியல் தலைமை பொ.ஐ.முவிடமே உள்ளது. நேரடியாகக் கூட இந்த அரசாங்கத்தைக் கட்டி எழுப்ப உதவி வழங்கியவர்களிடையே இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் அநேகமானோர் இருந்தனர் எனக் கூறினால் அது தவறானதல்ல.

வங்கி ஊழியர் சங்கத்தின் தற்போதைய தலைமை "முன்னேற்ற முன்னணி(பிரகதி பெரமுன)"க்கே உரித்துடையது. இந்த முன்னணியினுள் பொ.ஐ.முவுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கே அதிக பலம் இருந்தது. விஷேமாக வாசுதேவ நாணயக்கார பொ.ஐ.முயுடன் சேர்ந்தவுடன் அந்த முன்னணி பகிரங்கமாகவே பொ.ஐ.முக்கு வாழ்த்துப் பாடும் நிலைக்குட்பட்டது. பண்டார போன்றவர்கள் பொ.ஐ.முயே எல்லாப் பிரச்சினைகளுக்கும் உரிய பதிலைப் பெற்றுத்தரும் வழிமுறை எனச் சிந்திக்காவிடினும், தோழர் வாசுதேவ போலச் சுதந்திரம், ஜனநாயகம் அதனுடாக ஏற்படும் என நம்பினார். அதற்கிணங்க பொ.ஐ.முவின் இடதுசாரி முண்டு கொடுப்பாக இந்தத் தொழிற்சங்கம் வேலை செய்தது. பல்கலைக் கழகத் தொழிற்சங்கங்களின் நிலைமையும் அதேபோன்றதுதான். அங்கும் அநேகமானோர் இந்த அரசாங்கத்தைக் கட்டியெழுப்பப் பெரும் எதிர்பார்ப்புடன் பணி புரிந்தவர்களாவர்.

உண்மையிலேயே இன்று தொழிற்சங்க இயக்கத்தினுள் உயர் அல்லது மேல் மட்டத்தில் நல்ல சௌகரியங்களுடன் வாழும் பலரும் இதுபோல அரசாங்கத்தைக் கட்டியெழுப்ப உதவிகள் செய்த இடதுசாரிகளேயாவர்.

அவர்கள் கூட்டணி பற்றி உணராவிட்டாலும் சந்திரிகா அதிகாரத்துக்கு வருவதால் நன்மைகளேயன்றித் தீமைகள் எதுவுமே நடைபெறாது என நம்பியவர்களல்ல. நவ சம சமாஜக் கட்சிக்கு நெருக்கமாகவிருந்த தொழிலாளர் தலைவர்கள் தவிர்ந்த மற்றைய பலரதும் நிலைமை



அதுதான்

இன்னும் மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வீ.பீ.)யுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்ட முக்கிய தொழிற்சங்கத் தலைவர்கள் எவரும் இல்லை, 1994இல் எப்படியும் இருக்கவில்லை.

அதனால் தேசிய ஊழியர் சங்கத்தவர்களை விட இருந்த எல்லாத் தொழிலாளர் தலைவருமே மறைமுகமாக அரசாங்கத்திற்கு உதவி செய்தனர். உண்மையிலேயே தோழர் பாலா தம்புவின் நிலைமையும் அதுதான். இந்த அரசாங்கம் புதிதாக வந்த நேரத்தில் அரசாங்கத்தின் விஷேட ஆலோசகர் போலவே தொழிற்பட்டார். அன்று தொழில் அமைச்சராகி இருந்த மஹிந்த ராஜபக்ஷ இவர்களை வசீகரித்து நெருக்கமாக்கி வைத்திருக்க முடிந்தது. இதன் காரணமாக இந்தத் தொழிலாளர் தலைவர்கள் அரசாங்கத்துடன் கோபம் கொண்டு இருக்கின்றனர் என்றால் அது புதிய நிலைமையாகும். வாசுதேவ ஆளும் கட்சியிலிருந்து வெளியே வந்ததால் இந்தப் புதிய நிலைமையையே காண்பித்தது. பண்டார போன்றோர், வாசுதேவவைத் தோளில் தூக்கிப் போட்டக் கொண்டு நாட்டைச் சுற்றிப்போகத் தொடங்கவில்லை. அதற்குக் காரணம் வாசுவும் அதே போன்ற தீவிரப் பயணமொன்றுக்குத் தயாராய் இல்லாமை ஆகும். வாசு முறித்துக்கொண்டு வெளியே வரும்போது, வங்கி ஊழியர் சங்கம் அதுவரை அரசாங்கம் பற்றி இருந்த எல்லாவித எதிர்பார்ப்புகளுமே முழுமையாகவே இல்லாதுபோனது எனக் கூறலாம்.

இவர்கள் எல்லாருக்கும் மேலும் அநியாயங்கள், அநீதிகளைச் சகித்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்தத் தொழிலாளர் தலைவர்களுக்கு முடியாது. அரச வங்கிகளில் முன்னைய அரசாங்கக் காலத்தில் அடி, உதை வாங்கி வதைபட்டவர்கள் ஒரு புறத்தில் இருக்கையில் அன்றும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் அதிகார இடங்களைப் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் இந்த அரசாங்கத்தின் கீழும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களாகப் பெயரிட்டுக் காட்டிக் கொண்டு இலாபம் பெற்றுக் கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது இருப்பது பற்றி ஆச்சரியப்பட எதுவும் இல்லை. எவ்வாறு இவ்வளவு காலமும் இந்தப் பிரச்சினைகள் பற்றியாவது பெரிய போராட்டமொன்றைச் செய்யாது பார்த்துக்கொண்டிருந்தனர் என்பது பற்றியே ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. வசதிபடைத்தவர் கொழுத்த சம்பளதைதை வர வர அதிகமாகப் பெருக்கிக் கொள்ளும்போது, வசதியற்றவர் தமது சம்பளத்தை அதே அளவுக்கு அல்லது அதே அளவின் அரைவாசிப் பங்கிற்கு உயர்த்திக்கொள்ள முயல்வது தவறானதொன்றாகுமா? தவறு அதுவல்ல. இதுவரை காலமும் இவற்றிற்கு இடங் கொடுத்து, இந்தத் தலைவர்கள் பார்த்துக்கொண்டிருந்ததே!

அரசாங்கம் வங்கி ஊழியர்களின் சம்பளம் பற்றி பெரிது படுத்திக் கதைக்கின்றது. கம்பனிக்காரர், தரகர்கள், வியாபாரிகள், கொமிசன்காரர்கள் ஆகியோர் நிமிடமொன்றுக்கு பத்தாயிரக்கணக்கில் சம்பாதிக்கும் சமூகமொன்றில் வங்கி ஊழியர்களின் சம்பளம் பற்றிப் பேசுபவர்களுக்கு சாட்டை அடி கொடுக்க வேண்டும். மறுபுறம் இந்தத் தொழிலாளர் தலைவர்களுக்கும் இந்த அரசாங்கத்துக்கு வாழ்த்துப் பாடியபடி இதுவரை காலமும் பார்த்துக்கொண்டிருந்ததற்காக எப்படியாகிலும் ஆகக் குறைந்தது தலையில் ஒவ்வொரு "குட்டு" ஆவது கொடுக்க வேண்டும்.

இவர்கள் இப்போது மக்கள் விடுதலை முன்னணிக்கோ அல்லது புதிய இடதுசாரி முன்னணிக்கோ திரும்பி வந்துவிட்டார்கள் என்றோ நான் கூறவில்லை. வாசுவின் பின்னால் ஓடுகிறார்கள் என்று கூறவும் முடியாது. ஆனாலும் இப்போது முழு உழைக்கும் மக்களினுள்ளே ஏற்பட்டுள்ள புதிய உணர்வுதான் "பார்த்திருந்தது போதும், போராட்டத்திற் குதிப்போம்" என்பதாகும்.

அரசாங்கம் வங்கி ஊழியர்களின் சம்பளம் பற்றி பெரிது படுத்திக் கதைக்கின்றது. கம்பனிக்காரர், தரகர்கள், வியாபாரிகள், கொமிசன்காரர்கள் ஆகியோர் நிமிடமொன்றுக்கு பத்தாயிரக்கணக்கில் சம்பாதிக்கும் சமூகமொன்றில் வங்கி ஊழியர்களின் சம்பளம் பற்றிப் பேசுபவர்களுக்கு சாட்டை அடி கொடுக்க வேண்டும்.

**கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன**

**லக்பிம 19990516**

**தமிழில் : சி. செ. ராஜா.**

## முறையான...

8. துணைப்பாட விதான நிகழ்ச்சிகளில் எல்லா மாணவரையும் ஈடுபடுத்தி எழுத்தறிவு மட்டுமன்றிப் பண்புசார் திறன்களையும் வளர்ப்பதில் அக்கறை காட்டுவதன் மூலம் எல்லா மாணவரையும் வாழ்க்கையில் தேர்ச்சியடையச் செய்தல்.
9. பெரிய பாடசாலைகளில் உள்ள வளங்களை அவசரகால நிலை கருதி ஏனைய பாடசாலைகளுக்கு பங்கிட்டு வழங்கிய பற்றாக்குறைகளை நிவர்த்தித்தல். பெரிய பாடசாலைகளில் உள்ள வளங்களைச் சிறிய பாடசாலைகள் பெற்றுக்கொள்ள முயற்சி செய்தல்.
10. ஏழைகளுக்கும், திறமையுள்ளோருக்கும் கிடைக்கும் கல்வி, பதவி வாய்ப்புகளைச் செல்வாக்கைப் பயன்படுத்தித் தட்டிப்பறிக்காது நீதியும், நியாயமும், திறமையும் மிக்க கல்விச் சமுதாயம் ஒன்றை உருவாக்க வழிசமைத்தல்.
11. கிராமப்புறங்களிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மாணவர்கள் இடைவிலகிச் சென்றதினாலும், பாடசாலையில் சேராததினாலும் இழந்த கல்வியை மீட்டெடுக்க அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்ட பிரதேங்களு[illegible] சென்று முகாமைத்துவ விசேட செ[illegible]ட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திச் சிறுவர் கல்வி உரிமையைக் காத்தல்.
12. இன்று எமது சமுதாயமானது இக்கீழ் நிலைக்குச் சென்றதற்கும் உரிமை இழந்து நிற்பதற்கும், மாற்றாருக்கு மண்டியிட்டுப் பதவியேற்று சென்றவர்கள் இன்று மக்களைக் கைவிட்டுச் சுயநலவாதிகளாக இயங்குவதற்கும், வேலையில்லாப்பிரச்சினை நீளுவதற்கும், சமூக ஒற்றுமையீனம் நிலவுவதற்கும், நாட்டுக்காக உழைக்காது ஓடிச் செல்வதற்கும், சமூகத்துக்காக உழைக்காது ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதற்கும் கல்வி முறைமையை சரிவரப் பயன்படுத்தாமல் விட்டதே காரணம் என்பதை விளங்கி, அதனடிப்படையில், எமது பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சித்தல்.
13. வெட்டிப்பேச்சு பேசுவதையும், குதர்க்கங்கள் பேசுவதையும் சங்க அங்கத்தவர்கள் உரிமைகளை மாத்திரம் பேசிச் செயற்படுவதையும் விடுத்து சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் எமது கடமையையும் உணர்ந்து கல்விச் சமூகம் செயற்படுதல்.

மேற்கூறியவை எல்லாம் கல்விச் சமூகம் மட்டும் தெரிந்து செய்ய வேண்டிய காரியங்கள் அல்ல. எமது கல்வி முறைமையில், கற்று வெளியேறிய வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உத்தியோகத்தர்கள் எல்லோருமே எமது பிரதேசம், எமது மக்கள் என்ற உணர்வு கொண்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று சமூகப் பணியாற்றுவதும், எமது உரிமைகளுக்காக முயற்சிப்பதும் அவசியமாகும். பாதிக்கப்பட்ட பிரதேங்களுக்காகவும், எமது சமூகத்துக்காகவும், உழைப்பினை மட்டுமல்ல பொருளாதார உதவிகளையும் வழங்கி அவர்களை வாழ வைக்க வேண்டும்.

தமிழ் சட்ட வல்லுனர்கள், வழக்கறிஞர்கள், யாவரும் ஒன்றிணைந்து எமது மக்களின் அடிப்படை உரிமை மீறல் நடைபெறுவதைப் பார்த்துக் கொண்டிராமல், இவற்றை எங்கள் சமூகத்துக்கு எதிரான வழக்குகளாகக் கருதியும், தமிழ் மக்களுக்கான அடக்கு முறையாகவும் கருதி, உயர் நீதிமன்றங்களில் நீதியை நிலைநாட்ட உழைப்பதே அவர்கள் இம் மாணவர்களுக்குச் செய்யும் பாரிய உதவியாகும். மக்களின் சொத்தில் கல்வியைப் பெற்றவர்களாகிய நாம் மக்களுக்குக் கடனைச் செலுத்த வேண்டியது எமது கடமையாகும்.


எங்கள் மேம்பாடு, எங்கள் கைகளிலேயே தங்கியுள்ளதேயன்றி வேறொருவர் தயவில் அல்ல.

ஆயிரம் அறிக்கைகள் விடுவதை விடுத்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே மேலாகும்.

அரசின் பாரபட்சமான நடத்தையை மூடி மறைப்பதல்ல இதன் இலக்கு. பாரபட்சம் நடைபெறுவது உலகமறியாததல்ல. இதனைக் கூறிக்கொண்டிருப்பதால் மட்டும் ஒரு சந்ததியின் கல்வி அழிவைக் காப்பாற்ற முடியாது. ஆனால், முறையான கல்வியைப் பெற்ற ஒரு சமுதாயம் தனது பிரச்சினைகளிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்ளும் என்பதே எமது கருத்தாகும்.

**வே. இளமுருகன்**
**மல்லாவி**

# திலினாவின் மூன்று நூல்கள்:
# 'உடைபடும் புனிதங்கள்'




நீங்களும் இத்தரணியில்
சிதறிக் கிடக்கும் அனைத்து
கல்மண் துணிக்கைகளாகவும்.
ஓவியங்களாகவும் இருப்பதை என்
விழிகள்
காண்கின்றன.
இவ்விடயத்தை மீண்டும்
உங்களுக்கு ஒப்புவிக்க
ஆர்வமாயிருந்தேன்.
சொல்லுக்குச்சொல் சந்தத்தை
தேடி ஓடும் நெருக்கமான சூழல்
எனக்கில்லாவிட்டாலும்.
முதல் முறையாக மௌனத்தை
உடைத்தெறிய முனைந்துள்ளேன்.
வாழ்வு...தனிமை....
காதல்.....விரட்டியடிக்கப்படுதல்......
மரணம்......
இறுதியில் எம்மிடையே
எஞ்சப்போவது எதுவுல்லை.
எனது படைப்பின் அர்த்தம்
துலங்குவதும் உங்களாலேயே.
ஆகவே. எனது அனுபவங்களின்
இறுதியில் இருக்கும் இந்த இடைவெளி
நிச்சயமாக உங்களுக்காக.............!

திலினா வீரசிங்க
தனது முதல் சிறுகதை
தொகுதியின் முற்குறிப்பில்.

சிங்கள இலக்கிய உலகில் பெண் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் இருந்தபோதிலும், தனித்துவமானவர்கள் என்ற வரிசையில் வைத்து எண்ணப்படுபவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம் அவ்விதம் நம் நினைவுக்கு வருபவர் திலினா வீரசிங்க அவர்கள். பத்திரிகையாளராக அவரது படைப்புக்கள் பல விவாதங்களுக்கு அத்திவாரமாக அமைந்தது அவரது விவாதத்திற்குரியதான ஆக்கங்கள் பல பலர் அவரை புறமொதுக்க காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. அதேபோல் அவரது அண்மைக்கால சிறுகதைத் தொகுதிகளும் பலத்த விவாதங்களுக்குள்ளானது அந்த வகையில் அவரது இரண்டு சிறுகதைத் தொகுதிகளான நாந்துனன கெஹனிய (இனந்தெரியாத பெண்), பிட்டுவஹல் கள தருணிய (வெளியேற்றப்பட்டவள்), சமீபத்தைய குறு நாவலான "ஆதரணிய தெவியன் வஹன்சே ஹா அந்தக்கார ராத்திரிய" (அன்பான கடவுளும் பயங்கரமான இரவும்) ஆகிய நூல்கள் தொடர்பான ஒரு சிறு அறிமுக விளக்கத்தை சிங்கள மொழியறியாத, ஆனால் சிங்கள இலக்கியச் சூழலின் புதிய எழுத்தாளர்கள் தொடர்பில் ஆர்வம் கொண்ட தமிழ் வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்துமுகமாக இந்தக் குறிப்பு வரையப்படுகின்றது

பொதுவாக தனது சிறுகதைகள் தொகுதியிலுள்ள சிறுகதைகள் ஒவ்வொன்றும் தமது அனுபவங்கள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் திலினா அவர்கள், நானும் ஒரு பெண். எனவே இந்தச் சமூகத்தில் பெண எதிர்கொள்ளும் அழுத்தங்களை அனுபவமாக வரித்துக் கொள்கின்றேன் என்கிறார்

அவரது இதுவரையான படைப்புக்களில் முன் தோன்றும் மூன்று முக்கிய விடயங்கள் வெளிப்படுகின்றன. பெண்களின் அழுத்தங்கள். பெண்களின் பாலியல் சுதந்திரம், கேலித் தன்மை யோடு வெளிப்படும் அரசியற் காரணிகள் என்பனவே அவை.

அவரது முதல் தொகுதியான நாந்துனன கெஹனியவில்- நானும் அவர்களும், காதலியின் இரவு, கடவுளின் விருப்பம், வேலைக்காரனுடனான விளையாட்டு, காதலும், காதலும், இனந்தெரியாத பெண் ஆகிய தலைப்புக்களைக் கொண்ட சிறுகதைகள் உள்ளன. இரண்டாவது தொகுதியான பிட்டுவஹல் கள தருணியவில் மாற்றைத் தே... ...ல்லும் பயணமாக அழைப்பிதழ் - ஓ... ...ணுக்கு!, விடைபெற்ற அன்பு. நீதிமன்றத்தில் இராணுவத்தினன், வரலாற்று அதிர்ஷ்டசாலிகள், எதிர்பார்ப்பின் காலம், காதலில் சிறைப்படல், வெளியேற்றப் பட்டவள் ஆகிய தலைப்புக்களைக் கொண்ட சிறுகதைகள் உள்ளன. மூன்றாவது தொகுதியில் மரியா என்ற பெண்ணின் அரசியல், சமூக, அழுத்தங்கள் குறுநாவலாக படைக்கப்பட்டிருக்கின்றன.

திலினா வீரசிங்க அவர்களின் இப்படைப்புக்கள் அதிமுக்கியத்துவம் பெறுவது முதல் குறிப்பிட்ட மூன்று விடயங்களினாலும் எனின் தவறில்லை. அதேபோல் பெண்களை சம்பிரதாயபூர்வமான பரிணாமங்களோடு வரித்துக் காட்டும் எழுத்தாளர்கள் மற்றும் பெண் எழுத்தாளர்கள் மத்தியில் இவர் வேறுபடுவதும் இதனால்தான்.

அவரது படைப்புக்களில் வரும் பெண்கள், வாயாடிகள், சமூக கட்டுப்பாடுகளுக்கு முரணானவர்கள், அரசியலையும், சமூக சூழ்நிலையையும் கேலிக்குட்படுத்துபவர்கள், பாலியல் உரிமைக்காக போரிடுபவர்கள். அதேபோல் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்கள், காதலின் பேரால் ஏமாற்றப்பட்டப் பெண்கள், கணவனின் வன்முறைக் குள்ளான பெண்கள் என அவரின் சமூகப் பாத்திரங்கள் விரிவடைந்துச் செல்கின்றன.

சமூகத்தினால் பெண்கள் அளக்கப்படும் அளவிடைகள் , பாரம்பரியங்கள் என்பனவற்றை கேலிக்கும் கேள்விக்கும் உட்படுத்தும் சில உதாரணங்களாக இவற்றைக் கூறிக்கொள்ளலாம்.

"........... ஏழு வயதில் அவள் தனது
சகோதரனுடன் எவ்வித கடினமுமின்றி
வெட்கமுமின்றி நின்றுகொண்டு சிறுநீர்
கழித்துக்கொண்டிருக்கும் போது.
அமர்ந்துக் கொண்டு சிறுநீர் கழி
இல்லாவிட்டால் தாழ்ந்து இரு என
அம்மா கத்தத் தொடங்கினார். அது ஏன்
அப்படி? அவர் கூறுவது உண்மையா
என அவளால் புரிந்துக்கொள்ள
முடியவில்லை. அவள். தன்னால்
நின்றுக்கொண்டு சிறுநீா கழிக்க முடியும்
என வாதிட்டாள். அம்மாவோ
"வெட்கமற்றச்செயல்" அது என
கண்டித்தார். வெட்கம் என்றச் சொல்லில்
ஏதாவது விசயமிருக்கும் எனக் கருதிய
அவள் குனிந்து தனது சிறுநீர் வழியைப்
பார்த்தாள்........"

- அழைப்பிதழ் -ஓர் ஆணுக்கு
சிறுகதையிலிருந்து

"கன்னித்தன்மை உடலுக்குள்
அமைந்திருப்பதால் அதற்கு எப்போது.
எங்கு. என்ன நடந்தது என்பது
அவளுக்குத் தெரியாது. சிலவேளைகளில்
அது எஞ்சியிருக்கவும் அதில் அரைவாசி.
கால்வாசி அல்லது முக்கால்வாசியோ
எஞ்சியிருக்கவும் கூடும். கன்னித்தன்மை
தொடர்பாக மேற்கூறியளவு திருப்தி
அடைபவர்கள் மட்டும்
விண்ணப்பிக்கலாம்"

- அழைப்பிதழ் -ஓர் ஆணுக்கு
சிறுகதையிலிருந்து

பெண்களுக்கெதிரான வன்முறையை, ஆணாதிக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பம் இது.

"..........இருண்ட வீட்டிற்குள்
விளக்கின் மங்கிய வெளிச்சம்
பரவிக்கிடந்தது. அவளிடம் நான்
சேர்ப்பித்த சட்டை என் பையின் மேல்
கிடந்தது. ஈர உடைகளை களைந்தவிட்டு
பைக்குள் போட்டு விட்டு அவளுக்கென
வைத்த சட்டையை கதிரையின் மேல்
வைத்தேன்.
விடைபெறுவதற்கு முன் நட்பை
உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனத்
தோன்றியது.
"நேற்றிரவு இடியோடு மழை பெய்யும்
போது ஆளரவமற்ற காட்டுக்குள் ஏன்?"
நான் மென்மையான குரலில்
கேட்டேன்.
" அந்த மிருகத்தோடு படுப்பதை விட
இது மேல்"
" பயமில்லையா?"
"இரவானதும் இந்த வீட்டிற்குள்
படுக்கத்தான் எனக்குப் பயம்.
எல்லாவற்றுக்கும் நெருப்பு வைக்கிறான்.
அடித்து நொருக்குகிறான். சில
சமயங்களில் என்னையும் கொளுத்துவான்

"ஏன் அப்படியானால் நீ இங்கிருந்து
போய்விடலாம் அல்லவா?"

- வெளியேற்றப்பட்டள்
சிறுகதையிலிருந்து -

யுத்தச் சூழல், யுத்தத்தினால் பெண்கள் அனுபவிக்கும் பிரதிவிளைவுகள் என்பன அவரது கதைகளின் ஆங்காங்கு தடையில்லாது தென்படுகின்றன.

ஒரு முழு நாவலில், மாரியா எனும் பெண்ணை யுத்தம், அரசியல் சூழல் என்ற தளங்களில் வைத்து சுழலவிட்டிருக்கிறார். தெற்கின் பயங்கர கால கட்டம், வடக்கின் யுத்தச் சூழல் மாரியா எனும் தந்தையின் அரவணைப்புக் கிடைக்காத தனது தாயுடனும் சகோதரனுடனும் இயேசுவை மனதில் நினைந்து வாழும் பெண்ணைப் பாதிக்கும் விதம் சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசியல் சூழ்நிலை காரணமாக சகோதரன் எனும் ஓர் ஆணின் பலப்படுத்தலின் காரணமாக ஓர் ஆணுக்கு - புரட்சிக்காரனுக்கு - துணையாகின்றாள், சமைத்துப் போடுகின்றாள், படுக்கையை பகிர்ந்துக் கொள்கிறாள். அவன் தேவை முடிந்ததும் பிரிந்துச் செல்கிறான். பெர்டினஸ், ரமேஷ் பீற்றர், இசபெல், நர்மதா ஆகியவர்கள் மரியாவின் வாழ்வைத் தீர்மானிப்பவர்களாகின்றனர்.

இவ்வாறு திலினா வீரசிங்க அவர்களின் சிறுகதைத் தொகுதிகளும், குறுநாவலும் முக்கியமான சமகாலப் பிரச்சினைகளையும் பெண்ணியப் பிரச்சினைகளையும் பேசும் தொகுதிகள். இத் தொகுதிகள் சிங்கள இலக்கியக்காரர்கள் மத்தியில் பலத்த விமரிசனத்தை தோற்றுவித்தனவாகவும் உள்ளன. இது பெண்ணியப் பிரச்சினைகளை பரந்த மனப்பான்மையோடு, ஒளிவு மறைவின்றி பேசும், எழுதும் எழுத்தாளர்களுக்கு குறிப்பாக பெண் எழுத்தாளர்களுக்கு சமூகத்திலிருக்கும் வரவேற்பு இது தானா என்ற கேள்வியையும் ஏற்படுத்துகின்றது.

திலினாவின் படைப்புக்கள் பெரிதும் விமரிசத்திற்குட்படுவதற்கான காரணம் அவரின் கிண்டலும், பல அர்த்தங்களையும் கொண்டதான எழுத்துப் பாணி. தாம் எனலாம். அத்தோடு பலரின் வாழ்க்கை அனுபவங்களை தமது படைப்பில் பயன்படுத்துகின்றார். "காதலியின் இரவு" என்ற சிறுகதையில் உயர்மட்ட இராணுவ அதிகாரியால் ஏமாற்றப்பட்ட பெண்ணின் உண்மைக் கதையை எழுதியிருந்தார். அது சம்பந்தப்பட்டவர்களளால் பெரிதும் விவாதத்திற்குரியதாகியது. அதேபோல் "நீதிமன்றத்தில் இராணுவத்தினன்" சிறுகதையும், "இனந்தெரியாத பெண்" சிறுகதையும் இராணுவம் என்ற அரச இயந்திரத்தை கேலிக்குட்படுத்தும் விதமாக படைக்கப்பட்டிருந்ததும் விமரிசனத்திற்குள்ளானது. ("இனந்தெரியாத பெண்" சிறுகதையில் யுத்தம் நிலவும் ஒரு பிரதேசத்தினைச் சேர்ந்த பெண் ஒருத்தி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறாள்.)

அவரது சிறுகதைகளில் அரசியல் சார்ந்த பின்னணியைத் தெளிவுபடுத்தும் மேலும் சில உதாரணங்கள்.

" இரவு உணவு மேசையில் அவர்கள்
அனைவரையும் மீண்டும் காண
மரியாவுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.
பெரும் கவனமெடுத்து
ஒழுங்குப்படுத்தப்பட்ட மேசையில்
பீங்கான்கள்.
குவளைகள்.கரண்டிகள்.கோப்பைகள்.
கைதுடைக்கும் கைக்குட்டைகள்
மற்றும் மென்னிறமஞ்சளிலான
அலரிப்பூ ங்கொத்து ஒன்று. இவற்றை
அலங்கரிக்கும் பொறுப்பு மரியாவுடையது.
வேதனையுடன்....... கேலியினால்
நொந்துபோன தமது விழிகளை
தாழ்த்திக்கொண்டு அசையாமல் அவள்
அமர்ந்திருந்தாள்.
" வான்கோழி
இறைச்சி.........உனக்காகத்தான்"

யாழப்பாணத்திலிருந்து கொழும்பு
நோக்கி வரும் வீதியில் தான் எத்தனை
எரிந்துப் போனச் சடலங்கள்......
மனிதர்களின் தசைகள் எரிந்து கருகி.
அவை தார் வீதியில் உறைந்து......
யாராலும் அவற்றின் எடையை
ஒருபோதும் அளக்க முடியாதென நான்
சவால் விடுகிறேன்.
இறைச்சியின் இரத்தம் உறைந்த
தசைத் துண்டங்கள் அவர்களது
முகங்களில் ஒட்டியிருந்தன.

.......முதலில் அரசாங்கம்...... பின்னர்
இராணுவம்.......அதற்குப் பின்னர்
போராட்டக் குழுக்கள்....... இப்பொழுது
இந்தியன் ஆமி.... முன்பு பத்து.
பன்னிரண்டு வயது பையன்கள் பந்து
அடித்து விளையாடுவதையும்.
காற்சட்டைகளுக்கிடையே உள்ள
குஞ்சியினை தொடுவதும் தான்
வழக்கமாகக் கொண்டிருந்தனர்..
இப்பொழுது அவர்களது விளையாட்டில்
துவக்குகளும் சேர்ந்து விட்டன.
ஆம். முன்பு யாழப்பாணத்தில் பெண்
ஒன்று பிறந்தால் தாய்மார் பயப்படுவார்கள்.
சீதனம் சேர்க்க வேண்டும் என்பதால்.
ஆனால் இப்பொழுது எங்கு பார்த்தாலும்
மணமகன்கள் தான். எமது பெண்கள்
அவர்களுக்கு குத்தகைக்கு
விடப்பட்டுள்ளனர் ஆனால்
பத்திரிகைகளில் யாழ் மக்களின்
ஆடுகள்......கோழிகளை பலவந்தமாக
எடுத்துச்சென்று கொல்கிறார்கள் என்று
மட்டுமே தான் செய்தி வருகின்றது."

— ஆதரணிய தெவியன் வஹன்சே
ஹா
அந்தக்கார ராத்திரிய
குறுநாவலிலிருந்து.

"திலினாவுக்குத் தேவை பாலியல் சுதந்திரம். அதனை அவர் தமது படைப்புக்களின் மூலம் வெளிக்காட்டுகின்றார்" என்பது அவர் தொடர்பான இன்னுமொரு அப்பட்டமான விமரிசனமாகும்.


எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க பெண்கள் மத்தியில் இவரது படைப்புக்கள் பிரபலமாயுள்ளன. எனினும், துரதிருஷ்டவசமாக நமது அரச சார்பற்ற கட்டமைப்பின் கீழ் செயற்பட்டு வரும் பெண்கள் அமைப்புக்களின் வெளியீடுகளில் திலினாவின் படைப்புக்கள் தொடர்பாக எந்த அறிமுகமும் இடம் பெற்றதாக அறியக்கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆயினும், திலினா படைப்பு எனும் தளத்தில் சலிக்காது இயங்கிக் கொண்டிருக்கிறார், அவரது படைப்பு தொடர்பாக ஆர்வம் கொண்டவர்களுக்காக மட்டும் எனக் கூறின் தவறில்லை.

— ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்






மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்
கலாநிதி சி.மௌனகுரு
விபுலம் வெளியீடு
மட்டக்களப்பு
பக்கங்கள் — 664
விலை ரூபா 800

தமிழியல் ஆய்வுத் துறைக்கு ஒரு புதிய வரவு :

கலாநிதி சி.மௌனகுருவின்

# மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்

நாடகம் சார்ந்த தமிழ் ஆய்வியல்-துறைக்கு முக்கிய கவனிற்பிற்குரியதொரு நூல் அண்மையில் வந்துசேர்ந்துள்ளது. கலாநிதி சி. மௌனகுரு எழுதிய 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்', என்பதுதான் அவ்வாய்வு நூலாகும். (நாடக நெறியாளர், நாடக எழுத்தாளர், நடிகர் என்பவற்றோடு குறிப்பிடத்தக்க நாடக ஆய்வாளராகவும் விளங்கும்) கலாநிதி மௌனகுரு இந்நூலினூடாக மீண்டுமொரு தடவை தம்மை குறிப்பிடத்தக்க நாடக ஆய்வாளராக உறுதிப்படுத்தியுள்ளார் என்று கூறத்தோன்றுகிறது

மௌனகுரு அவர்களால் கலா-நிதிப்பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்-கலைக்கழகத்தில் 1983ல் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வு, 1998ல் நூலுருப்பெற்றுள்ளது என்பது ஈழத்துப் புத்தகப்பண்பாட்டின் பின்-தங்கிய நிலையினைச் சுட்டிக்காட்டு-கின்றதாயினும் குறிப்பிட்ட கால இடைவெளி நூலின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் எவ்விதத்திலும் குறைத்துவிடவில்லை எனலாம்

எட்டு அத்தியாயங்கள் கொண்ட இவ்வாய்வுநூலில் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்களை பெருமட்டாக (1) நாடகம் சார்ந்த சமயச் சடங்குகள் (2) வளர்ச்சிபெற்ற நாடகங்கள் (3) முன்னைய இருவகை நாடக மரபுகளுக்கும் இடைப்பட்ட நாடகங்கள் என மூவகையாகப் பகுப்பாய்வு செய்யும் ஆய்வாளர் அவ்வடிப்படையிலேயே அவை பற்றிய ஆய்வினை முன்னெடுத்துச் செல்கின்றார் ஆயினும், அவ்வடிப்படையில் மட்டும் அமைந்திருப்பின் இவ்வாய்வுநூல் நாடக ஆய்வாளர், நாடக ஆர்வலர் ஆகியோரது கவனத்தை ஈர்த்திருக்க-வியலாது. மாறாக, (உலகில்) நாடகத் தோற்-றம், (உலக) நாடக மரபுகள் (ஐரோப்பிய நாடகமரபு) ஆபிரிக்க மரபு, ஆசிய நாடக மரபு) தென்னாசிய, தென்கிழக்காசிய, இந்திய நாடகமரபு, இலங்கை - சிங்கள நாடக மரபு, தமிழ் நாடக மரபு எனப் பரந்ததொரு பின்புலத்தில் அறிமுகத்தைத் தந்த பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகம் பற்றிக் கூற முற்படுவது குறிப்பிடத்தக்கது இதனால், நாடக ஆய்வாளரும், ஆர்வலரும் பொதுவான மரபுசார் நாடகம் பற்றியதொரு விரிந்த பார்வையை - தரிசனத்தை - பெறும் வாய்ப்பு ஏற்பட்டுவிடுகின்றது. இவ்வொ-ளியில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றிய ஆய்வு அரங்கேறுகின்றமை பாராட்-டிற்குரியது. ஆய்வுநோக்கிலான மேற்குறித்த சிறப்பியல்பு தவிர, குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பியல்பும் காணப்படுகின்றது. சமூக, பண்பாட்டுப் பின்புலத்திலே இவ்வாய்வு நடைபெற்றுள்ளமையே அதுவாகும். சமூகப் பின்புலம் என்கின்றபோது மட்டக்களப்புச் சமூகம் - சாதிப் பற்றிய ஆய்வும் பண்பாடும் என்கின்றபோது, கோயில் சார்ந்த சமயச் சடங்குகள் பற்றிய ஆய்வும் (பரஸ்பரம் இவற்றிற்கிடையிலான தொடர்புகளும்) முக்கியம் பெறுகின்றன. இவற்றிற்கும் மட்டக்-களப்பு மரபு வழி நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றிற்கிடையான ஊடாட்டம் ஆய்வாளரால் எடுத்துக் காட்டப்படுகின்றது. இவ்வாறான நிலையில் இத்தகு ஆய்வு அணுகுமுறை, இவ்வாய்வினை நாடகவிய-லாருக்கு மட்டுமன்றி சமூகவியலாளருக்-குரியதொன்றாக உயர்த்திவிடுகின்றமை மனங்கொள்ளத்தக்கது

மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றிய முற்குறிப்பிட்ட மூவகைப் பகுப்பு முறைகளுள், 'நாடகம் சார்ந்த சமயச் சடங்குகள்' என்ற முதற் பகுப்புமுறை, அணுகுமுறை - தரும் நாடக ஆய்வுல-கிற்குப்புதியது என்றே கூறவேண்டும். சடங்கினடியாகவே (நாடகக்)கலை பிறக்கின்றது என்ற கருத்தினை ஆராய்ந்து நிறுவியவர் Jane Ellen Harrison என்பவர். (Ancient Art and Ritual, Londan, 1951) இதனை எடுகோளாகக் கொண்டு மட்டக்-களப்பு பிரதேச மக்களிடையே காணப்-படும் சமயச்சடங்குகளை ஆராய்வதன் மூலம் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்-களின் மூலங்களைக் கண்டு கொள்கின்றார் ஆய்வாளர். இவ்விதத்திலே குமார தெய்வச்சடங்கு, சிறுதெய்வ வணக்கங்-களுடன் சம்பந்தப்பட்டச் சடங்குகள், வீடுகளிலே நடைபெறும் சடங்குகள், மண்டூர் கோயிலில் நடைபெறும் சடங்குகள், திரௌபதி அம்மன் கோயில்களில் நடைபெறும் சடங்குகள் முதலியன ஆய்வுக்குட்படுகின்றன. எவ்வாறாயினும், மட்டக்களப்பு கோயில் சார் சடங்குகள் முதன்முறையாக இத்தகு ஆய்வுக்குட்படுகின்றமை காரணமாக, நாடக ஆர்வலர் மட்டுமன்றி ஈழத்து ஆய்வாளரும் முற்றிலும் புதியதான சமூக, நாடக, புலமைசார் அனுபவங்களுக்-காட்படுகின்றமை குறிப்பிடப்பட வேண்டியதே.

'வளர்ச்சிபெற்ற மட்டக்களப்பு மரபு-வழி நாடகங்கள்' என்ற பகுப்புமுறையில் வடமோடி நாடகங்களும், தென்மோடி நாடகங்களும் இடம்பெறுகின்றன. முன்னர் இவைபற்றிய உதிரியான சில கட்டுரைகள் வெளிவந்துள்ளனவே தவிர, பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவது போன்று, முதன்முதலாக இப்போது தான் ஆய்வுக்குட்படுத்தப்ப-டுகின்றன. ஆய்வின் எட்டு இயல்களுள் நான்கு இயல்கள் வட.மோடி, தென்மோடி நாடகங்கள் பற்றியன 'மட்டக்களப்பில் வழக்கிலுள்ள வளர்ச்சிபெற்ற தென்மோடி வடமோடி நாடகங்கள், மட்டக்களப்பு தென்மோடி, வடமோடி நாடக ஆசிரியர்-கள் நாடகத்திற் கையாண்ட உத்திகளும் படைத்த பாத்திரங்களும்' 'தென்மோடி, வடமோடி நாடகங்களிற் கையாளப்படும் தாளக்கட்டுக்களும் ஆட்டக்கோலங்-களும்', 'தென்மோடி, வடமோடி நாடகங்-களின் பாடல் வகைகள், ஆடை அணிகள், ஆடரங்கம் என்பனவே அவை. இவ்வாறு மட்டக்களப்பின் வளர்ச்சிபெற்ற மரபுவழி நாடகங்கள்' ஆழமான - விரிவான ஆய்விற்குட்படுத்தப்படுவது தமிழ் நாடக ஆய்வுலகில் இந்நூலிற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவத்தை வழங்கிவிடுகின்றது எனலாம்.

'மட்டக்களப்பின் நாடகம் சார்ந்த சமயச் சடங்குகட்கும் வளர்ச்சிபெற்ற தென்மோடி, வடமோடி நாடகங்கட்கும் இடைப்பட்ட நாடகங்கள்' என்ற பகுப்பு முறையினுள் பறைமேளக்கூத்து, மகுடிக்கூத்து (முதலாவது வகை, இரண்டாவது வகை, மூன்றாவது வகை என மூவகை மகுடிக் கூத்துக்கள்) வசந்தன் கூத்து என்பன அடக்கப்பட்டுள்ளன. இவை கூத்துக்களாகக் கணிக்கப்படுவதும் கவனிக்கப்படுவதும் முதன்முதலாக இப்போதுதான் என்று கருதுகின்றேன். ஏனெனில், மட்டக்களப்புத் தமிழகம் (1964) என்ற குறிப்பிடத்தக்க நூலினை எழுதிய வித்துவான் பண்டித வி.சீ.கந்-தையா அவர்கள் கூட, 'மட்டக்களப்பு நாட்டில் ஆடப்படும் கூத்துக்களை நாம் நோக்கும்போது அவை வடமோடி, தென்மோடி என்ற இருபெரும் பிரிவாய் இருப்பதை நாம் அறிவோம் (பக்.48) என்று குறிப்பிட்டாரே தவிர, மேற்கூறிய கூத்துக்கள் பற்றி கூறினாரல்லர். எனவே இப்பின்னணியில் இவ்வாய்வு நூலின் சிறப்பும் முக்கியத்துவமும் மேலும் அதிகரித்து நிற்கின்றது.

மேற்கூறியவாறு மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களை மூவகையாய்ப் பகுப்பாய்வு செய்து அவைப்பற்றிய ஆய்வில் ஈடுபட ஆய்வாளர் இறுதியாக அவற்றின் வளர்ச்சிப்படி நிலைகளைக் காணும் கடினமான முயற்சியிலும் ஈடுபட்-டுள்ளார். (1) ஆரம்ப நாடக வடிவமாக மகுடிக்கூத்து, பறைமேளக்கூத்து. (2) வசந்தன் கூத்து, (3) வடமோடி, தென்மோடி நாடகங்கள் என்றவாறு அவற்றின் வளர்ச்சிநிலை அமைகின்றது என்பது ஆய்வாளரது துணிவாகும்.

மேற்கூறியவற்றைவிட, மட்டக்களப்பு சாதி அமைப்பிற்கும் நாடக வடிவங்-களுக்குமிடையிலான தொடர்பினை ஆய்வாளர் இனங்கண்டு நிறுவமுற்-பட்டமை கடினமானதொரு முயற்சி-யாகின்றது. வடமோடி, தென்மோடி நாடகங்களின் தோற்றம் பற்றிய ஆய்வு முயற்சியும் அத்தகையதே. இவை மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றிய இவ்வாய்வின் முக்கியமான மையங்கள் என்பதிலும் தவறில்லை.

தவிர, இவ்வாய்விற்கு வலுவும் வனப்பும் சேர்க்கும் விடயமொன்றுண்டு. அதுதான், ஒவ்வொரு நாடகங்களினதும் மேடைமுறை, ஆட்டமுறை, ஆடை, ஆப-ரணம், ஆயுதம் என்பன பற்றிய விளக்கப் படங்கள் இடம்பெற்றுள்ளமையாகும். இத்தகைய விளக்கப் படங்கள், குறிப்பாக ஆட்டமுறைப்பற்றிய விளக்கப்படங்களை வரைந்து தருவதுதென்பது மிகுந்த சிரமத்திற்குரியதொன்றென்பதனை, இத்தகைய கள ஆய்விலீடுபட்டோரே உணரமுடியும்!

ஆய்வாளர் தமது கலாநிதிப் பட்ட ஆய்வினை எவ்வித மாற்றங்களும் மேற்-கொள்ளாது அவ்வாறே தரத்துணிந்தமை ஒரு விதத்தில் பாராட்டிற்குரியதுதான். அவ்வாறே தராதிருப்பதின் ஒருசில மாற்றங்களை (எடுத்துக்காட்டாக, 'மகு-டிக்கூத்து' என்ற தவறான பதப் பிரயோ-கத்தை மாற்றுதல், நான்காவதுவகை மகுடிக் கூத்துப்பற்றிக் குறிப்பிடுதல்) செய்-திருக்கலாம். ஆயினும், அத்தகைய மாற்றங்கள் மிகச்சிலவேயாம்.

சுருங்கக்கூறின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றிய இவ்வாய்வு நூல் ஈழத்து நாடக ஆய்வாளர், நாடக ஆர்வலர், சமூகவியலாளர் ஆகியோருக்கு மட்டுமன்றி தமிழகம் சார்ந்த அத்தகைய குழாத்தின-ருக்கும் மிகுந்த பயன் தரும் ஆய்வு முயற்சி என்பதில் ஐயமில்லை. அத்துடன் பொது-வாக எத்துறையிலாயினும் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் இன்றைய இளந்தமிழியல் ஆய்வாளருக்கும் செம்மையானதொரு ஆய்வுமுறைமை நோக்கி ஆற்றுப்படுத்தும் நூலாகவும் இந்நூல் அமைந்துள்ளது!

—செ.யோகராசா

# நிகழ்

பற்றிய

# இரண்டு கவிதைகள்......

முகம்தெறிக்க
விழி உதறி அழுகின்ற குழந்தையாக
சுழலும் காலத்தில்
புழுதியின் கால்கள் ஏறுகின்றன.
ஒவ்வொரு காலமும்
ஒவ்வொரு காலமாய் சுயம் மறைந்தழிகிறது.
மனிதர்களின் கண்ணீரும் பெரு மூச்சும் ஏக்கமும்
தனித்தனி முகங்களாகி அலைகின்றன
புழுதிப்படழிவுகளில் கால்கள் புதைய.

நீல வர்ணத்தை இழந்த வானம்
இனி எப்போதுமே தேவதைகளுக்கு
சிறகுகளைத் தரப்போவதில்லை.

மரணத்தை நினைவுறுத்தும்
புகைக்கும் புழுதிக்கும் சாம்பலுக்கும் பின்னால்
பிச்சைச் சிறுவர்கள் பரிகசித்தபடி நிற்கிறார்கள்
காலத்தை:
காலம்
புழுதியை விடவும் சாம்பலை விடவும்
புகையை விடவும் வேகமாய் சுழல்கிறது
அவர்களை நோக்கி .
அவர்களுடைய
கண்களின் ஆழத்தில் வாழ்க்கை கரைகிறது

1999 13 ஜனவரி

முடிவற்ற துயரத்திலும் பிரிவிலும்
காலம் என்னை அதன் விருந்தாளியாக்கி வைத்திருக்கிறது.
கோடி வருசங்களின் ஈரம் கசியும்
அந்தக் கல் மண்டபத்தின் மூலையில்
இறக்கைகளை ஒடுக்கியபடி காத்திருக்கிறேன்.
எனக்கு எப்போதுமே அறிமுகமில்லாத மனிதர்கள்
காலத்தின் மீது வடுவிழுத்தி வடு விழுத்திப் போனார்கள்
எல்லோரின் இறக்கைகளினடியிலும்
துப்பாக்கிகளினதும் கைக்குண்டுகளினதும்
நிழல்கள் வரையப்பட்டிருந்தன.
காலம்
என்னையும் மீதமிருந்த எனது மனிதர்களையும்
கல் மண்டபத்தின் உச்சி முகட்டில்
சுயத்தை மறைத்து நூறு தடவைகள் சாகடித்திருக்கிறது
தனக்குப் பரிச்சயமான காயங்களாலும் வலிகளாலும்.

காயங்களிலும் வலிகளிலும் துப்பாக்கிகளின் நிழல்கள்
மீண்டும்.... மீண்டும்...


கற்களில் உரசி உரசித் தீமூட்டக்கூடிய
நேற்றைய எனது சிறகினொலி எங்கே?
எங்கே எனது நிழல்
எங்கே எனது கனவுகள்
எங்கே எனது நிலம்

03 ஒக்டோபர் 98

போஸ்நிஹாலே

நன்றி - நூலகத்திட்டம்





## காவல் நிலையத்தை சுற்றி...

சரிநிகர் இதழ் 170ல் பரந்தாமன் எழுதிய தமிழ்த்தேசிய விடுதலை பஞ்சமரின் விடுதலையையும் உள்ளடக்குமா? என்ற கட்டுரையில் தாழ்த்தப்பட்டவர்கள் நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்க வேண்டும் என அம்பேத்காரை உதாரணம் காட்டியுள்ளார். இதன் மூலம் பரந்தாமன் எதைச் சொல்ல வருகிறார். பஞ்சமர்களை எப்போதும் பஞ்சமர்கள் என்று முத்திரை குத்தி வைத்திருப்பதை இவர் விரும்புகிறாரா? இந்தியாவில் பல்கலைக்கழகங்களிலும் தொழில்வாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடு செய்வது போல் இலங்கையிலும் செய்ய வேண்டும் என்கிறாரா பரந்தாமன். அப்படியானால், இனிமேல் பிறப்புச் சான்றிதழ்களில் ஒவ்வொரு வரும் இன்ன இன்ன சாதி என்று குறிப்பிட வேண்டும். அல்லது முற்காலத்தில் பெயர் வைப்பதுபோல் பெயரைக் கொண்டே சாதியை அடையாளம் காணக் கூடிய மாதிரி கந்தசுவாமி, கந்தையா, கந்தன் என்று பெயர் வைக்கவேண்டுமா?

பரந்தாமன் கூறியது போல், தேசிய அமைப்பிற்குள் அவர்கள் கரைக்கப்பட்டபடியால் தான் இன்று ஓரளவுக்கேனும் சாதி அமைப்பு நீங்கியுள்ளது. பரந்தாமன் கூறுவதைப் பார்த்தால் முன்பு இருந்தது போல் சாதியை அடிப்படையாக வைத்து கிராமங்களும் குறிச்சிகளும் ஒவ்வொரு சாதியினர்க்கும் ஒவ்வொரு கோயிலும் உருவாக்கப்படவேண்டுமா? புலிகள் அமைப்பிலும் இந்நிலை தொடர்வதாகவும் பரந்தாமன் குறிப்பிட்டுள்ளார். சாதி அமைப்பிற்கெதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வந்தவர்கள். ஒரு சமயம் புலிகளின் ஆட்சிக் காலத்தில் சாவகச்சேரியிலிருந்த தமிழீழ காவல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கு ஒருவர் தடி ஒன்றைத் தோளில் வைத்துக் கொண்டு "சாதி இரண்டொழிய வேறில்லை" எனக்கூறியபடி காவல் நிலையத்தைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தார். அங்கு காவல் நிலையப் பொறுப்பதிகாரியாயிருந்தவரிடம் என்ன பிரச்சினை என்று கேட்டேன். அதற்கு அவர் இவர்கள் தான் வரணியில் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலுக்குப் போகவிடாமல் தடுத்தவர்கள் இவர்களுக்கு இது தான் தண்டனை என்றார். அத்துடன் இவர்களுக்கு இப்போது சிரட்டையில் தான் தேனீர் வழங்கப்படுகிறது என்றார்.

பரந்தாமனின் கூற்றுப் படிபார்த்தால் கம்யூனிஸ்ட் கட்சியினர் எம். சி. சுப்பிரமணியத்தைக் காட்டி இவர்தான் உங்களுடைய பிரதிநிதி என தாழ்த்தப்பட்டவர்களிடம் கூறியது போல் அல்லது அமிர்தலிங்கம் நாங்கள் உடுப்பிட்டித் தொகுதியில் இராசலிங்கத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் நியமித்துள்ளோம் என்று கூறியது போல் புலிகளும் தலித் ஒருவரை தளபதியாக நியமித்து இவர்தான் உங்களின் பிரதிநிதி தாழ்த்தப்பட்டவர்களின் சார்பில் இவரை நாங்கள் தளபதியாக நியமித்துள்ளோம். எனவே நீங்களும் தமிழ் ஈழப்போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள் என பிரச்சாரம் செய்யவேண்டுமா? ஏற்கெனவே புலிகள் இயக்கத்தில் தலித்துக்கள் பலர் உயர் பதவிகள் வகிப்பது பரந்தாமனுக்குத் தெரியாது போலிருக்கிறது. நான் இங்கு பெயர்களைச் சுட்டிக்காட்டி அவர்களை தலித்துக்கள் என்று முத்திரைக் குத்த விரும்பவில்லை.

இறுதியாக, பஞ்சமருக்கென தனியான அமைப்பு உருவாக்கப்பட்டால் அது அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதற்கு மாறாக, அவர்களை இனம் காட்டுவதாகவே அமையும் என்பது எனது அபிப்பிராயம்.

- எழுவான், யாழ்ப்பாணம்

## நான் ஐ.தே.க. ஆதரவாளன் என்பது அப்பட்டமான பொய் !

ஏப். 29 - மே 12, 1999 சரிநிகர் பக்கம் 19ல் 'அரசியல் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்' என்ற தலைப்பிலான செய்திக்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

கடந்த 17 வருடங்களாக நான் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளன் என்றொரு அப்பட்டமான பொய்யை அச்செய்தியில் எழுதி எனது உண்மையான திறமைக்கான பதவி உயர்வு கேவலப்படுத்தப்பட்டிருக்கிறது. உண்மை இதற்கு மாறானது. கடந்த 1977 பொதுத்தேர்தலில் நான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரானவன் என்ற காரணத்திற்காக இன்னும் பல தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களோடு சேர்ந்து எமது பிரதேசத்திலிருந்து மிகத் துார இடமான சிலாபம் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அரசியல் பழிவாங்கப்பட்டேன். இதன்பின்னர் பல மேன்முறையீடுகளையும் போராட்டங்களையும் முன்வைத்து சொந்த ஊருக்குக் கூட வர முடியாமல் கல்முனைப் பிரதேசத்திற்கே இடமாற்றம் கிடைத்தது.

1988ம் ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்விற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் பதவியைப் பெற்றாலும் எனது சேவை மூப்பிற்குரிய அதிபர் தரம் ஒன்று மறுக்கப்பட்டு வந்ததற்குக் காரணம் நான் ஐ.தே.கட்சிக்கு எதிரானவன் என்பதே. இதனை தற்போதைய அரசாங்கம் அமைத்த ஆணைக்குழு முன் நான் ஆவணங்கள் மூலமாக நிரூபித்ததைக் கொண்டு எனக்குத் தரம் 1 அதிபர் பதவி வழங்கப்பட்டதைப் பொறுக்காமல் நான் பல்லைக் காட்டி எடுத்த பதவியாகக் கேவலப்படுத்தப்பட்டுள்ளேன்.

புதிய கல்விச் சீரமைப்பில் 1ந்தர அதிபர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வழங்கப்படுவதை அறிந்து எனது கல்வித் தகைமை, நிர்வாகத்திறமை, ஏனைய மொழிகளில் எனக்குள்ள பாண்டித்தியம் என்பவற்றை முன் வைத்து உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்ததைக் கொண்டு எனக்கு உ.க.ப.பதவி வழங்கப்பட்டது. இதையும் கேவலப்படுத்தும் வகையில் அச்செய்தியில் எழுதியிருப்பது என்மேலுள்ள பொறாமையைத் தவிர வேறென்னவாக இருக்க முடியும்.

நான் லேக்ஹவுஸ் நிருபர் பதவியைப் பல போராட்டத்திற்கு மத்தியில் பெற்றேன் என்பதும் என்னைக் கேவலப்படுத்தும் ஒரு செயல்தான். இப்பிரதேசத்திலிருந்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் எழுதும் ஒரே எழுத்தாளன் நான் தான். லேக்ஹவுஸ் நிருபர் பதவிக்கும் உரிய முறையில் விண்ணப் பித்ததைக் கொண்டு மும்மொழிகளிலும் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றி அதில் திறமையாகத் தேறியதன் காரணத்தினால் எடுத்த எடுப்பிலேயே எனக்கு வாழைச்சேனை குறுப் நிருபர் பதவி வழங்கப்பட்டது. இதுவும் தான் பொறுக்காமல் நான் கேவலப்படுத்தபட்டேன்.

எனது பன்மொழி ஆற்றலையும், மொழி பெயர்க்கும் திறனையும் நேரடியாக என்னோடு பழகி பல கருத்தரங்குகளில் என்னை மொழிபெயர்க்கும் சேவையில் ஈடுபடுத்தி எனது எழுத்துத் திறமைகளையும் கண்டதனால் சகோதரர் சுனந்த தேசப்பிரிய அவர்கள் "யுக்திய" பத்திரிகைக்கும், என்னைத் தானாகவே நிருபர் பதவிக்கும் நியமித்துள்ளார்.

இத்தோடு எனது சமூகசேவைக்காக "மேர்ஜ்" தேசிய சபையிலும் எனக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

எனது பத்திரிகைச் சேவை ஒரு செய்தியும் எழுதாத பத்திரிகையாளர் என்ற அடைமொழியில் எள்ளி நகையாடப்பட்டுள்ளது. எழுதியிருப்பவருக்கு வேற்று மொழி தெரியவில்லை போலும். அதனால் தான் இன்று வரை எனது செய்திகள் சிங்கள, ஆங்கில தினசரிகளில் வெளியாகிக்கொண்டிருப்பதை அவரால் பார்க்க முடியவில்லை.

கபொத (சா/த) பரீட்சை மேற்பார்வையாளர் விடயமும் அப்பட்டமான பொய் என்பதை நிரூபிக்க கடந்த வருடம் நடைபெற்ற கபொத(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழி வினாத்தாள் திருத்தும் நியமனம் எனக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

இவை அவ்விதழில் எழுதப்பட்ட குறிப்புகள் தவறானவை என நிறுவப் போதுமானவை என நினைக்கிறேன்.

எம்.எல்.அலியார், வாழைச்சேனை

## சரஸ்வதி மகா வித்தியாலயமும் வேதனைக்குரிய விடயமும் !

சரிநிகர் இதழ் 170இல் "சாதி வெறி வேண்டாம்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையைப் படித்தேன். ஜீவிதன் இந்தத் தகவல்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இக்கட்டுரையை எழுதுகிறேன்.

புஸ்ஸல்லாவை சரஸ்வதி மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாக அங்கீகரிக்கப்படவில்லை என்பது உண்மையிலே வேதனைக்குரிய விடயம். அதை மறுக்கவில்லை. அதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர்களும் இணைந்து சரஸ்வதி மகா வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த வேண்டும் என்று கூறி கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ராஜரட்ணத்திடம் 30.03.99 அன்று ஒரு மகஜரை கையளித்தனர். இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் தான் இந்தப் பாடசாலையையும் சிபார்சு செய்வதாக உறுதியளித்தார்.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ராஜரட்ணம் அவர்கள் தனது சொந்த பணத்தில் அண்மையில் சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு உபகரணங்களை கையளித்தார். அந்த கையளிப்பு வைபவம் நடந்த அன்று பழைய மாணவர்கள் சார்பாக நானும் சென்றிருந்தேன். அது மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் தனக்கு ஒதுக்கப்படும் நிதியில் கணனி, தொலைக்காட்சி, மின்சார உபகரணங்கள், பேன்ட் வாத்தியக் கருவிகள் போன்றவற்றையும் பெற்றுக் கொடுத்ததோடு பாடசாலைக்கு ஒரு கலாசார மண்டபம் இல்லையென பெற்றோரும், பழைய மாணவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசாங்கத்திடம் சிபாரிசு செய்து பாரிய மண்டபம் ஒன்றைக் கட்டித்தந்துள்ளார். இந்த மண்டபம் கூட "இராஜரட்ண மண்டபம்" எனப் பேர் சூட்டப்பட்டுள்ளது. இந்த அளவு சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் மீது அக்கறையுடன் செயல்பட்ட இவர் எப்படி திட்டமிட்டு பழி வாங்கிவிட்டார் என்று ஜீவிதன் கூறமுடியும்.

அத்தோடு ஒரு பாடசாலைக்கு அதிபரை தெரிவுசெய்யும் பொறுப்பு கல்விக்காரியலயத்தினுடையது. இதில் சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் உள்ள அதிபருக்கு எந்த ஒரு கல்வித்தகைமையும் இல்லையென்ற ஜீவிதன் திட்டவட்டமாக கூறுவதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். சரஸ்வதி அதிபருக்கு பின்வரும் தகைமையுள்ளது என்பதை ஜீவிதனுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். BED, Dip in School Management, Spical maths Trained, Sri Lanka Principal Service Grade 2, Dip in Mas media. இதைத் தவிர, கலைத்துறையிலும், நாடகத்துறையிலும் அதிகம் ஈடுபாடுடையவர். சிறந்த பேச்சாற்றல் உள்ளவர். ஆகவே, ஒருவரின் தோற்றத்தை மட்டும் வைத்து அவருக்கு உள்ள தகுதி திறமைகளை எடைபோட்டுவிட முடியாது.

இது தவிர அக்கட்டுரை தொடர்பாக சரஸ்வதி அதிபரிடம் நான் சென்று கேட்டபொழுது, தான் இந்தப் பாடசாலையில் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் தகுதியான ஒரு அதிபர் சரஸ்வதி மகா வித்தியாலயத்தை ஏற்று நடத்த முன்வந்தால் தான் வேறு பாடசாலைக்குச் செல்ல தயாராக இருப்பதாக கூறினார். எனவே இவ்விடயம் விவாதத்துக்குரியது.

-சந்தனம் சத்தியநாதன்

சரிநிகர்
சந்தாதாரராக
சேர்ந்து கொள்ள
விரும்புவோர்
சந்தா தொகையான
ரூபா 300ஐ காசுக்
கட்டளை அல்லது
காசோலையாக
MIRJE என்ற
பெயருக்கு எடுத்து
அனுப்பவும்.
மே 31ஆம்
திகதியுடன் விசேட
விலைக்கழிவு
சலுகை
முடிவடைகிறது.

## ஆண் மரம்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொங்கும் அலையெனச் சனங்கள் திரண்டனர். வனவாசம் சென்றவர் தேவதையின் அருள்பெற நாடேகினர். அவள் மின்னல் சிரிப்பில் ஆண் வர்க்கம் கிறங்கிற்று. கதைகளில் அவள் பேசப்பட்டாள். இலக்கியத்தில் பதியப்பட்டாள். இசையோடு இசையானாள். வெள்ளைச் சிறகடிக்கும் வெண்புறாக்கள் எலும்புக் குவியலிடை உயிர்பெற்று பறந்தன. அவள் நெஞ்சுப் பொதியில் சமாதானம் கசியுமென மரம் கூறுகிறது. அதன் புராணம் ஓத எருமைக் கடாக்களும், அன்புக்கவிஞரும் தோன்றினர். சில ஆன்மீக வாதிகளின் உடைமாற்றும் மறைவிடமாய் மாறிற்று.

சமயத்தில் மரமேறிக் கந்துகளில் தொங்கிய வால் முளைத்த ஷைத்தான்கள் வேதம் ஓதின. மரமோவெனில் தேவதையை சுற்றிப் படர்ந்தது. நீரூற்றிய தரிசு நிலத்தாரை விற்றது. அடகு வைக்கையில் நாம் இழந்ததை மீட்டுவர என்றது. சனங்கள் அனலிடைப் புழுவாயினர். மரம் புது மெருகுடன் துளிர்த்தது. அதன் கிளையிலிருந்து அரச மரம் முளைத்தது. அதன் அடிவேரில் புத்தரும் தோன்றினார். அவர் பாதத்தில் மரம் பூக்களைத் தூவிற்று. அதற்கு மலர்களில் பக்தி அதிகமாயிற்று.

மண்ணறைகளிலிருந்தேரை எழுப்பி அமரர்களின் இறக்கைகளில் இருத்தி கவிதை படித்தது தேரர்களின் சிலையெழும்ப கல் நட்டியதுடன், அவர்களின் மாடத்தில் தன் கிளைகளை பரப்பி நிழல் சொரிந்தது. விருட்ஷத்தின் எழுச்சியில் கவிஞர்கள் பிறந்தனர். அவர்கள் பொற்கிழியும், விருதும் பெற்று புலவராயினர்.

தேவதைக்கான தர்ஹாக்களில் கந்தூரி கொடுத்தது ஷைகுமாரின் உமிழ்நீரை கண்களில் ஒத்தி கிருபைபெற்றது. தன்னிலை விளக்கம் தந்தது.

மரம் செல்லுமிடமெங்கும் தோரணங்கள் ஆடின. பூஜைகள் நடந்தன. அதனைச் சூழவும் வேலிகள் முளைத்தன. இப்போது அது இராஜமரம், பிள்ளையை வீசிவிட்டு, பிள்ளை கழுவிய நீரை பிள்ளையெனக்கொஞ்சும் மரத்தின் தத்துவத்தை தூக்கிப்பிடிக்க பேனாச் சித்தர் பிறந்தனர். அவர்களுக்கும் எழுதுவதைத் தவிர வேறுவழியில்லை. இப்போது மரம் அனுபவத்தில் தேறிற்று.

யானை போலவும், தேவதைபோலவும் பேச வினோத பாஷைகளைக் கற்றுக் கொண்டது. தேவதையின் மாமிசவெறிக்கு, கைதூக்கி இரத்தம் கொடுத்தது. வன்முறையின் மொழி அதற்குப் புரிந்தது.

குர்ஆனின் தாளில் கஞ்சா சுற்றியது. மினாராக்களில் சாராயம் விற்றது. அதர்மங்களுக்கெல்லாம் நியாயம் கற்பித்தது. எனினும், காலத்தைவிட விஷமக்காரன் யாருண்டு? அது தருணம் பார்த்து தன் குழியுள் மரத்தை வீழ்த்தியது. எல்லோரையும் எல்லாநேரமும் ஏய்த்துப்பிழைக்க காலம் பொறுக்குமா என்ன?

அண்மைக்காலமாக மரக்கந்துகள் இற்று இலைகள் உதிர ஆரம்பித்துவிட்டன. அடிவேரில் சூபிஸப்பசளையிட்டும், நுனிக்கந்தில் அத்வைத உரம் விசிறியும் பயன் தரா உதிர்வு மரத்தை அரித்தது. உவர் நிலத்தில் அதன் அந்திமம் நிச்சயமாயிற்று. பசளைகள் திருடிப்போட்டும் பயனற்ற கையறு நிலை.

எதிர்காலம் அதன் முன் மரணித்துக் கிடந்தது. கூவி விற்க, சமூகமற்ற அதன் தனித்துவக்கோலம் கண்டு, அறிஞர்கள் அழுதனர். அடகுவைக்கப்பட்ட மக்களும் மீட்பாரின்றி நெஞ்சிலடித்துக் கதறினர். மறுபடியும் அவர்கள் அநாதையாயினர். கொத்தடிமையின் அவஸ்தையை உணர்ந்தனர். தரிவு நில மக்களோ வறண்ட காற்றை நெஞ்சில் நிறைத்தபடி ஏகாந்தமாயினர். எப்போதும் போல் மரங்களற்ற சூன்யவெளி அவர்களின் முன் வியாபித்திருந்தது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## வளரும் தீ

இனவாத அலைகள் மீளப்பெரிதாக வீசத்தொடங்கியுள்ளன. வீரவிதான என்ற சிங்களப் பேரினவாத அணியின் சமீபகால செயற்பாடுகள் பற்றிய செய்திகள் அச்சம் தரும் வண்ணம் அதிகரித்து வருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியாக அரசாங்கம் முன்வைத்ததாகக் குறிப்பிட்ட தீர்வுப்பொதி கிடப்பில் போடப்பட்டுப் பல காலமாகி விட்டது. இப்போது செத்துப் போய்விட்ட அந்தப் பொதிபற்றி யாராவது நம்பிக்கையுடன் பேசுகிறார்கள் என்றால் இந்த உலகில் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஒருவர் தான்.

அவரைத் தவிர மற்றெல்லோரும் அதைப்பற்றிப் பேசுவதையே விட்டுவிட்டார்கள். அவர் மட்டும் தான் அதற்கு ஒரு சில திருத்தங்களுடன் ஏதாவது செய்ய முடியும் என்று நினைத்து அமைச்சர் பீரிசுடனும், கதிர்காமருடனும் பேசுகிறார்.

மற்றப்படி அது மறந்து போன கதையாகி விட்டது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை என்று புலிகள் விடுத்த கோரிக்கையும் யாரது கண்களையும் திறந்ததாகத் தெரியவில்லை.

வடக்கிற்கு சமாதான யாத்திரை செய்யப் புறப்பட்டுள்ள பலமதத் தலைவர்களின் அணி புலிகளும் அரசும் பேசுவது அவசியம் என்று வலியுறுத்தி வருகின்றது. இந்த யாத்திரையை முன்னின்று நடாத்தும் கும்புருகமுவே வஜிரநாயக்க தேரோ தாம் விடுவிக்கப்படாத புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் சென்று அவர்களுடன் பேசி வருவோம் என்று நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றார்.

புலிகளுடனான இந்த மதத் தலைவர்களது சந்திப்பிற்கு ஜனாதிபதியின் ஆதரவும், அனுமதியும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இவையனைத்தையும் மீறி இனவாத ரீதியிலான அச்சுறுத்தும் சம்பவங்களும் நடந்து வருகின்றன.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற "பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின்" ஆர்ப்பாட்ட ஊர்வலம் இந்த நிலைமையின் தாற்பரியத்தை எடுத்துக் காட்டுகிறது.

'புலிகளுடன் பேசக் கூடாது', 'மனிதப்படுகொலை பயங்கரவாதிகளான புலிகளுடன் பேச வேண்டாம்' போன்ற பதாகைகளுடன் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. பெரும் திரளான பௌத்த பிக்குகள் அடங்கிய இந்த ஊர்வலத்தில் பிரதான முழக்கமாக இருந்தது: அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப் போகக் கூடாது என்பதே.

இந்தப் போக்கின் மனநிலையை பிரதிநிதித்துவப்படுத்துவது போல அஸ்கிரிய பீட மகாநாயக்கரான பலிப்பானே சந்திரானந்த தேரோ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு புலிகளுடன் அரசு போக வேண்டும் என்று சொன்னதாக வெளிவந்திருந்த செய்தியை மறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

தமிழ் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக எல்லாக் கட்சி வேறுபாடுகளையும் மறந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்பதே அவரது விருப்பம் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

ஆக, ஒரு புறம் சமாதானப் பேரணி நடந்து கொண்டிருக்கையில், மறுபுறத்தில் இத்தகைய இனவாத நடவடிக்கைகள் தீவிரமாக திட்டமிட்ட முறையில் வளர்ந்து வருகிறது தெளிவாகிறது. (இவ்விதழின் சில பக்கங்களில் இவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன.)

இந்த நிலைமை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வுகாணும் முயற்சியை மேலும் மேலும் பின்தள்ளுவதுடன், நாட்டில் யுத்த நிலை தொடர்ந்து நீடிப்பதற்கே உதவி செய்யும்.

ஆயினும், புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தைகளுக்கான கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு ஆறு மாதங்களாகி விட்ட பின் இப்போது சர்வமதத் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்காக எடுக்கும் முயற்சியின் போது ஜனாதிபதி ஆதரவு தெரிவித்திருப்பது முக்கியமான ஒரு திருப்பமாகும்.

அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகமும், தேசிய சமாதான சபையும் சேர்ந்து நடாத்திய கருத்துக் கணிப்பு ஒன்று சமாதானபூர்வமான அரசியல் தீர்வுக்கே மக்கள் (66வீதம்)அதிக ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள். யுத்தத்தில் ஈடுபட்டபடியே அரசியல் தீர்வில் ஈடுபடுவதை மிகச் சிறுபான்மையினரே (7வீதம்) ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று கூறுகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி யதார்த்த நிலையை உணர்ந்து, பேச்சுவார்த்தைக்குப் பச்சைக் கொடி காட்டியிருப்பதை வரவேற்க வேண்டும்.

ஆனால், அவர் இதை வெறுமனே ஒரு தேர்தல் பிரசாரத்திற்கான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த முயலாமல் நேர்மையாகச் செயற்படுத்த முயலவேண்டும்.

அல்லாவிட்டால், வளரும் இனவாதத் தீ நாட்டை இரண்டாவது முறையாகவும் தகனத்துள்ளாக்கி விட அதிக காலம் எடுக்காது!


# குடா நாடு :
## இராணுவ சிவில் நிர்வாகத்துக்கு புலிகளின் சவால் !

குடா நாட்டில் அரச திணைக்களங்கள், செயலகங்கள், அரசசார்பு கூட்டுத்தான நிலையங்கள் அனைதத்தும் தொடர்ந்து ஸ்தம்பி மதிலையை அடைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ நிர்வாக சேவையினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டதற்காமையவே இந்த ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிர்வாக சேவையினால் செந்தூரன் என்பவரால் ஒப்பமிடப்பட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளூராட்சித் திணைக்களம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரசாங்க அதிபர் செயலகம் ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் இராணுவ சிவில் நிர்வாகம் நடப்பதாக தாம் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், அந் நிர்வாகத்திற்கு எத்தகைய ஒத்துழைப்பும் வழங்கக் கூடாது என்றும் கோரப்பட்டுள்ளது. படைத்தரப்புடன் ஒத்துழைத்து செயற்படுபவர்கள் மீது நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே 10ம் திகதியிடப்பட்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் யாழ்ப்பாண குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் யாழில் நிலை கொண்டுள்ள படையினருக்கான விநியோகத்தை மிகவும் நுட்பமான முறையில் சிறிலங்கா அரசும் இராணுவத் தரப்பும் செய்து வருகிறது. சிவில் நிர்வாகம் என்ற பெயரில் நுட்பமாக திட்டமிட்டு யாழ் மக்களுக்கான விநியோகம் என்ற பெயரில் இராணுவ விநியோகத்தைச் செய்து வயுருகிறது. இந்த வகையிலேயே எரிபொருள் விநியோகம் நடைபெற்று வருகிறது. இதனை நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. முன்னைய காலங்களில் நடைபெற்றது போன்று மக்களுக்கான எரிபொருள் விநியோகம் நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். எனவே யாழ் குடாநாட்டில் தங்கள் கூட்டுத்தாபன நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தவும் இவ்வறிவித்தலை மீறிச் செயற்பட்டால் எரிபொருள் நிரப்பு நிலையகம் மீது நாம் தாக்குதலை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும்.' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க அதிபர் செயலகத்திற்கு அதே தேதியில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத் தில் "யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் தொடர்பாக ஏற்கனவே பல


தமிழீழ நிர்வாக சேவை
TAMILEELAM ADMINISTRATIVE SERVICE

தடவைகள் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் படைத்தரப்பின் அடாவடித்தனங்களும் தமிழ் குழுக்களின் தேசத்துரோக நடவடிக்கைகளும் அதிகரித்தே வருகின்றன. இந்நிலையில் வெறியுகை ஏமாற்றும் வகையில் சிவில் நிர்வாகம் என்ற போலிப் பிரசாரத்தை செய்து வருகின்றது. எனவே இனி வருங்காலங்களில் யாழ் செயலகமாயினும் சரி பிரதேச செயலகங்களோ வாரத்தில் செவ்வாய், வெள்ளி தவிர்ந்த நாட்களில் மட்டும் இயங்க வேண்டும். இவ்வறிவித்தலை மீறி செயற்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் செயலாளர்கள் மீதும் நாம் கடுமையான தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டி வருமென்பதை அறியத் தருகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாக சேவை விடுத்துள்ள இந்த அறிவித்தல் இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நிர்வாக சேவைக்கு ஒரு பலத்த சவாலாக அமைந்துள்ளது.

படைதரப்பினர் ஊழியர்களை சேவைக்குப் போகுமாறு அறிவித்திருந்த போதும் அந்த அறிவித்தலுக்கு அமைய யாரும் கடமைக்குச் சென்றதாக தெரியவில்லை.

புலிகளால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள் ஓரிரு அலுவலங்களுக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் ஏறக்குறைய எல்லா அலுவலகங்களும் வெளளி அன்று ஸ்தம்பித்திருந்தன. இந்த நிலைமை செவ்வாயன்றும் பெரிதாக மாறவில்லை என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கிடைக்கின்றன.

இராணுவத்தினது பூரண கட்டுப்பாட்டிலுள்ள, அரசாங்கம் சொல்வது போல சிவில் நிர்வாகம் நடக்கின்ற ஒரு பிரதேசத்தில் ஒரு துண்டுக் கடிதமூலம் நிலைமையை ஸ்தம்பிக்கச் செய்யும் ஆற்றல் இன்னமும் புலிகளுக்கு இருப்பது அரசாங்கத்தின் வெற்றி எத்துனை தூரம் பூரணமானது என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எது எவ்வாறாயினும் ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு இல்லாத வரை நாட்கடமை என்ற நடைமுறை குடாநாட்டு மக்களுக்கு அவர்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெரும் தடையாகவே இருக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை.

குடாநாட்டில் உண்மையான அதிகார பலம் யாருடைய கையில் இருக்கிறது என்பதை பரீட்சிக்கும் பலப்பரீட்சையில் புலிகளும் இராணுவமும் இறங்குமாயின் நிச்சயமாக அதனால் மோசமாக பாதிக்கப்படப் போவது அப்பாவி மக்களே என்பது வெளிப்படை!

# பாங்கொக் மாநாடு:
## திம்புக் கோரிக்கையின் அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தை

சர்வதேச தமிழர் ஒருங்கிணைப்புக் கழகம் நடாத்தும் நான்காவது மாநாடு இம்மாதம் 23ம், 24ம், 25ம் திகதிகளில் பாங்கொக் நகரில் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. தமிழ்மொழி, தமிழர் நலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இம்மாநாட்டில் கட்டுரைகள் படிப்பிக்கப்பட்டதாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது. தமிழ்நாடு அமைச்சர் கலாநிதி தமிழ்குடிமகன், மலேசிய அமைச்சர் கலாநிதி சாமிவேலு, இ.தொ.கா. தலைவர் தொண்டமான் உட்பட பன்னிருவரை காப்பாளர்களாகக் கொண்ட இந்த அமைப்பு தனது நோக்கங்களில் ஒன்றாக பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களைகளிடையே ஒரு ஐக்கியத்தைக் கொணர்வதற்கான ஒரு அமைப்பாக இயங்குவதென்று தெரிகிறது.

இதேவேளை அம்மாதம் 21ம், 22ம் திகதிகளில் கனடாவிலுள்ள கார்லேட்டன் பல்கலைக்கழகம், ஒட்டாக பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஏ.சி.டி.எஸ். என்ற மாணவர் அமைப்பினால் 'தமிழ்த் தேசியமும் இலங்கையில் சமாதானத்திற்கான தேடலும்' என்ற தலைப்பிலும் ஒரு சர்வதேச தமிழர்கள், சர்வதேசப் புலமைப் புலமைப்பாளர்கள், அரசியல் தலைவர்கள், கனேடிய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் இலங்கை இராணுவம் தமிழ் மக்கள் மீது இளைத்துவரும் வன்முறைகள் தொடர்பாக அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டது. இம்மாநாட்டில் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமாயின் அது திம்புக் கோரிக்கைகளின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கவேண்டும் என்று மீள வலியுறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.

இம்நாட்டில் "நாம் தமிழ்த் தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள்", "எமது பாரம்பரியபூமி தமிழ் ஈழம்", "எமக்கு புறக்கணிக்கப்பட முடியாதென சுயநிர்ணய உரிமை இருக்கிறது", "மற்றெல்லாத் தேசங்கட்கும் தனிநபர்க்கும் இருப்பது போன்று சமத்துவமான உரிமைகள் உண்டு" போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இம்மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தை நோக்கி பின்வரும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

- தமிழீழம் என்று அறியப்பட்ட தமிழ் தாயகத்திலிருந்து எல்லா ஆயுதப் படைகளும் திருப்பி அழை!
- தமிழீழத்தில் வாழும் மக்களை அவர்கள் நசுக்குவதை உடனடியாக நிறுத்து!
- உணவு, கல்வி மற்றும் பொருளாதார தேவைகட்கான அவசியமான பொருட்களை எடுத்துச் செல்வதற்கான தடையை நீக்கு.
- எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
- புதை குழிகளை தோண்டுவதைப் பார்வையிட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களை அனுமதி!
- இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்தை அனுமதிப்பதன் மூலமாக தமிழர்களும், சிங்களவர்களும் தத்தம் தாய் நிலத்தில் சமாதானமாக இருக்க வழிவகு!
- தமிழர் தாயகப்பகுதிக்கு சர்வதேச தொடர்புகளை தடையின்றி வர

வெளியீடு: ச பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு: பிறின்ற் இன், இல. 07, கெட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.

27.04.1999